பாலைதிரிபாலைசிறுநாகப்பூவும்-பார்தனிலுள்ளசெண்பகப்பூதேவதாரு
ஞ், சிலமுடன்வகைக்குவொருகழஞ்சிகொண்டு - செவ்விளநீர்விட்ட
ரைத்துச்சேர்த்துக்கொண்டு, பாலதிலேபடியிரண்டுகூடவார்த்துப்-ப
தமாகவேவடித்துமுழுகினக்கா, லாலமென்றநீர்விஷங்களெல்லாந்தீ
ரு-மப்பனேகண்குளிர்ச்சியாகுந்தானே. (௧௮௯)

ஆகவேகுழம்பொன்றுசொல்லக்கேளு-அழகானகொடிக்கொழு
ஞ்சியருநான்காகும், வேகமுள்ளகடுக்காயோர்பலமதாகும்- வேம்பா
னகருவேம்பினிலையவ்விதந், தாகமுள்ளகளிப்பாக்குமதுமவ்விதந் த
ருவாணபசுவின்பால்குறுணியாகுஞ், சாகவேயவித்ததனைப்பிழிந்துக்
கொண்டு-தனியானதேனதிலேபடிதான்வாரே. (௧௯௰)

வார்த்தெரித்துக்குழம்பாக்கிவழித்துவைத்து -வாள்விழியினீள்
புருவம்புழுக்கள்புண்கள், தீர்த்திவிடுமண்டலந்தான்பூசும்போது -தி
சழ்விழிநோய்பலவும்போந்தீர்க்கமப்பா, பார்த்திடவே மேகராசாங்க
மானுற்-பாரிலுள்ளநோய்களுக்குசஞ்சீவியாகுஞ், சாற்றியதேமுந்நா
றும்வயித்தியராசாங்கத்-தாரணியிலுள்ளவருக்கமிர்தமாமே. (௧௯௧)

ஆனந்தவாயுகன்மவரலாறு.

ஆமென்றவானந்தவாயுகொண்டா-வரிதப்பாதீராதுஅதிககன்மந்
தாமென்றவுயிர்களைத்தான்கட்டித்தூக்கி-தாரணியிற்போட்டறுத்தச
ண்டாளத்தாற், கோமென்றகோவுநீர்குடிக்கும்போது ருழல்வைத்து
வுண்டையிட்டகுலப்பாவந்தான். ஓமென்றவுயிர்களைத்தான் குடலைக்
கீறி-யுறும்பாவங்கொண்டதினுலுதித்ததாமே. (௧௯௨)

கன்மநிவர்த்தி.

உதித்ததொருகருமந்தான்தீரவென்று-லுற்றகொடிமரமொன்று
வுயர்குடந்தானென்று,பதித்ததங்ககிரீடமொன்றுகுடைதானென்று
பரவுசொர்ணங்காலையொன்றுசப்பிரமஞ்சமொன்று, கதித்தசொர்னகி
ள்ளையொன்று-ஆலவட்டமொன்றுகையிலெடுத்தாடுகின்றவம்மானை
யொன்றுததித்தசிவபூசைகுருபூசையோடு- சுகமாகச்செய்திடவேது
டர்ந்தகன்மம்போமே.

அவிழ்தவகை.

போனபின்புசெய்வதற்குமருந்துகேளு-புகலுவேன்காந்தமதுப
லந்தானென்று, ஏனமுள்ளகெந்தியதுபலந்தானென்று- எலுமிச்சம்
பழச்சாற்றாற்சாமமாட்டி, வானமுடன்கெசபுடமாய்மூன்றுபோடு-வ
ளமாகவிந்தடைவாய்புடத்தைப்போடு, ஞானமுடன்கொடிவேலிவே
ரின்பட்டை-நலமாகப்பலமொன்று தூக்குத்தூக்கே. (௧௯௪)

தூக்கியேபிடித்துத்தா ளாக்கிக்கொண்டு துடியாகலந்திடைக்கு
க்கொந்திசேர்த்து,தாக்கியேமுலைப்பாலாலாட்டிச்சாமஞ் சார்வானவெ
ண்கருவாற்சாமம்ரண்டு, பாக்கியமாயோட்டில்வைத்து மேலோடுமூ
டிப்பாங்கானசிலைமண்ணும் பரிவாய்ச்செய்து, வாங்கியேகெசபுடமாய்
ப்போடுபோடு மைந்தனேமுருக்கம்பூப்போலாம்வில்லை. (௧௬௫)

வில்லைதனைப்பொடிசெய்து வைத்துக்கொண்டு விறுணமுன்மரு
ந்துங்கூடக்கூட்டி, எலலையுள்ளவெருக்கிலையின் பாலாலாட்டியிச்சை
யுடன்பில்லைசெய்து ரவியிற்காய்ந்தால், நல்லதென்று கெசபுடமாய்
நாட்டிச்செய்து நலமாகவெடுத்துப்பார்கருஞ்சிவப்பாய்க்காணுந்தொ
ல்லையென்றுவந்தநோய்தீரவென்றாற் சுகமாகப்பணவெடைதான் றே
னிற்கொள்ளச், சொல்லரிதுமண்டலமே கொள்ளும்போதில் தோன்
றுகின்றகுடல்வாத மண்டவாதம். (௧௬௬)

அண்டமென்றவாதமொடுவாய்வுகுன்ம மனேகநாள்சென்றதொ
ருகெண்டவிக்கம் பண்டுள்ளவுதரத்தில விக்கம்வாய்வு பாரித்தவயிறு
முதல்கரைத்துபோடுஞ், சண்டமாருதமான வாயுவத்தான்சண்ணும
டாமேமேலறுவண்ணம்பாரு, கண்டதொருபத்தியமாய்க் கொள்வாயா
னுற்கனமானநோய்திருங் கர்மம்போமே. (௧௬௭)

கர்மமதுநிவர்த்தியைநான் முன்னேசொன்னேன் காசினியிலெ
ளியவருமவலியவருமுண்டு, தர்மமதுசெய்வதற்குப் பொருள்தானே
து-தாரணியிலுள்ளவற்குச் சாதிவண்ணம், வாமமென்றகர்மமது நிவ
ர்த்திசெய்ய வரிசையுடன்சொல்லுகிறேன்வணங்கிக்கேளு, தர்மமோ
கமாகாதுகோபமாகா துடியாகப்பலனையுமே தூஷணிக்கலாகா. ()

ஆகாதவழியொன்றுஞ்செய்யலாகாவாதித்தனமஸ்காரமன்னதா
னம், போகாதசிவபூசையங்கப்பிரதட்சணம் புகழானவாரமொடுபக்ஷ
ம்நோன்பு, சாகாதவெட்டெழுத்து மஞ்செழுத்துஞ் சாதகமாய்செப
ஞ்செய்ய வோமஞ்செய்ய மோகமாய்சிவஸ்தலங்கள் தெரிசித்தேத்த
ல் முக்கியமாய்தீர்த்தங்கள் பலவுமாடே. (௧௬௯)

ஆடியதோர்நந்தவனம் புஷ்பம்வைக்க வரசடிக்கும்நந்திக்கும் நீ
ரேபெய்ய, தேடியதோ ரபிஷேகமநெய்விளக்கு சிவவோமந்தர்ப்ப
ணங்கள்தீர்த்தவாச, மூடியதோர்பலவுயிர்க்கு முபசரித்தலுற்றதாம
மிவ்வகையேயுண்மையாக, நாடியேகொள்வோர்க்குப்பாவமேது நா
ள்தோறுஞ்செய்தகர்மம் பரிகாரமாமே. (௨௱)

ஆமப்பாநாள்தோஷம்நித்தியகர்மமங்கனியாசமுதலாம் பிராணா
யாமம் ஓமப்பாகருமத்தால்செய்தபாவ முயராதுபெரியோர்கள் பாத

ம்போற்று, நாமப்பாத்ருமத்தில் மனதுவைத்து நடந்துகொள்ளக
மங்கள் நாடாதோடுங், காமப்பால்மிஞ்சாதேகருமமிஞ்சும் கருமமிஞ்
சுங்கன்னியனைப்பாராதேகசடுபோக்கே. (௨௱௧)

## பஞ்சலோகசெந்தூரம்.

போக்கவேவகையொன்றுசொல்லக்கேளு புகழ்பஞ்சலோகமது
பொடிதானவாங்கி, சேர்க்கவேவகையொன்று கழஞ்சியொன்று திற
மாகசுத்திசெய்துவொக்கக்கூட்டித் தாக்கவேபஞ்சபாஷாணம்நீருக்த
யவாகவகையொன்று சழஞ்சியொன்று, தீர்க்கவேசுத்திசெய்துவொ
க்கக்கூட்டித் தெளிதனைக்கநீர்சொல்வேன தெளிந்துபாரே. (௨௱௨)

பாரப்பாபூநீற்றிற் சாரங்கூட்டிப் பனியில்வைக்கச்செடநீராம்நீ
ைவாங்கி, நீரப்பாவிட்டரைத்து வில்லைதட்டி நிசமானகுக்குடமாம்
புடத்தில்வைத்து, ஆறப்பாவாறியெடுமறுபடியுமரைத்து அப்பனே
மூன்றுபுடந் திறமாய்ச்செய்து, காரப்பாகணபதிக்குப்பூசைசெய்துக
ட்டாகப்பரணிதனிலடைத்துவையே. (௨௱௩)

வைத்தபின்பு திரிகடுகுமதுரமோமம் வாழ்கரிய்சிரகமுங் கார்
கோலோடு, கெய்ததொருவாலுழுவைகாரெள்ளுங்கூட்டி நிசமான
கொடுவெலியமூக்கறுச்சேங்கொட்டை, வைத்தபின்புவகையொன்று
பலமொன்றுகும வளர்பறங்கிச்சக்கைச்சூரணமிதற்குச்சமனாய்.மொ
த்ததொருகையான்சாற்றதுதானுழிவீறுபிரமிச்சாறுநாழிகூட்டே.()

கூட்டியேபால்நாழிமூன்றுமாகக் கொதிக்கையிலேசூரணத்தை
யதனிற்போட்டு. நாட்டியேபசுவினெய்பனைதேன்காலாய், நலமான
விட்டுமெழுகானபோதுகூட்டியேவழித்துவைப்பாய்பிங்காலுள்ளே
சுகமானசெந்தூரங்குன்றிகூட்டி, மாட்டியேமண்டலந்தான்கொள்ளு
மபேதில்-மகத்தானசூலைபதினெட்டுந்தீரு, மாட்டியேகுட்டமொடு
கிரகதிதீரு, மாட்டியேகுட்டமொடுகிரகதிதீரு·மட்டைவண்டுபெற்கடி
யுமகன்றுபோமே.
(௨௱௫)

போமென்றதின்னமொருவகையைக்கேளு-புகழானமுருக்கம்பூ
ச்சாறுநாழி, யாமென்றமுருங்கைப்பூச்சாறுநாழி·யழகானசெம்பரத்
தம்பூச்சாறுநாழி, கோமெனறவரசினபூச்சாறுநாழி-கொடியதோ ரெ
ருக்கினபூச்சாறுநாழி, வாமென்றமல்லிகைப்பூச்சாறுநாழி-வளர்நந்தி
ப்பூச்சாறுவரிசைகேளே.
(௨௱௬)

வரிசையுடனென்றுக்கிவகையைக்கேளு-மனோசிலையு மரிதாரங்
கெவுரிவெள்ளை, துரிசுடனேகுதிரைப்பல்கெந்திலிங்கம் துடியானரச
ம்வீரம்பூரங்கூட்டி பரிவானவகையொன்றுபலந்தானென்று·பழச்சா

ற்றிலூறவைத்தெடுத்துக்கொண்டு, அரிதானபழச்சாற்றாலாட்டுஆட்டுஅதுதனையுஞ் சாறுலற்றவாட்டினுக்கால். (௨௱௭)

ஆட்டினுல்மெழுகாகுமதனைவாங்கி யடைதட்டிக்காயவைத்துஓட்டில்வைத்து, மூட்டியனல்கெசபுடமாய்க்கட்டிப்போடு முறையானகரிசாலைச்சாற்றிலாட்டி, தாட்டிகமாய்பின்பொருக்கால் புடத்தைப்போட்டு-தானுறியெடுத்தாக்கால்நீறுமபாரு, நாட்டியேபழச்சாற்றுலாட்டிவில்லை நலமாகவோட்டில்வைத்துப் புடத்தைப்போடே. ()

புடந்தனிலே காவிமண்போற்சிவந்துபோகும் புனிதமாஞ்செப்பதனில்வைத்துக்கொண்டு, செடந்தனிலே வநததொருகுலையாறுங்கிரந்திகுட்டந்தீராதசில்ந்திப்புண்க, ளிடத்தில்வருமனாயாப்பு பவித்திரமாலை யிடைக்குதடாபிளவையென்றதெல்லாந்தீருங் குடந்தனிலேவைத்தநீர்போலேவந்த கொடியதொருசிலவிஷங்கள் குமுறிப்போமே. (௨௱௯)

## பூவகைலேகியம்.

போமென்றவகையொன்று சொல்லக்கேளு புகழ்வேம்பின்பூவுடனேபுங்கின்பூவு, யாமென்றவில்வப்பூநெல்லிபபூவு மரியதோகரைப்பூவிலாரிப்பூவு, மோமென்றசெண்பகப்பூ சிறுநாகப்பூ வுத்தமனேகுங்குமப்பூ கிராம்புபத்திரி, நாமென்ற புரசம்பூ கொத்தமல்லிநலமானகாமப்பூகஞ்சாப்பூவே. (௨௱௰)

பூவானமாம்பூவுமத்தப்பூவும் புகழானகரிசாலைப்பூவினோடு, காவானபொற்கையான் பூவினோடு-கனமானபொற்கொன்றை யமுக்கிருப்பூவும். காவான தாதுளமபூகாட்டத்திப்பூ நல்லகருவேலம்பூ வாவாரைப்பூ-தேவானவனச்சம்பூ கோங்கின்பூவு திருவானநெஞ்சிற்பூமாதளையின்பூவே. (௨௱௰௧)

தளையானபூவெல்லாஞ்சூரணித்து தயங்கமிர்தசர்க்கரையுஞ் சமனாய்ச்சேர்த்து, விளையானதென்னமபூவும்பனையின்பூவும விளங்கவேபூவெல்லாஞ்சமனாய்க்கொண்டு, இளையாததேனதிலேயரைப்படிதான்சேரு யியலானநெய்யதிலேயிரண்டுவாரு, இளையாமலடுப்பேற்றிலேஇயமபோற்றி லேகியம்செய்துஎத்தி பீங்கானிற்பதனமபண்ணே. ()

பண்ணியேபுன்னைக்காயளவதாகப் பரிவாகவிருநேரந்தின்றாயானு லெண்ணிலாபபிறமேகமெனுட்புருக்கி யிருமலென்றமேகவகைநீரிழிவதெல்லாங்-கண்ணிலேகாணமலோடிப்போகுங் கனமானவுட்சுறங்கள்நாவரட்சி, புண்ணிலேயெழுந்தகெந்தாழியே டு புகைச்சுலொடுயிளைப்புகடுப்புளைச்சல்போமே. (௨௱௰௩

உலைச்சல்போம்பித்தமதுவோடிப்போகுமுலர்ந்தவுட லுதிரந்து
ஆறுமூறுந், தலைச்சவித்து தம்பனமாய் பிலத்துப்போகுந் தாதுவிர்
த்தியுண்டாகும் பெருப்பாடுதீரும், விளைச்சலென்றகுன்மமெல்லாம
றந்துப்போகும் வீரியந்தான்மெத்தவடா வெய்மைசொன்னோ,மனை
ச்சதொருகருமத்தை நிவர்த்திசெய்து அறமானதருமத்துக் காளாய்ச்
சேரே. (௨௱௰௪)

சேர்ப்பதற்குஇன்னமொருமருந்துகேளு செங்கழுநீர்க்கிழங்கு
டனேகொட்டிநெய்தல் நீர்ப்படர்ந்தவல்லிதாமரக்கிழங்கு நிலப்பனை
யுமமுக்கருநீர்வள்ளியாகும், பார்ப்படர்ந்தகன்னாரிமுத்தக்காசு பகர்ந்
தவதிவிடையமொடுகச்சேலஞ்சுக்கு, கார்படர்ந்தகடவிறஞ்சி பறங்கி
ப்பட்டை கருதியதோர்கூகைநீறுங்கஞ்சமோரிதழே. (௨௱௨௫)

ஓரிதழின்மூலமொடு வில்வமூலமுற்றதொரு மாதளையாவாரை
மூலம, பாரிலுள்ளகருவாழைக் கிழங்கினோடுபகர்கருணைவெருகினோ
டுமலைதாங்கிமூலஞ், சிரிதழின் கற்றாழைசங்குமூலஞ்சித்திரமூலத்து
டனேயதிமதுரங்கோஷ்டம, வேர்சிறந்தவகையெல்லாம் பலமொன்
றாக வில்லைவில்லையாய்நறுக்கி வெயிலில்வைத்து நீர்சிறந்துகாய்ந்தவு
டனிடித்துத்தூளாய் - நெய்படிதான்கொதிக்கையிலே சூரணத்தை
சேர்ந்தே. (௨௱௨௬)

நேர்ந்தபின்புதேனதிலேநெய்யிற்பாதி நேராகவிட்டிளக்கிமெழு
கதுபோல்வாங்கி, சாந்தமுளலேகியததைபதனம்பண்ணு சாந்தகமா
ம்புன்னைக்காயளவதாகத், தேர்ந்தபின்புயிருநேரங்கொள்வாயாகில் தீ
ராதகிராணிவகைதீருந்தீரும் வாய்ந்தரத்தமலசலங்கள் கடுப்புமூலம்
வயிற்றுளைச்சல்வாய்வுமுதல்சிரணங்கள், கூர்ந்தபித்தநீர்தரிப்புப்பிற
மேகங்கள் குடிப்போகும் லேகியத்தைக்கொண்டபோதே. (௨௱௰௭)

கிராணிக்குலேகியம்.

கொண்டபின்பு இன்னமொருவகையைக்கேளு கூவிளத்தின்பி
ஞ்சுடனேமாதளையின்பிஞ்சும், விண்டதோ ரத்தைப்பிஞ்சாத்திப்பி
ஞ்சும்-வெண்மருதம் பிஞ்சுடனேயகத்திப்பிஞ்சுங், கண்டதோர்கடுக்
காயின் பிஞ்சுடனேநல்ல கதலிப்பிஞ்சுடன் வண்டைப்பிஞ்சினோடு,
தண்ட-மிழ்சேர்புளியப்பிஞ்சுடனேநல்ல தக்காளிவித்துடனே தகரை
ப்பிஞ்சே. (௨௱௰௮)

பிஞ்சானமாம்பிஞ்சுங்கோவைப்பிஞ்சும் பெருவேம்பின்பிஞ்சு
டனேமுசுட்டைப்பிஞ்சும், பஞ்சானநெல்லிப்பிஞ்சாரிச்சம்பிஞ்சும்
பகர்தாமரைப்பிஞ்சும்பனிச்சைபிஞ்சும், நஞ்சானமாதளைபின்பிஞ்சு

வகூடநலமானவகைக்குவொருபலமாய்வாங்கி,தஞ்சவேயிடித்ததனை
ன்மபோலாக்கிசுகமானநல்லெண்ணெபசுவிசெய்யே. (௨௱௰௯)

நெய்யானவகைவகைக்குப்பலமிரண்டும் நேரானதேனதிலே ய
ளைப்படியுமாகச், செய்யவேகற்கண்டுநாலுபலமாகுஞ்-சீரகஞ்சுக்கதி
மதுரம்வகைக்குஒருபலமாய், மெய்யாகச்சூரணித்து அதனிற்சேர்த்
து-விருதாகக்குழம்புபோற் பண்ணிக்கொண்டு, கையானகறண்டியி
லோர்பலமாய்க்கொள்ளு-கயரோகங்கிராணியதிகாரம்போக்கே. ()

போக்கென்றபோக்கெல்லா மெடுபேட்டோடும்-பொல்லாதகடுப்
புடனேயிரத்தம்போகுக், தாக்கென்றமூலமண்டியுள்ளேவாங்குக்-தா
துவிர்த்தியுண்டாகுக்தாகந்தீரு, மூக்கென்றசத்திவிக்கலெங்கேபோச்
சு-உடல்வாட்சிகனரோகமெங்கேபோச்சு, தேக்கென்றகாலகதிகைய
சதியெங்கே-தேகத்திவில்லாமலோடிப்பேர்ச்சே. (௨௨௧)

ஓடிவிடுஞ்சயமீளைபிருமல்காச-முற்றரத்தபித்தமொடுபிறமேக
ங்கள், நாடியதோர்நீர்க்கடுப்புகல்லடைப்பு நலமாகுஞ்சதையடைப்
பும் நன்றாய்த்தீரும், கூடியதோர்பெரும்பாடுமுள்ளுறுக்கி கொண்ட
தோரெலும்புருக்கி யெரிவுகாந்தல், நீடியதோர்நெஞ்செரிவுங் கைகா
ல்காந்தல்-கிசமாகத்தீருமடா பித்தம்போச்சே. (௯௨௨)

சுரங்களுக்குக்கலிக்கம்.

போச்சென்றதின்னமொருமருந்துகேளு-புங்கம்வித்துசங்கம்வி
த்துபுடலம்வித்து, ஆச்சென்றஆத்திவித்துஅகத்திவித்து- அதிகமாம்
பேய்ப்பீர்க்கும் பேய்ச்சுரையின்வித்தும், பூச்சென்றதகரைவித்து க
ரிப்பான்வித்து-பொருந்துமாவாரைவித்துமருதம்வித்து, வாச்சென்ற
தவுரிவித்துதில்லைவித்து-மகிழம்வித்துபுல்லாமணக்குமுத்துமாமே ()

முத்தானநேர்வாளமிளகுகூட்டி-முதலானசம்பீரச்சாற்றாலரை
த்து, கத்தானவாட்டினுடபித்துங்கூட்டிக் -கலந்தரைத்துக்கண்ணிவி
டவெள்ளளவுதானும். பத்தானவெற்றிலையின் சாற்றிலுரைத்திட்டா
ல்-பலசுரங்கள்பேய்ச்சுரங்கள் பயித்தியங்கண்மாலை. சுத்தானசன்னி
யொடு குமரகண்டன் சுருதியாமஞ்சனத்தின்சுருக்கம்பாரே. (௨௨௪)

சுருக்காகக்கண்ணிலிட்டுக்கண்கோபித்தாற்சொல்லுவேன்சோ
ருதயிர்பிசைந்துகட்டு தருக்காகக்கற்றாழை சோறுசீரகமுந்தான்பி
சைந்து பிழிந்துகட்டில்கண்வெப்புந்தீரு முருக்காகவின்னமொருசே

திகேளுமுனையாதசேதியெல்லா முரைத்திட்டேனுன் பொருக்காத
கோபுமுண்டோவுலகத்துள்ளே புதுமையிந்தசாஸ்திரத்தைப் போற்
றிக்கொள்ளே. (௨௨௫)

## குமரித் தைலம்.

கொள்ளவேவகையொன்று சொல்லக்கேளு குமரியுடசாறென்
றுகொடுப்பைச்சாறென்று-கள்ளமில்லாக்கரிசாலைச் சாறுபடியொன்
று காயானகீழ்க்காயினெல்லிச்சாறென்று மெள்ளவேபடியொன்று
விஷ்ணுகாந்தி விளங்குசந்திரகாந்திரசம் படியமொன்று - தள்ளவேப
டியொன்றுதாழைவிழுதுச்சாறு சார்வாகப்படியொன்று நீர்முள்ளிச்
சாறே. (௨௨௬)

முள்ளிரசம்படியொன்றுமுசுமுசுக்கை மூளையானசாறென்று
ஃப்பப்புடல்தானென்று-வள்ளியென்றநீர்வள்ளிச் சாறுபடியொன்று
வருகின்றசெம்முள்ளிச்சாறுபடியொன்று வுள்ளியென்றவீறுள்ளிச்
சாறுபடியொன்று ஆறுகின்றவல்லாரைச்சாறுபடியொன்று-வெள்ள
ரியின்சாறென்றுகுமிழஞ்சாறென்று விதமானதூதளைச்சாறென்று
தானே. (௨௨௭)

ஒன்றானகருப்பஞ்சாறென்றுவில்வத் தூறுகின்றசாறென்று க
ண்டங்கத்திரி-நன்றானபிரமிச்சாறுபடி தானென்று-நலமானகஞ்சாவி
ன்சாறுபடியொன்று-வென்றானபழச்சாறுபடி தானென்று-வெற்றிலை
யின்சாறென்று புளியிலைச்சாறென்று கன்றானசெருப்படியின சாறு
படியொன்று கருவேமபினிலைச்சாறுபடி தானென்றே. (௨௨௮)

படியானபசளைரசம்படி தானென்று பகருகின்றபுளியாரைச்சா
றுபடியொன்று-குடியானதுளசிரசம் படி தானென்று கூர்மிளகுதக்
காளிச்சாறுபடியொன்று-வடிவானவித்தையெல்லாம்வடிகொண்டொ
க்க வகையானதாழிக்குளொன்றாய்வார்த்து - மடியாதபால்நாழி யிள
நீர்நாழி வைத்துவிட்டுக்குழம்பானவாறுகேளே. (௨௨௯)

வாறுகேள்நெய்யதனிற் படி தான்வாரு வரிசையாய்தேனதிலே
யதனிற்பாதி-கூறுகேள்மதூரஞ்சீரகம்வெட்பாலை கோஷ்டமுடனேல
மதிவிடயஞ்சுக்கும்-வேறுவெள்ளைக்குந்திரிக்க மிளகுதிப்பிலி வீறு
ளவகையொன்று பலமொன்றாகுஞ் சூரணித்தப்பாகுதனிற்சொல்ல
கேளு-சுறுக்கானநெற்பொரியுங் கற்கண்டும்வேண்டே. (௨௩௰)

வேண்டியேவகையொன்றுபலமொன்றாகவெற்றியுள்ளதிரிபலையும்
பலமொன்றாகும்-தாண்டியேசூரணித்ததைத் தூவிக்கிண்டி சதிரானமெ

மூர்த்துபோலவாக்கிவைத்து, ஊட்டியேகணபதிக்குப் பூசைசெய்து ஒருநாளைக்கிருகோமுறவாய்க்கொள்ள, பூண்டதொருக்ஷயரோக மிருமல் பதினறும்போராடமினைப்பினைமந்தாரகாசம். உகக

காசமென்றசலகாசம்பித்தகாசம் காந்தசிலேற்பனகாசம் வாதகாசம்நாசமென்றரத்தபித்தஞ்சத்தியுளமாந்தை-நற்குவளை விப்புருதிரத்தகாசம், பாசமென்றமருந்திடுநல்முதலாயுள்ள - பண்டுள்ளபிணிசமுமண்டைச்சூலை, வாசமென்பிறமேசங்கிராந்திசூலை- மண்டைதரிக்கின்றபித்தந்தலைசுழற்றல்மயக்கம். உகஉ

மயக்கமொடுபித்தமெல்லாமெங்கேபோச்சு-வாதமொடுசேர்சிறப்புமாண்டுபோச்சு, திடக்கமுடனஸ்திசுரம்வெப்பும்போச்சு-சிரசில்நின்றபித்தமெல்லாஞ்சிதறிப்போச்சு, தயக்குண்டசரீரத்தின்வாட்டிபோச்சு சரீரமதுதூவித்துத்தளுப்புமாச்சு சுயிக்கியமென்றபுத்தியெல்லாம்கர்புத்தியாச்சு-தாதுவித்தையாமிதுவேயறிந்துகொள்ளே. உகங

அறிவானபெரியோர்கட்கிந்நூல்வேணு- மறிவுகெட்டவுலுத்தர்களுக்காகாதென்றுங், குறியாகநினைவுவைத்துக்கன்மந்தீர்ததுக் குவலயத்தில்மருந்துசெய்யிற்குருவவனேயாகும், மறிவானமனத்தோர்க்குமருந்தாகாது - வஞ்சகம்பொய்யற்றோர்க்குமருந்துவேண்டாம், நெறியான வயித்தியன்றன்மனதுநொந்தால்-நேர்ந்தநோய்தீராது நினைவில்லையே

நினைவிலேவைப்பதென்னகுருவின்பாதம்-நிச்சயமாஞ்சிவன்பாதந்தேவிபாதம் கனவினிலுமறவாதேயொருநாளுந்தான்- கருமாந்தமிலலையடாநோயுமில்லை, சினமானதாசாதுபுத்திசொன்னேன்-சேதிமானுனைக்காலறிந்துகொள்வான், மனதிலேதெளிவானல்முத்தியுண்டாம்-வஞ்சகமொன்ருகாதுவாசிபாரே. உகச

வாசியினல்மோக்ஷமதுவந்துபோச்சு மருந்தினற்றேகமதுவலுத்தும்போச்சு, பூசையினற்சிக்கதுவுமற்றுப்போச்சு- புலவருக்குமிந்தமுறைபுகலப்போமோ, தேசியென்றகுளிகையினற்கெவனமாச்சு -சித்தியென்றபெபாச்சுசிவயோகத்தால். தாசியெனறபெண்மேலேமோகமானற்-சாற்றியதோர்கற்பமெல்லாந்தவறிப்போச்சே. உகரு

தவறுமவின்னமொருசேதிகேளு- சாதகமாயின்னமொருமருந்துசொல்வே, நவரத்தினம்பவளங்களுஞ்சிரசமுய்வங்கம் நலமாகவங்கசழஞ்

சியுருக்கிச் சேர்த்து, சவையாகுங்கலுவத்திற்பொடித்துக்கொண்டு-சம்
பிரச்சாறுலேயளைப்பாய்ச்சாமல், சவையாகப்பொற்றலையின்சாற்றாற்சா
தங்கட்டாசவில்லைசெய்துகாயக்கண்டே, ௨௩௭

கண்டதனைப்பொடிசெய்துஇனடக்கிடையேகெந்தி - கலந்தவூரத்
துக்கும்பியிலேகருதியேத்தி-யண்டசற்குச்சீலைபைந்துசெய்துபின்புப
ரிவாகவாலுகையிலெரியெண்சாமங்- தொண்டடனேயெரித்தபின்புசலா
கையிட்டுசோதித்தாலருணநிறந்தோன்றிற்றூ லண்டர்பிரானறமுக
ற்குஞ் சணபதிக்குவர்ச்சித்துத்தீமாற்றியாறவைவே, ௩௨௮

ஆறலையத்துசெந்தூரமுடைத்துப்பார்த்து அம்மியிலேபொடிசெ
ய்துபரணிதனில்டைத்து- நீறவைத்தசெந்தூரம் பணவிடைதான்கொ
ள்ளநீர்ச் சிறுப்புகல்லடைப்புஞ்சதையடைப்பு, மூறவைத்தநீரிழிவுங்
கிரந்திசூலைபுறுதியாங்குட்டமொடுவாதநீர்கள், தேறவைத்தசரீரவலிகு
டுவீக்கந்தேனிலே கொண்டிடவேசித்தியாமே. ௨௩௯

சித்தியாந்தயிலமொன்று திறமாய்ச்சொல்வேன் சென்னையெண
ணெபுன்னையெண்ணெபுங்கனெண்ணெ-முத்தியாம்வேப்பெண்ணெனள்ளி
னெண்ணெமுனையானகுருந்தெண்ணெயோரண்டத்தெண்ணெ -சத்தியா
ந்தேங்காயினெண்ணெயோடுதனிப்பசுவினெய்புடனேயாட்டுனெய்யும்
வெத்தியாம்பன்றியினெய்மயில்நெய்யோடுவிரிவானமீனெய்யும் விரிய
னுடனெய்யே, ௨௪௰

நெய்யானசாரையினெய்வகையொன்றுக்கு நினை வாகவரைப்படி
யாய்நிசமாய்ச்சேர்த்து-கையானநாகத்தின் கண்டத்தோடுகதித்தநல்ல
மூசுறுமுட்டைகம்பிளியுங்குக்கில்-மையானவரிச் சுருளுமமுங்குமாமை
மயிலிரகுங்காக்கைக்கண்தேளரணையோடுமெய்யான முயலுடுபுமானை
க்கொம்புமிக்கபல்லியாட்டின்கொம்பெருமைக்கொம்புஞ்-செய்யவுங்கா
ண்டாமிருகக்கொம்பெருமைக்கொம்புஞ் செம்புலியின் தோலுடனே
செந்நாய்மண்டை-, ௨௪௧

பண்டையென்ற மனுஷர்தலைகலையின்கொம்பு லருகுதிரைக்குள
ம்புடனேமந்நனத்தை, கண்டதொருவிலாங்கின்தோல்மசதைமீன்தலையு
ங்காமருபியின்தலையும்புறாவினெச்ச, மூண்டதொரு மிளகுசுக்குவெள்
ளுள்ளியோடுவுறவானபருந்தின்முட்டையூர்க குருவிமுட்டைவண்டா
னகழுதைமண்டையுடும்பினுட்சிரசு வலுத்தநின்றகுதிரைமண்டைவ
சம்புநாகணமே, ௨௪௨

கனமானவிவைவெல்லாம்வகையொன்றுக்குகழஞ்சாகம்பொடித்
தந்தவெண்ணெயிலேபோட்டு நிணமானவெண்ணெதனைப்பத்துநாட்செ

னுக்திசேமாகமெழுகுபதங்கனில்வடித்து, கணமானகணபதிக்கும்வயிரவர்க்குங் கருக்துடனேபூசித்துகடத்தில்வைத்து - குணமாகவேணுமென்றுற்சரீரத்திலிட்டுக்குடித்திடவேகாண்டியெண்ணெகுணத்தைக்கேளே. ௨௪௩

கேளடாகுமரகண்டனென்றவலியஞ்சுங்·சொடிதானபிறவீச்சுசன்னிபதின்மூன்றும்-காளடாசென்றதொருவாதமெண்பதுவும் நடுநடுங்கியோடுமடா குட்டமொடு குறைநோய் - தூளடாதூள்படுத்துப்போடுமிக்கத் தயிலஞ்சொல்லார்கள்பெரியோர்களுபரசத்தின்சூட்சஞ்சூடாமெய்க்கடுப்புகருட்டுச்சட்டுந் துறவானபுண்புரைகள்வெட்டுக்குத்தே. ௨௪௪

குக்கென்றகழலையொடுபெருங்கால்விக்கங் கூசைவலிமுறிவுகைகால்குதிரைக்கால்முறிவு - மற்றதோசெலும்பெல்லாமுறிப்போகு மசையாதபிடிப்புகட்டுத்தெறிக்கும்பாரு- செத்ததொருகைகாலுப்பிலமுண்டாகுஞ்சித்திபெற்றதயிலமடாதிறமாய்ச்சொன்னேன்·பத்தினின்றபற்றெல்லாம்விட்டுப்போகும் பத்தியமாயித்தயிலம்பரிந்துகொள்ளே.

கொள்ளவேயின்ன மொருசேதிகேளு - கூறனவழிஞ்சில்வேர்கொன்றைவேரும்-வெள்ளெருக்கின்வேருடனேசித்திரமூலம் வெண்புரசம்வேருடனேசிவனார்வேம்பு, மெள்ளவேகாஞ்சுரைவேர் புரசம்வேரும்வெண்ணொச்சிவேருடனேவில்வவேருங்- கள்ளவேயகிலோடுதேவதாரங் கழறுகின்றசந்தனமுங்காஞ்சுரைவேரோ. ௨௪௬

வேரானமருதோன்றியிசங்கின்வேரும் வேம்பின்வேர் சதூரக்கள்ளிவேருங்கூட, ஏரானதேகதான்வேர்வசம்புமாகுந்தான்வகையாய்வெவ்வேறாய்த்தறித்துலர்த்தி-சீரானபானைதனிலிட்டுமூடி சேர்க்கவேகுழித்தயிலஞ்சிறக்கவாங்கி·பார்த்தனிலேவெவ் வேறேதயிலம்வாங்குபருத்தபுங்கின்வேர்தயிலம்படியேவாங்கே. ௨௪௭

வாங்கியேவகைதனக்கோரரைப்படியாம்விதம்வாகானபாண்டத்துளொன்றாய்விட்டு, நீங்கியேபோகாமலொருபலங்கர்ப்பூரம் நிறையாகக்காச்சியேவைத்துக்கொண்டு- வோங்கியேசரீரத்திலெல்லாம் பூசிவுடன்வந்தவாதமெல்லாமோடிப்போகும் மேங்கியேகுட்டமெல்லா மெடுபட்டோடுமிசைகெட்டவலியனைத்துமேங்கிப்போச்சே. ௨௪௮

போச்சென்றதயிலத்தைரசத்திற் குத்திப் பொங்கியதோர் சுடுசோற்றில்வைத்தாயானால், ஆச்சென்றசூதமதுகுளிகையாகுமச்சூதம் வங்கத்திரளைவாங்கும்·பேச்சென்றவெள்ளியதுபத்துமாற்று போரான

சூதத்தைசெந்தூரத்தால்-மூச்சென்றவெள்ளியிலேபத்துமாற்று மூக ண்டகுளிகையிதுவாடுமாட்டே. ௨௪௯

ஆட்டினுடவமூரியொன்றுகோமூத்திரமொன்று மாணையின்றன்மூ ரியொன்றுபுரவியொன்று-நாட்டிலுள்ளகுறும்பாட்டி நீர்சானொன்றுந ரிநீரொன்றுபெருமைநீசொன்று-தாட்டிகமாய்வகைக்கு வொருபடி தான்வாங்கி தன்னுக்குள்வெடியுப்புமிந்தப்போடு- மூட்டியேவளையலு ப்புங்கறியுப்போடு மூதண்டவமூரிவியப்புமூருவியுப்பே. ௨௫௰

உப்பென்றவீரமொடுதுரிசிபூர மூரமுடனேவகைக்குக்கால் பல மேகூட்டு-அப்பென்ற சத்திச்சாரமெவாச்சாரந்தா னன்னமென்றபே தியொடுவகைக்குவொருபலமா-யொப்புடனேபொடித்திட்டு வொன் றுய்க்காச்சியுறவானபெழுகதுபோலுண்டைசெய்து- தப்பென்றவோ ட்டில்வைத்துச்சீலைசெய்துசார்வாகமூழப்புடத்திற்சார்ந்துபோடே. ()

போட்டிடவேநீறியதுவெள்ளையாகும் புகழானவெண்கருவிளெரு க்கின்பால்விட்டு, நாட்டிடவேயரைத்துவில்லை ரவிதான்கண்டால்நலமா கமுன்போலேபுடைத்துப்போடு - தாட்டிகமாய்நீறும்பின்னெடுத்துக் கொண்டு சம்பீரச்சாற்றுலேயரைப்பாய்சாமங்- கூட்டியேவில்லைசெய் தாவியில்வைத்துக்கூசாமல்முன்போலேபுடத்தைப்போடே. ௨௫௨

புடம்போடேவெளுக்கும் பூநீறுபோலே பொல்லாதகுன்மமெல் லாம்பொடியாய்ப்போகுஞ், சடமானகற்பநோயாறுந்திருஞ் சடத்துள் நின்றவாயுவெல்லாஞ்சவ்வாய்த்தள்ளுங்-குடமானபெருவயிறுங்குட்ட ந்தீருங்கொடியமகோதரமுடனேகுடல்வாதம்போ, மூடனுடுஞ்சூலைநீர் பொடிப்புப்பண்களுநகமூடிந்துபோச்சுதடா உண்மைதானே. ௨௫௩

அரப்பொடிசெந்தூரம்.

உண்மையென்ற செந்தூரமொன்றுகேளுவுலோகமென்ற வரப் பொடியுந்தாம்பிரப்பொடியும்-வண்மையென்றவுருக்குடனேவெண்கல ம்பித்தளையும் வாகானநாகமொடுதிராயுமாகுந் தண்மையென்றவெள்ளீ யக்காரீயம்வெள்ளி தருவானதங்கமொடுரத்தினமொன்பதும் -பெண் மையிலேவகைகழஞ்சிவீதம்வாங்கி பேருகப்பொடித்துடனேசாற்றக் கேளே,

௨௫௪

சாற்றவேசாமம்ரண்டுபொற்றலையின்சாற்றுன் சாதகமாய்சாமம்ர ண்டுமைவிடாமல்-சேர்த்தாத்துவில்லைசெய்துவுலரப்போடு செங்கலெ

ன்றகுகையில்வைத்துசிலைசெய்து பார்த்தாலேபஞ்ஞியென்றபுடத்தி
ற்போடு பருவமாயாறியபின்னெடுத்துப்பாரு நீர்ருகும்நீற்றதனையெ
டுத்துக்கொண்டுநினைவுடனேமுன்போலேயரைத்துத்தீரே, ௨௫௫

தீர்ந்தபின்புபில்லைசெய்துவாயிற்போடு செயமாசமுன்போலே
புடத்தைப்போடு-ஆர்ந்தபின்புஊறியெடுபுடக்சானஞ்சி லாதியென்றப
வளவன்னமாகும்பாரு-சேர்ந்தநெருசெந்தூரஞ்செப்பில்வைத்து தே
விபதம்பூசைசெய்துசெப்பக்கேளு, பேரந்தகோரெந்தெந்த நோய்க்கெ
ல்லாந்தான்போடப்பாபணவிடைதான்புதுமைகேளே, ௨௫௬

புதுமையென்ற செந்தூரந்தேனிற்கொள்ளப் போகுமடாகுன்ம
மென்றவாய்வுகுட்டங்-கதுமையென்றநெய்யிலேகொண்டாயாகும் க
ணைதை பெற்றவுட்சுரங்கள்காணுதோடும்- புதுமையுள்ளபச்சைவெண்
ணெதன்னிற்கொண்டாற்-போகுமடாவிடம்பிலுள்ளவறட்சியெல்லா ம
துமையென்றசீரகத்தைக்கியாழஞ்செய்துவாகாகக்கியாழத்திற்கொண்
டாயானல். ௨௫௭

கொண்டிடவேநெஞ்செரித்தபித்தந்தீரும்குறுந்தோட்டிவேரதனை
க்கியாழஞ்செய்து-கண்டதனிற்கொண்டிடவேவாதந்தீரும் நல்லவெஞ்
சிச்சாறதனிற்கொண்டாற்கேளு- பண்டுடையவாதபொடுசூமுந்தீரும்
பருத்தமுலைப்பால்தனிற்சன்னிதீரும்-பெண்கட்குவெள்ளையுள்ளித்தயி
லந்தன்னிற் பேணியேகொண்டிடவேயறுமூலம்போமே. ௨௫௮

ஆறுனமிளகுநீர் தன்னிற் கொள்ள வணுகாது சுரமிருமலற்றுப்
போகுங்-கூறுனசுக்குகியாழத்திற்கொள்ளக் குணமாகுஞ்செரியாமை
பொருமல்வாய்வு-நூறுன தூதுவளைகண்டங்கத்திரி நுணுக்கமுள்ளவி
ட்டவியல்நுகர்ந்தார்கேளு-பேறுனக்ஷயமிருமலிளைப்புகக்கல் போகாதே
யோடுமடாபின்னேகேளே, ௨௫௯

பின்னையென்றவெள்ளாட்டின்பாலிற்கொள்ளபேரானவயிற்றுளை
ச்சல்கடுப்புப்போகு-மன்னையென்றபிள்ளைகட்குக்கணரோகணத்தைவ
டுத்ததோர்வியாதிக்கனுபானங்கேளு-தன்னையென்னவல்லாரைமாதளை
துாதளையுந்தாயென்னறகுடிநீரிற்சாந்தமாகு- மின்னமென்னபனைவெல்ல
மதனிற்கொள்ளவிடும்பாணசூலைவகையெல்லாம்போமே. ௨௬௰

போமென்றமேகவகைநீர்தரிப்பும்பிறமேகந்தீருமடா சஞ்சீவிதன்
னி-லாமென்றநீரிழிவு தீரக்கேளுமாவாரைப்பஞ்சாங்க மதனிற்கொள்
ளு-நாமென்றகால்கைகளுளைப்புத்தீர நல்லாவின்பால்தனிலே கொண்
டால்தீரும்-தாமென்றகிராந்திவகைதீரச்சொல்வேன்சருக்கரையிற்கொண்
டிடவேசாந்தமாமே. ௨௬௧

ஆகுமேகிரிச்சரங்க நீரவென்று லாதியென்றதிரிகடுகுதிரிபலாதி - வேகுமேபிளவருப்பாய்சூரணித்து வெள்ளையுள்ளித்தயிலச்சிற்கு ழைத்துட்கொள்ளப், போகுமேபாண்டுலகைசொல்லக்கேளுபொற்கையான்திரிகடுகுபொடித்துத்தேனி, வேகும்மகொண்டிடவேவாதபித்தமிதமானசந்தனத்திலிட்டபோதே. உசுஉ

இட்டபின்புபெரும்பாடுநீரக்கேளு இதமானசாதிக்காய்கஞ்சாசூரணத்திற், பட்டதோரெலும்புருக்கிநீரவென்றுற் பத்திரியுமேலமொடுவால்மிளகுகிராம்பு சுட்டதோர்நெய்யதனிற்கொள்ளத்திரும்தோணனூற்று ஆறனகண்ணோயுக்கு,வட்டமுலைப்பாலதனிற்கொள்ளுசொள்ளுவண்டுகடியானதற்கு வகையைக்கேளு, கெட்டதொரு சிவன்வேம்பின்பொடியிற்கொள்ளச் சுடுகாப்பனுக்குக்கருஞ்சீரகச்சூரணமே. உசுங

சூரணமாஞ்சுரர்தனக்குஅனுபானங்கேள்சுக்குடனேபற்படகந்தூதலைபேய்ப்புடலுங்காரணமாக்கண்டங்கத்திரிதோடைசிலவேம்புங்கனத்தமூத்தக்காசுடனேகியாழக்கிற்கொள்ள. வாரணமாஞ்சுரங்களறுபத்துநாலுமளவற்றகபமிருமலகலும்பாரு,மாரணமாங்கால்பிடிப்புகைபிடிப்புக்குவளமானகாட்டுவகைமருந்துகேளே, உசுச

மருந்தென்னவமுக்கறுவுஞ்சீனப்பாவும் வாகான சித்திரமூலத்தின்வேருர், திருந்துசீரகமுஞ்சூரணித்துத்தேனிற் றின்றிடவேகட்டெல்லாந்தெரித்துப்போகு மருந்தவேகுட்டமொடுகுறைநோயுக்குமரிதாணசேங்கொட்டைதயிலத்திற்கொள் இருந்ததோர்பீனிசமுமண்டைச்சூலைக்கெண்ணெயிலேகுழைத்துநீவிழுங்குவாயே. உசுரு

விழுங்கவேயானந்தவாய்வுக்குத்தான் மேலானவெள்ளையுள்ளியரைத்துருட்டிக்கொள்- மிழுங்வேகடுப்புக்குமாதளங்காய்வித்து மிகவரைத்துவிழுங்கிடப்போமதிசாரந்தான் - ஒழுங்கானசுக்குடனேநெல்லிமுள்ளியோமமுடன்சீரகத்தினுரைத்துக்கொள்ளு, மழுங்கவேநோய்களெல்லாமகன்றுபோகு மாதிரத்தின்கவலோகத்ததிதங்சாணே. உசுசு

கட்டினங்களுக்குபால்மெழுகு.

காணவேசேதியொன்றுசொல்லக்கேளு சமுதைப்பாலெருமைப்பால்பசுவின்பாலும்,தோணவேசெம்மறிப்பால்வெள்ளாட்டின்பால்சுத்தமுலைப்பாலுடனேபன்றிப்பாலும்' பேணவேநாய்ப்பாலுங் குதிரைப்

பாலும்பேரானவத்திப்பாலரசின்பாலும்,பூணவேயாலின்பாலித்திப்டாலும்புகழானவெருக்கின்பால்புங்கின்பாலே. உசுஎ

பாலானகள்ளிப்பாலாதளையின்பால் பருத்ததோர் தில்லைப்பால்மாப்பாலோடு, நாலானகத்தையின்சிப்பிப்பாலும்நண்டின்பால்பீராயன்பால்சதுரக்கள்ளி,கோலானகுண்டலிப்பாலிப்பாலிதுவெல்லாங்கான்-கொண்டுவந்துவகைக்குழக்காய்குறுகக்காச்சில், சாலவேபெழுநாகு மதனைவாங்கிச் சார்வானகுகையாகச்செய்துகொள்ளே. உசுஅ

குகைக்குள்ளேவைத்துருக்காசங்கட்டுங்கூறுகைகாரியங்குமுறிக்கட்டும், பக்கத்ததோர்வெள்ளியகீவாவாங்கும்பரிவானபாஷாணமுருகியாடுஞ், செகத்திலேசமப்பாசீருமற்சட்டுஞ்சிவமானசாதிலிங்கஞ்சிவந்துநீர்க்கு, மகத்தானவுப்பதுதான்மணிபோலாடுமெஞ்சவெளன்றவெகவுரியதுமலைபோலாமே. உசுகூ

மலையானவரிதாரம்வங்கமாகு மகத்தானதாம்பரத்தி னூறல்போகு. மூலையானவிருப்பதுதானுருகியாடுமூலகத்திலந்தவகை யுண்டோவில்லை, சிலையானகுகைபதனைமண்குகையில்வைத்துசிறப்பான வெண்காரங்கீழ்மேலிட்டு,புலைபாமல்மேல்மூடிசீலைசெய்து புகழ்ந்துருக்கச் சாக்கெல்லாமணியாய்நிற்கும் உஎ௰

நிற்கின்றவகைவகையாம்பாஷாணத்தில் நேராகக்குணங்கண்டுவுலோகத்தூட்டி,சிற்கின்றதங்கமிட்டுச்சூதமிட்டுசெந்தூரமாக்கியேவேதைபாரு வொக்குமேபத்தரையுந்தப்பாதப்பா வுண்மையாய்ச்சொல்லிவிட்டேனுலகத்தோர்க்குப்,பக்குவமேயாளுகச்செய்பலாகும்பாவிகளுக்கொருநாளும்பலியாதென்னே. உஎக

என்னசெந்தூரத்தினங்கள்கண்டு எடுத்தெடுத்த நோய்களெல்லாந்திருஞ்சொன்னேன், சொன்னமாஞ்செந்தூரங்கொண்டாயானல்சுறுக்காகுங்காயசித்திரைதிரையும்போகு, மன்னவர்போலிக்குருவின் சவுக்காரமெய்துமகத்தானபூநீறுஇதற்குயீடோ, கன்னமென்றசன்னக்கோல்வாதத்துக்குக் கறைக்கண்டார்தனையிதனுற்கட்டிக்கொள்ளே. உஎஉ

கட்டியதோர்துரிசுதனைநீற்றக்கேளு கற்சுண்ணமதனில் வைத்து அமுரிவிட்டுநீற்று, பட்டிடவேகற்சுண்ணமுறைச்குநாழி பத்துமுறை நீரறியதைப்பருவஞ்செய்து,மூத்தியதோர்நாகதிற்பாஷாணமிட்டு முறையாகவறுத்ததனைவெளுக்கநீற்ற, தொற்றியதோர் வெண்கருவால் மேற்கவசஞ்செய்துசெயபானவுவர்மண்ணைக்கீழ்மேல்வையே. உஎங

வைத்ததின்மேலண்டநீர்கிண்டவிட்டுவாகானவோமயலோடுமூடி, கைத்ததின்மேற்சீலைசெய்துபுடங்கோழியாக்கிக் கலந்துதீயாறியபின்னெடுத்துப்பாரு, மொய்த்தசொருபூப்போலேவெளுத்துநீறு முனை

யானநீறுகளைப்பதனம்பண்ணு, னைதத்தொருசெந்தூரந்தயிலஞ்செய்துத்தடையறவேகழஞ்சிகுருகாச்சிக்கொண்டே. ௨௭௪

கொண்டதொருசெந்தூரங்கொண்டோர்மெத்தகொடுமைசெய்யும்நோய்களுக்குக்கூற்றனாகும், விண்டசேபூநீறுயில்லாவிட்டால்விதமானதுரிசிநீறுவேணும்வேணும், கண்டருடநீறதனிற்சூதங்கட்டுங்காசினியிற்சூதமதுகெவனமாகும், தண்டான சூதமதுசெந்தூரந்தா னலமான வேதையுள்ளகற்பமாமே. ௨௭௫

கற்பமென்னபற்பமென்றுசொன்னாயானால் காசினியிற்கடைகெட்டகழுதைசென்மம், சொற்பமென்றுயோகத்தைவிட்டாயானால்சுணங்கனென்றசென்மமவன்மனிதனல்லசிற்பமென்றுமனமுறைந்துயோகம்பார்த்துநினைவாலேசாத்திரத்தைக்கண்டுதேறி, விற்பனமாங்கற்பமுண்டுதிட்சைபெற்றுமேதினியிலிருப்பவனே சித்தராமே. ௨௭௬

சித்தரென்னயோகமென்னவென்றாயானாற்செடத்தோடேகயிலாயந்தெரிசனமாமப்பா: செத்ததனாற்பலனொன்று மில்லையப்பா செடமல்லோசிவமாச்சு கைலாயமாச்சு, தென்னசர்ச்சமென்னஞானம் வந்தால்காசினியிற்கோபால்லோகர்மமாச்சு - விதமென்னகெர்வமதுகோபமாச்சு மெய்யானமோட்சமதுதண்மையாமே. ௨௭௭

தண்மையல்லோஞானத்துக்காதாரமாச்சுசாந்தமல்லோயோகத்தின்சார்வுமாச்சு-உண்மையெல்லாம்-ஞானத்துக்கொடுக்கமாச்சு வுரப்பானசடலமல்லோமசத்திரமவீரம்-வண்மையல்லோஞானமென்றதானமப்பாமகத்தானபெரியோரைபழிப்பார்மாந்த-ரண்மையல்லோ பூரணமாய்நின்றமார்க்கமாதிமுதற்கற்பமடாவறிந்துகொள்ளே. ௨௭௮

அறிந்துகொள்ளற்சேதியொன்றுசொல்லக்கேளு அரிதாரமைங்கழஞ்சுவெள்ளையஞ்சு-செறிந்தசொருசாதிலிங்கமுக்கழஞ்சு திறமானகெவுரியதுரிருகழஞ்சு-பிறிந்தமனோசிலைகழஞ்சுகெந்தியொன்றுபோனதுரிசுதுத்தங்கழஞ்சுகூட்டி முறிந்தகருஞ்சீரகமுங்கழஞ்சுகாலுமுழுவெள்ளைகருந்திரிகங்கழஞ்சியொன்றே. ௨௭௯

ஒன்றானமிளகுடனேகடுசெவ்வீரமுறைப்பானகாரியங்கழஞ்சரண்டுபன்றானசூதமதுகழஞ்சரண்டு பதிவாகவுருக்கிபதிற்சேர்த்துக்கொண்டு-நன்றானமருந்தெலலாஞ்சுத்திசெய்து நலமானகுழிகல்லிலொன்றாய்விட்டுகன்றுமலிதையரக்கச்சாறுகேளுகரிசாலைமேனியொடுபருத்திச்சாறே. ௨௮௰

சாறுவிட்டுமுச்சாமுமுன்றுசாமந் தனியரைத்துயேழுபிலலைதட்டிக்கொண்டு விறுடையவெய்யிலில்லைவைத்துக்காய்ந்தபின்புவெந்தணவில் லலைவிட்டுப்புகைகையைக்காட்டு-ஆறுபொழுதும்புகைத்துநீரில்முழ்கு அதின்பிறகு வேருண்டை புகைத்துசதிருகூறுடனேமூன்றநாள்நீரின்மூழகக் குவலயத்தில்சூலையொடுகுட்டந்தீரும் ௨௮௧

திருமேகிரந்தியொடுகொட்பன்கட்டு செயலிங்கச்சூலையொடுயோனி
ச்சூலை சாறுகின்றபுண்புரைகளெல்லாந்தீருந் தனமாகுமோர்பாலுந்தயி
றுமாகும்-காருமேபத்தியந்தானேழுநாளுங்கட்டாதுவாய்தனிலே கண்
ருபாரு-ஊரிலேயிருக்கின்றபுகையேசெய்தா லூறவானவாய்தனில்லெவந்
தழுகும்பாரே　　௨௮௨

அழுகாமலொத்திடமொன் றுரைப்பேன்கேளு ஆட்டினிடபுழுக்
கையொன்றுகோழிமலமொன்று-ஒழுகாமலோந்தியொன்றுபல்லியொ
ன்றுவுற்றுக்கேளாணேயொன்று-நழுவாமல்முசுறினுட முட்டையொன்
றுகண்டொன்றுதவளையொன்றுநாஞ்சிலொன்று-வழுகாதவசம்பொன்
றுவுள்ளியொன்றுவாழ்கடுகுசீரகமுமூலமாமே,　　௨௮௩

மூலமென்றசித்திரமூலத்தினோடு மிளகுசுக்குமபினியொடு காய
ந்தான்றிவால்மிளகுசன்னிநாயகமுங்கூடவகைக்சமஞ்சிவீதபடாவைத்
துக்கொண்டு-யேலவேசட்டிதனிலவேப்பெண்ணெயோடியியல்பானநல்
லெண்ணெயாமணக்கினெண்ணெ-சாலவே தேங்காயெண்ணெயாகநாலுந்
தான்வகைக்குச்சட்டியினிற்காற்படியாய்வாரே　　௨௮௪

வார்த்துடனேமருந்தையெல்லாங் கிழிகக்கட்டி வைத்தந்தயெண்
ணெயிலேசொதிக்கும்போது- எந்தெந்தவெண்ணெயிலே பச்சைநாற்ற
மெடுத்துதென்றுகண்டவுடன் கிழியைவாங்கி மார்த்தந்தச்சரீரத்திலுச்
சிதொட்டுபதைப்புகள்தோறுங்கிழியைப்பதித்தாயானால்-காத்ததோர்ச
ன்னிவகைகாணுதோடும் கால்முடக்குவாதமெல்லாங்கடலிற்புக்குஞ்-சீ
ற்றமுள்ளவலிகளெந்துஞ்சிதறிப்போகுந் திறவாதவாய்திறக்குந்தியக்
கமாமே　　௨௮௫

தியங்காமல்மூலத்திற்சேதிகேளு சிவமானகடுக்காய்தானூறுவா
ங்கிமயங்காமல்வெள்ளாட்டி நீரில்விட்டு-மயமாக வலித்ததனை வாங்கிக்
கொண்டு,தயங்காமலதைநீதான்வறுத்துக்கொண்டுசாதகமாய்மெழுகா
னல்விதையைத்தள்ளு- மூயங்காமற்சிவதையதிற்பலந்தானென்று மு
துமையுள்ளசன்னாசிகிழங்கொன்றுமே　　௨௮௬

கிழங்கானவெந்தோன்றிக்கிழங்கதொன்று கிருபையுள்ளசாரணை
யின்கிழங்கதொன்று, வழங்குகின்றபாலதனிற்சுத்திசெய்துவாகாகவு
லர்த்தியேயிடித்துத்தூளாய்-களங்கமதாய்வடிகொண்டுவெள்ளாட்டின்
பால்காய்ந்தாணடுபடிதனிலேசூரணத்தைப்பாச்சு-இளம்பதமாய்பாகு
செய்துவொருபலஞ்சர்க்கரையையியல்பாகத்தூற்றியேகிண்டுகிண்டே

கிண்டியேவெள்ளாட்டினெய்படிநர்னவாரு கிருசைப்யுள்ள தேனி லேகால்படிதான்வாரு - சுண்டியே பெழுகுபோற்பதமாம்பாரு சுறுக் காகப்பிங்காணிற்பதனம்பண்ணு மண்டியுள்ளமூலம்பிறமூலத்தோடுமா றுவகைமூலமெல்லாம்பகலவென்றால். கொண்டு விடுகழஞ்சிரண்டுநா ளொன்றுக்குக் கூசாமலிருநோந்தினறிடாயே. உஅஅ

தின்றிடவேபறுமூலகருமந்திருந் திறமானமூலசல மிரத்தந்திருங் கன்றிடவேமூலற்திற்றினவுபுண்கள் கனமானவாய்விரச்சல்கழிச்சலோ டுகொண்டிடவேதீராதகிராணிமூலங் கூழ்ப்பிச்சுப்புறத்தில்நின்றமூளை மூலந்தான்-வின்றிடவேகிராணியென்றதெல்லாந்திரும்விம்மிநின்றுமல ங்கருக்கும் விரணம்போமே. உஅகூ

விரணமாங்கடுப்போடுகொந்தல்திரும் வேணுமென்றகிராணியெல் லாம்விடுபட்டோடுங் - தருணமாந்தாதுபிலந்தானுண்டாகுந்தருவானகந் தாதிலேகியந்தான்-மாணமதுவில்லாதகற்பம்போலே மண்டலந்தானவ கொண்டிடவேநோய்க்கவராலாருஞ்சாணமென்றபேதியுள்ளவனுபான ங்கள்-தானறிந்துகொள்வதற்குச்சத்தியமெண்ணே. (உகூ௰)

சத்தியமேவேணுமடாவனிதனுல்- சண்டாளஞ்செய்யாதேதவ ருகாது, நித்தியகன்மந்தப்பாதேநேமமறவாதே- நிட்டைபொடுசமாதி விட்டுநில்லேபோகாதே, புத்திகெட்டுநடவாதேபொய்சொல்லாதே - புண் ணியத்தைமறவாதேபூசைமறவாதே, கத்தியதோர்தர்க்கமிட்டுத்தள்ளி டாதே-கன்மியென்றுநடவாதேசதிவேண்டுங்காலே. உகூக

காலென்றவிடசலையிற் கருத்தைவைத்துக் கழியும்காலங்குலத்தா லதனைக்கட்டிப், பாலென்றசந்திரனும்பாலையுண்டு-பசியாமற்பாதியிலே பரிந்துநில்லு, தோலென்றசெடமதுதான்கல்லுகல்லு சுகாதீதச்சித்த னென்றசொல்லுமாச்சு, நாலொன்றுந்தப்பாமல் வழங்கிப்போச்சு நு ணுக்கமுள்ளகருக்களெல்லாந்துலக்கமாச்சே. உகூங

ஆச்சென்ற சித்தியெல்லாந்தீட்சையாலே அதிகமுள்ளகருவெல் லாமவுனத்தாலே, போச்சிந்தச்சென்மமிதுசற்பத்தாலேபொருந்தவே யாமுரைத்தபத்தியாலே, காச்சந்தப்பிராணுபாவக்கருவினாலே கனதை பெற்றமேருவென்றபூசையாலே, நீச்சென்றசமுத்திரத்தைநீந்தியேறி நிலைத்தப்பாசிவக்கியானநிலைமைதானே. உகூச

தானென்றநாடி நிலையறியவேணுஞ் சடத்திலுள்ளநோய்குணங்க ளறியவேணும், வானென்றமருந்தினங்களறியவேணும் மருந்திடனுட்

பதமறிந்துவைக்கவேணும், நானென்றவாங்காரநிவர்த்திவேணும்நலமாக வடுகனிடபூசைவேணும்; கோனென்றகுருவினுடபாதம்போற்றிகுண மாககடந்தவனேகுருபுத்திரனுமே ௨௯௫

புத்திரனேயின்னமொருநெய்தான்கேளு பூலாத்திவேருடனேபூங் கதலிப்பிஞ்சு, மத்தியின்பிஞ்சுடனேமுத்தக்காசு மகத்தியிலைவெண்கா யச்சாறுகெல்லி, சத்திச்சாரணைவேருந் தூதளையின்வேருந்தருவானமலை தாங்கிதக்காளிவில்வஞ், சித்தியுள்ளவல்லாரிசாலையோடுசிறுநெருஞ்சி பெருநெருஞ்சில்சிறுபுள்ளடியே. ௨௯௬

அடியானசெருப்படையுஞ்சிறுகீரைதானு மாம்பலொடுகுளிர்கொ ட்டியானநெய்தற்கிழங்கு, செடியானகண்டங்கத்திரியினோடு சிறுமூரு க்கைநறுந் துளசிசிவதங்கநாயுருவி, கடிதானமுக்தாண்டி செங்கழுநீர்க்கி ழங்கும் கருதுநிலவேம்புசிறு காஞ்சுரையின்பிஞ்சும், படியானகுறுந் தொட்டிஆடாதோடைபருத்தியின்பிஞ்சுடனேநெய்தற்பூவே. ௨௯௭

பூவானபொடுதலையும்பிரமிலானும் பூமுங்நறுவிண்டியேய சிதழின் மூலங் காவானசெந்தொட்டிசன்னிசிறுபூளைகனத்தாலின்விழுதுடனே கஞ்சாவுங்கொன்றை, நாவானமுதுவன்னிபசளைகுழிமிட்டா னைத்தவ ம்மான்பச்சரிசிவிஷ்ணுமூலி, தேவானகாந்தையொடுபழம்பாசியுடனே சிவந்திருந்தவிலந்தையதின்தம்பலமூன்றே. ௨௯௮

பலமானமூலிகைதான்வகையொன்றுக்குப் பலமொன்றோர்பலத் துக்கோர்படிநீர்விட்டு, சலமானவெட்டொன்றாய்வற்றக்காச்சிகலத்துக் குநாலிலொன்றுநறுநெய்சேர்த்து, குவமானவதிமதுரங்கோஷ்டமேல ங்குருசாணிதுந்திரிக்கம்நறுக்குமூலம். பிலமானதிரிகடுகுதிரிபலாதிபே ரானவதிவிடயஞ்சரக்குவகையாறே. ௨௯௯

ஆறானவாமதலைக்கொம்புருத்திராட்ச மதிகமாங்கெருடபச்சைசச வ்வாதிரதவேதி, கூறானமருந்துவகைகால் பலமாய்வாங்கிகுமுறவனை வெள்ளாட்டின்பாலைவிட்டு, சேறாகக்கலக்கியரைப்பாகு செய்துதிரிநா ளில்மெழுகுபதஞ்சேரவாங்கி வாறானகணபதிக்குப்பூசித்தேதான்மைந் தருக்குகாசெனடைதான்வரிசைகேளே. ௩௱

வரிசையாய்ச்சொல்லுகிறேன்கணங்களேது மாந்தமொடுசுழிதாப்
புவலிகளேது,பரிசமாம்பறங்கியொடுகேறப்பனேதுபட்சியொடுபறவை
யுடதோஷமேது, தெரிசனமாங்கண்களிலேவருவதேது தீர்க்குமடாசிறு
வருக்குந்தேவாமிர்தமாகும், கரிசனமாயிந்நூலிற் சர்மதர்மங்கட்டான
மருந்துவகைகணக்குமுற்றே.

௯௱௧

சன்மகாண்டம் ௯௱.

முற்றுப்பெற்றது.

## மேகரோயிருபத்தொன்றும்தீர.

பார்த்திடும்மேகம் பகரிருபத்தொன்றும்
போற்றிடுமெப்பிரசம் பொலிவானசிந்தூரம்
சேர்த்திடுஞ்சிந்திற் செவ்வாஞ்சருக்கரை
மாறறிடுவேண்ணெயில் மாமேகம்போகுமே ௱௨௧

## குன்மம் குஷ்டம் கிராணி மூலம் தீர

போகுமேகுன்மம் புகட்டத்திராவகம்
போகுமேகுஷ்டம் புகட்டச்செயநீர்தி
போகுமேகிராணி புகட்டநற்பூநாகம்
போகுமேமூலம் புகழ்சங்கைச்செம்புக்கே ௱௨௨

சங்கைகேள்நோய்தான் தணித்தநாலாயிரம்
சங்கைகேள்நாலூற்று நாற்பத்தெட்டெனபார்காண்
சங்கைகேளிவளவும் தானுடலிலுண்டாகில்
சங்கைகேளெல்லாம்தவிடுபொடியாமே ௱௨௩

## சகலரோய்களும்தீரக்குருச் சிந்தூரம்.

பொடியாநோய்போகப் புகன்றிட்டாரென்னந்தி
படிவானகுருகம் மகத்தானதங்கமாம்
பிடிவானசெந்தியின் பேரானசத்து
குடியாய்ச்சிந்தூரித்துக் கூட்டியேதின்றிடே ௱௨௪

தின்றிடநோயெலாம் திசைகெட்டேயோடிடும்
பன்றிடவாயுவின் பக்கத்திற்சேராது
தன்றிடலோகர்க்குத் தானுகாதிம்முறை
மன்றிடச்சித்தர்க்காய் மாவியாதிபோகவே ௱௨௫

வியாதிகள்போக வெகுநாட்சடமுற
பயாதித்திரைநரை பாங்காய்த்தவிர்ந்திட
கயாதிக்கவனம் கலந்தெங்குஞ்சுற்றிட
அயாதியஞான மஞ்சாகுஞ்சிததியே ௱௨௬

அஞ்சியுளத்திலழியாமல்காயத்தை
மிஞ்சியேகற்பம் விளம்பினேனூற்றெட்டு
தஞ்சமுறவேதான் தின்னவல்லோர்க்கு
பஞ்சைநரைபோய்ப் பதின்கோடிவாழ்வரே ௱௨௭

வாழ்வதென்றல்ல மகாசத்தியெட்டுமாம்
கேழ்வதென்றெண்ணிக் கெடுக்காதேமாண்பரே

தாழ்வதொன்றில்லைச் சதகோடிவேதையா
மாழ்வதேவேதை யதுகாணுஞ்சற்பமே ௱௨.

கற்பமேதென்று கசடரேபெண்ணாதே
யற்பமுமல்ல வகண்டமகாசித்தி
சொற்பமுமல்ல தொடுமுனவலோக
மற்படும்தங்க மாற்றுப்பதினாறே ௱௨௯

பதினாறுமாற்றுப்போல் பாலையாமுன்தேகம்
விதிநாளுங்கையோன் மெய்யெழுத்தைப்பொய்யா
மதிநாறுமீசன் வாகுற்றமுறைபாடு
கெதிநாறவுண்டு கிட்டாய்சமாதியே ௱௯௰

சமாதிக்குமுன்செய்யுஞ் சங்கைவகைகே
ளமாதிதவம்பிழை யாலேவழிலேபோம்
புமாதித்தகுஞ்சான் போகுமலமெல்லாம்
தமாதித்தகுப்பகம் தம்பிரானுயாமே ௱௯௧

ஆமேயிதுமுன் னடைவாகத்திர்ந்தபின்
போமேயுறுமயம் புகட்டியதிபமாய்
ஓமேபாக்தி லுறவாய்மனஞ்சேரும்
தாமேசிவமாம் தனிச்சிவமில்லையே ௱௯௨

இல்லையிதத்தே யிறுக்கியேபாராதே
மல்லையத்தில் மதிக்துமேமாயாதே
தில்லேயேமுத்தினைச் சேர்ந்திடுமாயோகம்
வல்லயார்சாவழி மார்க்கமுமக்கென்றே ௱௯௩

மூக்குநுனியில் மூட்டிடுமனத்தைநீ
மூக்கினிடையோடு முழன்றுமசபைதான்
மூக்கினிடைவிட்டு முன்னேடிப்போகாது
மூக்கினொளியோடி மூட்டும்பிர்மாண்டமே ௱௯௪

பிர்மாண்டமுமூட்டிப் பேசுமேமுன்னின்று
கர்மாண்டகாண்டம் கடுகுபொடியாச்சு
தர்மாண்டமோட்சம் தனியாம்பாத்துள்ளே
நிர்மாண்டசித்தாய் நிலைத்திடுமூலியே ௱௯௫

கோய்வசலாறு

முற்றுப் பெற்றது.

## மூலிகைக்கற்பம் கூறுகின்றது.

மூலிகைக்கற்ப முயன்றதறுபத்தும்
பால்யுபாசம் பாங்காயறுபது
வாலியசூதம் தங்கமிரண்டு
யோலியெருநூற்றுப் பத்திரண்டொன்றே ௭௩௩

ஒன்றுதசுற்பத்தை யுண்ணுமேமாண்பாகேள்
கண்ணுனவேளைதக்குக் கலங்கியழுவார்கள்
பண்ணுனகற்பம் பதித்திடுமேனியில்
தண்ணுய்நவலோகஞ் சாயப்பசும்பொன்னே ௭௩௪

பொன்தான்பிறந்தது புகழானகற்பத்தில்
போன்தான்பிறந்தது போராம்துரிசியில்
பொன்தான்பிறந்தது புகழானகற்பத்தில்
பொனதான்யுபாசம் போக்கில்பிறந்ததே, ௭௩௫

பிறந்திடுஞ்சற்பந்தான் பேறுகத்தின்கையில்
சுறந்திடும்வாமமும் கடுமலமேபோக்கு
முறந்துவழலையு முன்பித்தமுநீக்கித்
திறந்துபுளியுப்பைத் தின்றிடக்கியானியே ௭௩௬

ஆனிபடிக்கு ளத்திலங்குந்திரு
மூனிவோருக்கன்னியுமுப்பதாம்
கானியவைப்பசி கார்த்திகைச்சர்க்கரை
மேனியாங்கடுகுக் கனுபானஞ்சொல்வதே ௭௪௰

சொல்லுமேமார்கழி தையுமேதோன்றிடும்
மல்லுமேமாசியும் பங்குனிதப்பினி
மெல்லுமேசித்திரை மேலாம்வைகாசியும்
கல்லதேன்கடுகுக்கனுபானமாகுமே ௭௪௧

அனுபானக்தோடேயந்தமாசத்தையில்
கனுவாகக்கொண்டிடும் காணரைமண்டலம்
பனுவாய்மலமறும் பாங்காய்வழலைபோம்
வினிபாரிதைவிட்டு வேண்டுங்குமரியே ௭௪௨

## குமரிக் கற்பம்.

குமரியுடன்கள்ளிக்காய்கூறுக்கூட்டிடு
அமுரியுடன்கொள்ள அண்டமலமறும்

உமுரீபாமாம்பிஞ்சுஉள்ளேவிசிறிடும்
அமுரியாங்காய மழியாதுதானே

### மிளகுகற்பம்.

தானுமிக்கற்பம் தனியொருமண்டல
மானல்மலமுமளவற்றவாமமும்
ஊனெய்வழிந்து வுறுதிப்படுந்தேக்கு
தானுமிளகந்நாண்டித் தன்னூறுங்கொண்டிடே ௱௪௪

### அமுரியில்மிளகு.

நூறுமிளகுநூகருமமுரியில்
வேறுமருந்தென்ன விங்காயசித்திக்கு
தேறியிதனைச் செலுத்தவல்லார்க்கு
மாறிமயிரு மறுமயிராகுமே ௱௪௫

ஆமிதுகற்ப மடைவசகமண்டலம்
வாகுடன்தின்று வளமாகத்தீர்ந்தபின்
பாகும்பொறுக்கும் பலகற்பந்தானேக்கும்
காதங்கறுத்த கரிச்சாலைதின்றிடே ௱௪௬

தின்றகரிச்சாலை தேகம்திரைபோகும்
தின்றகரிச்சாலை சிறந்நரைபோகும்
தின்றகரிச்சாலை தேகஞ்சிறுபிள்ளை
தின்றகரிச்சாலை சிதையாதுவாக்கையே ௱௪௭

ஆக்கையிரண்டுக்கு மகமாம்பொற்றலை
வாக்குக்குரிய வல்லாரையோடைந்து
பாக்களவாகினும் பாலிறகுழைத்துண்ண
வாக்கையழியாதுவாயிரத்தாண்டாமே ௱௪௮

ஆண்டாயிரத மளந்துமேகொண்டலக்
தீண்டாதேபெண்ணைத் தேகங்கொடுபோகும்
பூண்டவிதஞ்சும் பெர்லிபக்கறுப்பாக்கி
யூண்டியேயேந்தி யுறுதியாஞ்சங்கையே ௱௪௯

### பஞ்சமூலிகைக்கற்பம்

சங்கோல்பத்திரி தக்கோலஞ்சாதிக்காய்
செங்கோல்வித்துடன் சிர்வன்னிப்போர்கொண்டை
முன்கோலவேருடன் முளக்கோல்நெய்கலர்
றைங்கோலம்கொண்டாற்றுன்கோலங்கொண்டாரே ௱௫௰

கொண்டபின்னெழாந்தாக் கற்பமேகேளும்
தண்டயதங்கம் தனிச்சூதமப்பிரேகம்
ஒண்டியுருக்கி யுணர்வாய்ச்செந்தூரித்து
தண்டுப்பணவெடை தான்தினந்தின்னுமே ௩௫௧

தின்னவேமேனி சிறுகதிர்போலாகு
மன்னியகாயம் தான் வாங்குங்கெவனமாம்
முன்னிடில்மேலே யொளிந்தமனோன்மணி
பன்னியலாவயிற் பார்க்கலாம்பாருமே ௩௫௨

வாதசெந்தூரம்.

பாருமேபடாந்தரம் பாங்கானகற்பத்தை
தாருமேபந்தகச் சத்தோடுதங்கத்தைச்
சேருமேசூதஞ் சிறக்கவுருக்கிட
வருமேகூட்டி யியல்பாச்செந்தூரியே ௩௫௩

செந்தூரத்தின்றத்தின்மேராப்பணவெடை
கந்தூருமேனி களங்கற்றுப்பொன்போலாம்
எந்தூரும்போகலா மெங்குமிருக்கலாம்
செந்தூரக்கெவன மாங்கிஷம்நீலமே ௩௫௪

நீலஞ்சோதி னேரிடைசெந்தகம்
ஞலங்காலு -னே யிரதமுமவ்விடை
கோல்சீலிபின்சாற்றில் சூழைத்துன்னைப்
பாலனுமாவார் பார்ந்தியானையே ௩௫௫

ஆணுமலசல மடைவானபாண்டத்தில்
பூணவேவிட்டுப் பொலிவாகமண்டலம்
காணக்கரைத்துக் கலந்தூற்றசூதத்தை
பூணவேகாத்தாலுறவாயுருக்கிடே ௩௫௬

உருக்கியெடுத்து வுறவிடுசோரனை
செருக்கியபாலுடன் செய்வாய்கனபுடம்
பெருக்குங்கவனத்தான் போண்டஞ்சுற்றிடும்
வருக்கியசித்தரில்வாசிப்பார்பாருமே ௩௫௭

பத்தியம்.

பாருமேகற்பம் பலபலவேதென்னி
லாருமேகொள்ள வசையாதுகற்றேகம்

வாருமேனென்பார் மகத்தானசித்தர்கள்
காருமேபத்தியம் காட்டினூர்பாலன்னே ௱௫௮

பாலுடன்வெல்லம் பயறுமரிசிநெய்
போல்வகைத்தின்பன பொற்கனிதேனுடன்
மேலப்பனியார மிளகுபொன்னுங்காணி
சீர்பெறும்யோகிகள் சித்தர்கள்பூசையே ௱௫௯

## தள்ளமுழுக.

புளிக்கறிகைப்புப் புலாலாட்டிறைச்சியும்
களிம்புசுண்ணாம்பு கடுகுள்ளிக்காரெண்ணெய்
யளிப்புலவண பாகாதிவைபொன்று
மூளம்பெறுசித்திக்கும் யோகிக்குமொண்ணாதே ௱௬௰

யோகிடுமூகநிழை யுறவாடல்நீராடல்
பாகியநெய்யாம் பலபலசித்தர்க்குக்
தாகித்ததாகம் தணிப்பாலும்வெந்நீரு
மாகிமுழுக வயந்தவழமென்னே ௱௬௧

அழகுறுதலியதிசயமேகேளாய்
களவுகாபங்கலங்கவந்நீரிலே
மிளகுமஞ்சள் கடுநெல்லிவேமபிடில்
இளகுங்காயமிறுதுங்கபாலமே ௱௬௨

## மூலிகைப்பற்பம்.

கபாலமிறுகுங்கண்ணும்துலக்கமாம்
அபாலமிந்தனிஅதுவண்டுபோலாகும்
விபாலத்தினசவாய்வுவேதனைசெய்யாது
இபாலத்தினுள்ளேயெளிதாகமத்தியே ௱௬௩

மத்தித்தசித்தர்கள் மாள்வரோமாளாரோ
உததகருவுமுறைத்திட்டாயென்னந்தி
பத்தித்தபூரணம்பார்த்தவர்மாளார்கேள்
குத்தித்தகற்பமுன்னுண்டார்கேட்டிடே ௱௬௪

## மூலிகைக்கற்பயாகவகை.

கேட்டிடுமஞ்சுக்செடியானமூலிகை
நாட்டிடுகெரிசாலைநலமாய்க்கறுப்பேற
வாட்டுகுழிவெட்டி யதிலேநன்மண்ணிட்டு
பூட்டுசெங்கொட்டைபுகழாகவெட்டியே ௱௬௫

வெட்டிப்பரப்பி மேலேநல்மண்போட்டு
ஒட்டிவிரையுட்டுறவருநல்லநீர்
வட்டிமுதலத்தான்வளமாமணைவாசிக்
கட்டிவிரையைக்கலர்மண்ணிகொட்டையே ௫௬௬

கொட்டைதனைப்போட்டுக்கொட்டிப்பரப்பிட்டு
சட்டையாமுன்விரைதானேதேனியிட்டு
அட்டியநீர்விட்டடவாயருக்குநீ
இட்டமாய்மூணுந்தாமிப்படிப்பண்ணே ௫௬௭

மூணுந்தரத்தில்முழுகருப்பாமேலா
மாணுனசித்தர்களங்கங்குசெய்வது
வேணகெடிகள்வெளுப்புகறுப்பாகும்
ஊணவேசெய்துண்டவுத்தமர்தான்கேளே ௫௬௮

கேளுசதாசிவன்கெடியேழுலட்சந்தான்
நாளுமயேசுரன்நான்மூன்றுலட்சந்தான்
ஊழியவிசனுமுயன்றிருலட்சந்தான்
வாழியான்கொண்டது வைம்பத்தாயிரமென்றே ௫௬௯

என்னப்பிரமன்றுனெழுமுப்பத்தாயிரம்
பன்னமுனிவர் பகிர்ந்ததிலாயிரம்
மன்னியசித்தர்கள் மற்றுள்ளோர்கொண்டார்கள்
தன்னநல்மூலர்சாவுபொய்யானதே ௫௭௰

பொய்யாச்சுசாவென்றார் போனார்பிரமன்மால்
மெய்யாயடைந்தார்கள் விளங்கியமூவரும்
ஐயாவிதுவென்ன ஆச்சரியஞ்சொல்லாய்
மையானகன்னிகள் மாயத்தால்மாண்டதே ௫௭௧

மாண்டதிதினாலே மாதிண்டோவென்னாந்தி
பூண்டதிவர்கள்புகழ்வாழ்ந்ததெவ்விடம்
வாண்டதுமேருவடியிற்கணேசன்கேள்
தாண்டவதின்மேலேதான்பிரமாதியே ௫௭௨

பிரமாதிமேலே பிறந்தமால்பட்டணம்
அறமாதிமேலேயானுடபட்டணம்
நிறமாயதின்மேலே நின்றமயேசுரன்
தறமாயதின்மேல் சதாசிவன்வாழ்ந்ததே ௫௭௩

## பிண்டவுற்பனம்.

வாழ்ந்தவிதஞ்சின்மேல் வாசலிற்சிற்பரி
ஆழ்ந்தவதின்மேலணுகும்பாபரம்
வீழ்ந்தவசபைவிடோலோடெங்குமாய்
சூழ்ந்தவைகண்டந்துலையாப்பிரமமே ௱௭௪

பிரமமுதலாய்ப்பிறந்ததேயிவ்வண்ட
மாமாண்டபிண்டத்திலப்படியேகண்டேன்
தாமாண்டலோகத்தோர்தாக்கியுநோக்கியும்
உாமாண்க்காணுதுழல்வதென்னந்தியே ௱௭௫

நந்தியைநோக்கார்நடுவணைநோக்குவார்
பந்தியைநோக்கிடார்பார்ப்பார்சபையை
அந்தியையேறையிலாகாக்குாங்குதான்
வந்திடவேகனம்வாசனைபூணுமே ௱௭௬

பூணிடில்வாசம்பொறியில்மனமோடி
பூணிடியலட்சயமுழன்றுசுழன்றிடும்
கோணிக்குாங்கால்குறிநூறுக்கெய்யாது
பேணிப்பிடித்துப்பிதற்றுவார்பேயரே ௱௭௭

பிதத்தாமல்நோக்கப்பிரமவழிகாண
மதத்தமதுவுண்டுமனதெண்ணப்பூரண
மதைத்தானேயான்காணுவதுவென்னையுட்கொள்ள
எதிர்த்தாலேயாகுமென்னிசனந்தியே ௱௭௮

ஈசனைக்காண வெளிதாய்ப்பாங்காண
வாசானைத்தாண்டி யகண்டமயங்காண
வாசானவாசல் மனோமணிபேசிட
யோசனைசூதமுழுயர்ஞானமொக்குமே ௱௭௯

ஒக்குமேசூதமுமொப்பற்றஞானமுஞ்
சிக்குமேபூரணந்தெவிட்டாதேகாணுமோ
மக்குமோவாசனைமனக்குாங்கேகுமோ
தக்குமேதேசஞ்சாத்திடாயென்னந்தி ௱௮௰

சாற்றுங்குளிகையைத்தான்வாயிலேவைத்து
எற்றியேபீபாரேழுசபைகாணும்
போற்றுமனோன்மணிபுகழுங்கடர்தபின்
தீற்றியபூரணம்நிர்மலங்காணுமே ௱௮௧

நிர்மலமாகும் நீண்டவடகோணார்
நிர்மலமாகுமேநின்றுடல்பூரணம்
நின்மலமாகுமேநின்சாய்கையேபொய்யாம்
நிர்மலமாகவேநின்றிடிற்காணுமே ௱௮௨

காணும்வழியேதுகாசணாயென்னந்தி
பூணும்விளக்கிலொருதீபங்கீழ்நோக்கி
லாணியவிக்கவர் தபுகையோடு
பூணியேதீபம்பொரிந்தங்குபத்துமே ௱௮௩

பத்தியதீபம்போல பாசபங்கீழ்நோக்கில்
ளத்தியெடுக்குமிதுகாண்மகாசித்தி
யத்திகுளிகையுமப்படியேகாணு
முத்திக்குமாமேதான்முன்னின்றுகாணுமே ௱௮௪

பற்பம்.

காணுமேதேகந்தானகத்திடுவோடும்
பூணுமேதேகம்பிடித்தவிடம்பொய்யாம்
கோணுமேமேனிகொழுந்தாகுஞ்சோதிபோல்
ஆணுமேகாணுமையாமறையுமே ௱௮௫

மறையும்பூரணம்வளர்ந்தமுடியேது
மறையும்பூரணம்வாழாதடியேது
மறையும்பூரணம்வளர்ந்தபணிரண்டில்
மறையும்பூரணம்வளமாகநாலெட்டே ௱௮௬

காலேதுவெட்டேறுகாட்டிடாயென்னந்தி
காலோடுமூலங்கலந்தோடிமையத்தில்
பாலோடுமூட்டிப்பறிந்தபணிரண்டும்
பூலோடுயெட்டுந்தான் புக்கித்துப்பாருமே ௱௮௭

பாரிதுவெட்டும்பறிபட்டதுநாலும்
ஆருமறியார்களண்டிடும்பூரணம்
வேருமுதலும்விளங்கினேன்கேள்மூலர்
சேருமிதனில்சேர்ந்தவர்சித்தரே ௱௮௮

சித்தர்க்குநாலோதெவிட்டாதபூரணம்
மத்தித்தவெட்டின்வகைசொல்லாயென்னந்தி
ஒத்தித்தொருவிசலுயர்ந்தபரமாகு
மத்திரண்டாந்தான்மகத்தாஞ்சிவமென்னே ௱௮௯

மகத்தானமூவிரல்மாயமகாசத்தி
பகத்தானநாலும் பரிவானநாதங்கேள்
அகத்தானஐவிரலாதிமகாவிந்து
சகத்தானவாறுஞ்சதாசிவம்பாருமே ௱௬௰

## பஞ்சபூதவேசாஞ்சம்.

மூருல்பார்க்கில்மயேசுரம்வேரும்
மேருதட்டாமலுயர்ந்திடுருத்திரன்
சேருமிதெட்டால்சிவனங்கேள்சஞ்சார
ஆருமறியாரறிந்துகொளுண்மையே ௱௬௧

உண்மைதானிமையொடுங்கும்வகைசொல்லாய்
வண்மைப்பிரமன்ருன்மாலொடுசேருவான்
தண்மையாய்மால்தான்தனிருத்திரன்சேரு
மண்மயருத்திரனுக்குமயேசனே ௱௬௨

மயேசான்சென்றிலேவாழுஞ்சதாசிவம்
மயேசுபரவிந்துவிறபாய்கதுவொடுங்கிடும்
வயேசுரவிந்துவடங்குமேநாதத்தில்
தயேசுராகத்தைத்தான்கொள்ளுஞ்சத்தியே ௱௬௩

சத்தியொடுக்குந்தனித்தசிவத்துள்ளே
ஒத்திச்சிவந்தானுயர்ந்தவராட்டிய
கத்தியைவாட்டியைகடத்துவாள்சிற்பரி
கொத்துடன்சிற்பரி கூடியேநிற்குமே ௱௬௪

நிற்குமப்பூரணம்நீண்டமூகசாலை
தக்குந்தாள்வாசல்தனிக்குமனோன்மணி
ஒக்குநெருப்பாறு வோடமயிர்ப்பாலம்
சிக்குமோசிக்காதோ திறந்துநீபார்த்திடே ௱௬௫

பார்த்திடப்பார்த்திடப்பாழாகும்பேய்மனம்
ஏர்த்திடயேர்த்திடயெழுந்திடும்வாசனை
கோர்த்திடக்கோர்த்திட குருங்குகுலைத்தோடும்
சேர்த்திடமார்க்கந்தெளிவிப்பாய்நந்தியே ௱௬௬

தெளிந்தாயேமைந்தாநீசேரவேயொவ்வொன்ருய்
யழிந்தேகடந்தேயகண்டத்தில்புக்கிடேல்
அழிந்தாயிரத்தெட்டுங் கடுகுபொடியாக
ஒழிந்தவராட்டியனுக்கலுமாண்டதே ௱௬௭

மாண்டவருன்னுன்னேவந்தவழிசொல்வாய்
வண்டியசித்தர்களெல்லாரும்போனாரோ
ஆண்டனேமூலமறிவிப்பாயென்னந்தி
ஊண்டேனேயுற்பனமுரைத்திட்டாய்போதமே ௱௯௮

## உபதேசம்.

போதமேயென்றுபுலம்பினமாணாக்கள்
மாதர்மனோன்மணிவந்தாளவ்வாசலில்
ஓதநினைத்தாலுண்டானாளீசனை
காணதயவீசனுக்கச்சத்தியானதே ௱௯௯

சத்தியில்நாதம்தனினாதம்விந்துவாய்
வெத்திச்சதாசிவம்ஊட்டிமயேசுரன்
கொத்தியருத்திரன்குலாவியமால்கஞ்சன்
பத்திமுறைகேள்பலபலசிவனே ௨௱

இருகின்றசீவன்கேளெல்லாத்திற்பூரணம்
மருக்கியிருக்குமதைக்காணாவில்லோர்கள்
தெருக்கியேதிண்டாடுந்தோர்வித்துநாதந்தான்
சொருக்கியேவைத்திடஞ்சுருதிமுடிந்ததே ௨௱௧

முடிந்தமுடிவேதுமூற்றும்படியேது
கடிந்தகதலிப்பூகண்டத்தில்நின்றாடும்
படிந்தவிதழ்தான்பதினாறப்நின்றது
அடிந்தநடுவேயறுகோணம்பார்த்திடே ௨௱௨

பார்த்தாயோமூலர்பாத்தினடிபிது
வத்தாயோடனனமெடுத்தவதிச்சடம்
கூத்தானகூப்பிடுங்கொட்டாவிசெம்பண்ணல்
காத்தங்கடிநிற்குங்கண்டாங்கதைபாரே ௨௱௩

அங்கென்றுவோட்டிலடிவிட்டசையாது
சிங்கென்றுசென்றுதனிலெட்டுமுள்ளோடி
பங்கொன்றுநாலும்பாத்தின்முடியாகும்
நங்கென்றுநாட்டியநாட்டமதுபாழே ௨௱௪

## அண்டவுற்பத்தி.

பாழென்றுசொன்னீர்பகர்ந்திடுமுப்பாழை
மாழென்றொருவிரல்மலங்காவெளிபாழாந்

தாழென்றிருவிசல் தனியொளிப்பான்பாழாம்
வேழென்றுமூவிசல் வெளியாமொளிப்பாழே உ௱௫

பாழ்மூன்றுதாண்டிற் பராபரபூரணம்
நாள்மூன்றுகோடிநாடினுமெட்டாது
தாள்மூன்றுகண்டாற் சகலமும்பூரணம்
கேள்மூன்றினாலேகெடியண்டமானதே உ௱௬

அண்டஞ்சாணிம்மட்டேவப்பாலுமுண்டோதான்
பண்டுமுதற்பாழ்படர்ந்தியாச்சென்று
தண்டும்பணாருந்தனிக்கொம்புகாய்பழம்
ஒண்டும்விரையொன்றி லோரண்டநின்றதே உ௱௭

நின்றுயிரத்தெட்டு நேரொருகாயாச்சு
பண்டானகொம்பும்பணருமதிற்காயும்
கண்டாருரைப்பார் காண்காணவுங்கிட்டாது
பண்டானவத்திபரத்தினடிகண்ணே உ௱௮

வேறு.

கண்பார்க்கக்கிட்டாததெண்டசெக்காண்வரிதெண்ணீர்
கண்பாகப்பார்க்கவே மார்க்கஞ்சொல்நந்தி
வன்பட்டகண்ரண்டும்வைத்துமுனைமூக்கில்
தென்பட்டாலுஞ்சிதையாமல்நோக்கிடே உ௱௯

சிதைக்குமேநாலொன்றுசேரவெறும்பாழாய்
பதைக்குமனேண்மணிபட்டப்பகலாவாள்
உதிக்கும்ரவிகோடியொப்பல்லவொப்பல்லவே
கதிக்கின்றபூரணங்கரையில்லைபார்த்திடே உ௱௰

கரையற்றுநின்றகலிங்ககற்பூரணம்
உரையற்றுநின்றதொளிபாமகாபோதம்
நிரையற்றுநின்றசிறுபிள்ளைகாட்டிடில்
வரையற்றுநிர்க்குணம்வாக்சற்றமோனமே உ௱௰௧

மோனமறிந்துழுவன்றுசியோட்டிடில்
கானமிருந்தேன்கடுவூரிடைவாழ்ந்தேன்
தானமேன்தனமென்னசாவேன்பிழைத்திட்
வானமேனண்டமேன்வாரிதிபொய்யாச்சே உ௱௰௨

பொய்யாமோவையாபுகழுறக்கண்டது
மையானசாங்கத்தால்வார்த்தையால்பொய்யென்பார்

கையாறக்கண்டதுங்காணாதேபோய்விட்
வையாசமாதியடைந்தார்க்குக்காணாதே ௨௱௯௰௩

காணாதேபோய்விடில்காணுகடனந்தான்
ஆணாதேபூணிடவோங்குந்தோனிபத்துந்
தோணாதேதோணுஞ்சுருதிமுடிந்திடந்
தோணாதேதம்முறைக்குறிப்பதுபோதமே ௨௱௯௰௪

போதமேநோக்கவும்புக்கவெளிதோதான்
நீதமாய்மெள்ளநிலையுற்றநீபாசாய்
காதமுமல்லகாண்கண்ணுக்கடுக்கக்காண்
சாதமுறையோடேதப்பாமற்பார்த்திடே ௨௱௯௰௫

தப்பாமற்பார்க்கவுந்தனஞ்செயனோனந்தி
ஒப்பாகவுன்செயலூடியொளியாகும்
முப்பாழுந்தாண்டுமுடியமட்டுந்தோன்று
மப்பாவுனக்குமேல்வாதியொன்றில்லையே ௨௱௯௰௬

இல்லையென்றுமெல்லையெங்குமபராபரம்
இல்லையென்றுமெல்லவருக்கொம்புர்பின்றென்று
இல்லையென்றுமெல்லைபேகமென்பார்காணார்
இல்லையென்றுமெல்லையெனக்கெல்லைசொன்னதே ௨௱௯௰௭

சொன்னவழிகேளுஞ்சூட்சவராட்டியன்
றன்னியகண்டத்தின்னைவத்தான்மனவடி
பன்னியவெட்டுள்பாசஞ்சமுடிபார்த்தான்
தன்னையேயான்சொன்னேன்சாதிக்கவல்லோர்க்கே ௨௱௯௰௮

வல்லோர்கள்பார்ப்பார்கள்வராட்டியன்தானாக
எல்லோர்க்குமெய்தவெளிதாச்சோமெய்ஞ்ஞானம்
பல்லோர்பரமாய்ப்பார்பிராவசாட்டியை
சொல்லோர்மயிர்ப்பாலஞ் சூட்சங்கனத்தாண்டே ௨௱௯௰௯

தாண்டிடில்வாசனைதவிடுபொடியாச்சு
ஆண்டிடில்மற்கட்டுமுழுன்றங்கிறுத்தனு
தூண்டிடிற்றசிறபரைசுடர்கோடிபானுபோற்
காண்டிடுமோனாக்கர்கடத்துவெளிபாரே ௩௱

வெளிக்குமழிவில்லைமென்மேனுமுடிவில்லை
ஒளிக்குமுடிவில்லைபூணவழியில்லை

தெளிக்கும்விரையதில்சேர்ந்தனுவுன்மனம்
வளிக்கும்வாட்டிமனமும்வெறும்பொய்யே ௨௨௧

மனந்தானேவிந்தமகத்துவமானது
மனந்தானேவிந்தவழிதாண்டிக்கூடிற்று
மனந்தானேமாயத்தில்மருவியலைந்தது
மனந்தானேநீதான்மாறுதபோதமே ௨௨௨

மாறுக்கருணைக்குள்வாழ்ந்தாரேசித்தர்கள்
மாறுக்கருணையைவாவென்றழைத்திரோ
மாறுக்கருணைதான்வாய்க்கவெளிதாமோ
மாறுதவிட்டகுறையாலும்வாச்சுதே ௨௨௩

வாய்ச்சபெரியோர்மவுனமடைவார்கள்
வாய்ச்சபெரியோர்மகாசித்தியாவார்கள்
வாய்ச்சபெரியோர்க்குமற்றுந்துயரில்லை
வாய்ச்சபெரியோர்மகத்தானபிர்மமே ௨௨௪

பிர்மவிசாரத்தைப்பேசிடும்வேதாந்தம்
பிர்மவிசாரத்தைப்பேசுமறுநூல்கள்
பிர்மவிசாரத்தைப்பேசும்பதினெட்டு
பிர்மவிசாரத்தின்பேரறியார்களே ௨௨௫

தேவாதிகள்பீசம் சாக்குவிபரம்.

அறியார்சமயத்துளாறுபேர்களும்
அறியார்கள்மாயத்தழுந்தியபேர்களும்
அறியார்களாங்காரத்தவ்வேர்பிடுங்காதார்
அறியாரறியாவறிவுள்ளோர்காண்பரே ௨௨௬

பரிச்சுக்குஞ்சூதம்பறமத்தோர்சமனிடை
துரிசிக்குமொக்குந்துலையாமனோன்மணி
வரிசித்தசாரம்வாட்டிக்குநேரொக்கும்
தரிசித்தசித்திக்குந்தன்னொக்குந்தாரமே ௨௨௭

தன்னைசூதமுந்தானுநிமிளையும்
பொனனைவிந்துபொறியுப்புநேர்சமன்
பன்னைச்சதாசிவன்பணம்போக்குங்கர்ப்பூரம்
மன்னைமயேசான்வாழ்சவர்க்காரமே ௨௨௮

வாழ்கின்றருத்திரன்றனுக்கும்பொன்னாகம்
வேழ்கின்றமாலின்விரிவெவாக்கும்வெண்ணாகம்
மாழ்கின்றகஞ்சனயகாசந்தன்னிறந்
தாழ்கின்றனிந்திரனானிறைன்கருநாகமே ௨௪௯

நாகம்வரலாறு.

கருவாஞ்சாக்குக்கலந்தவநுகனவ
மருவானதேவர்களைமகாலிந்துகாணிறு
உருவாகக்கட்டியேயோட்டினுள்வேதைதான்
திருவார்பெறுவார் சின்னமுமில்லையே ௨௫௰

சின்னமெடுத்திட்டார்சித்தர்கள்வாதிகள்
கன்னமேவாதியைக்காணுமற்றூஷித்தால்
பன்னாவிகோடிபடுவாரநாகத்தில்
தின்னவருமையால்திகைத்தேங்கிநிற்பரே ௨௫௧

சொர்க்கம்.

நிற்குநரகமும்நில்லயானசொர்க்கமும்
ஒக்கவேசொல்லியுரைத்திட்டசொன்னந்தி
தங்கமலத்திலேதானுங்கிருமிகள்
மக்கள்நாகந்தான்மைந்தனேகண்டிடே ௨௫௨

மைந்தனேகோபம்வளர்ந்தமுறைபாலே
பந்தனைச்செனமம்பலபலவாய்விடும்
செந்தந்தசென்மஞ்செனிப்பதெல்லாம்பாரும்
கந்தனைக்கோபங்கடும்பாவங்கண்டிடே ௨௫௩

நாகசொர்க்கம்.

கண்டோனேசொர்க்கத்தைக்காணும்வழியேது
நன்றானமானிடர்நாகஞ்செனித்திட்டு
பண்டேகுறையார் பாரபரநோக்கினால்
உண்டேதான்சொர்க்கமுறைத்தமுறைபாடே ௨௫௪

முறைபாடுகேட்டேன்முன்னேமெய்ஞ்ஞானத்தை
முறைபாடுகேட்டேன்முனிந்திட்டவாதத்தை
முறைபாடுகேட்டேன்மூவர்துசந்தோஷித்தேன்
முறைபாடிம்மட்டோமுனிவர்க்குவைத்ததே ௨௫௫

## குளிகையின்விபரம்.

வைத்தக்குளிகையுமகத்தானஞானமும்
ஞநமேதயுரைத்திருக்கும்பயனுஞ்சொன்னீர்
மெத்தக்குளிகைதான்வெவ்வேறூட்சமோ
உத்தபடிநானுரைத்திட்டாய்நந்தியே ௨௫௬

உரைத்தபடிகேளுறுதியாவென்மைந்தா
தரைத்தசொருபக்குளிகைமுதற்றாம்
விரைத்தவிரண்டாம்விளங்கியசூட்சங்காண்
காத்தில்மூன்றுந்தாங்கமலினிபார்த்திடே ௨௫௭

பார்த்திடுகாலாந்தாமட்டமகாசித்தி
கார்த்திடுமஞ்சாந்தசங்காணக்கமலினி
போற்றிடுமாறுந்தசங்காணும்யோகினி
ஏற்றிடுமேழாந்தாங்காண்விண்ணேகியே ௨௫௮

லேகிப்பரிசமிதிமிறுடுவெட்டாச்ச
வாகித்துயான்சொன்னவழியெல்லாநீபாரு
போகத்துமேழினுற்பொன்னுங்கெவனமாஞ்
சோகெத்துநின்றசொருபமுறைகேளே ௨௫௯

முறையாங்குளிகையைமுகிழ்ந்தங்குவாயிட்டு
மறையாதபூரணமகத்துவம்நீபாரு
நிறையான்போல்நின்றிடுமுன்திரேகமாம்
கறையானகண்டிப்புங்காணாதுகாணாதே ௨௬௰

காணாதபூரணங்கவளித்தயோகிக்கு
காணாதுவிந்தக்கடிதாங்குளிகைக்குக்
காணாதிசாய்கையுங்கண்டமுங்கற்றபேர்
காணாதுநின்மலங்கற்பூரதீபமே ௨௬௧

தீபத்தைப்போலேசிறந்துவெளியாகும்
மாவொத்தபூரணம்வாவாவென்றேகவும்
பாவொத்தவாசனையும்பலதுன்பமு
மாவொத்துப்போக்குமழியாதுகாயமே ௨௬௨

காயமழியாதுகவனம்போமாயிர
மாயமுமில்லைமகிழ்ந்ததவ்வண்டத்தில்
ஓயவேசித்தருறவாடல்மேத்துண்டு
பாயவேமார்க்கம்பரிவாகவைத்தவே ௨௬௩

வைத்ததுசேட்டுமகத்துவங்கைக்கொண்டேன்
உத்ததுசொன்னீருவட்டாவுபதேசங்
கைத்தலமேர்துங்கருநெல்லிக்கனிபோல
எத்தன்மைநாமேனைனயாண்டபோதமே ௨௪௪

ஆண்டபாபாமருளுந்தொழிற்கெல்லாம்
பூண்டகணேசன்புகழுக்குருயீசன்
நீண்டயென்னந்தியாரியல்பம்வயிரவன்
காண்டிவைவயைர்துங்களங்காறப்பூசியே ௨௪௫

## பூசைவிபாம்.

பூசிக்கப்பூசிக்கப்போட்டகுருவாகும்
பூசிக்கப்பூசிக்சப்போகும்வெருமேவதை
பூசிக்கப்பூசிக்கப்பொன்மலையோகும்
பூசிக்கப்பூசிக்கப்பூண்பாமெய்ஞ்ஞானவே ௨௪௬

மெய்யாஞ்சுரூபக்குளிகைபோடெட்டையும்
வையானநூலிலும்வாடினேம்பாருங்கள்
கையாரக்கண்டுகளங்கற்றுக்காண்பார்கள்
மையானமூடர்க்குவாதம்பலியாதே ௨௪௭

பலியாதுவாதம்பசுவானசரக்குக்கு
பலியாதுவாதம்பலமையேதூஷிக்கில்
பலி.ாதுவாதந்தான்பாவமாங்கோபிக்கு
பலியாதுவாதம்பாம்பார்க்காமூடர்க்கே ௨௪௮

## நன்மார்க்கம்.

மூடருக்கெய்யாதமுத்தியும்பத்தியும்
வீடரெனக்காடுவிட்டகுறையாலே
தாடறவாதக்கனிக்கனியேயைந்தன்
கூடுறஞானங்குலாவிபசித்தியே ௨௪௯

## சன்மார்க்கம்.

சித்திவைக்கண்டாக்சிவன்ருனவன்ருனும்
பத்தியஞானமும்பட்டம்பகலாகும்
சத்தியாங்காயந்தவருதொருநாளும்
புத்தியையுன்னியே பூரணம்பார்த்திடே ௨௫௰

பார்த்திடப்பார்த்திடப்பாழிற்படர்ந்ததிக்
கோர்த்திடவண்ணமுங்கொப்புவெளியாச்சு

சேர்ந்திடத்தாயைத்திரும்பியேயான்பார்க்க
மாத்தியமாச்சுதாயவெளிபாச்சே ௨௫௧

வெளிபாடிப்பாழில்வேறென்றீசாரென்றீர்
ஒழியாதுவென்றவுரைக்கவறிதென்றீர்
கழிவானசித்துநயபந்தமாகாசித்து
தெளிவாஞ்சிதாகாசஞ்சேர்ந்தவெளிமூன்றே ௨௫௨

மூணின்முடியின்முகிழ்ந்தமனோன்மணி
பேணிவயிற்றினிற்பேரண்டமாச்சென்றால்
வாணியாள்வார்த்தைசமகாமேகோடியாச்சென்றும்
ஊணித்துடைத்தாளேபொக்கவெறும்பொய்யே ௨௫௩

கன்னிப்பலன்.

பொய்யாச்சுதேயென்றால்போச்சுதுபொய்யாக
மெய்யாச்சுதேயென்றால்விரவிச்சு அண்டங்கள்
கையாச்சரியாமோகன்னிப்பலந்தானே
பையாச்சுபூரணம்பாரீர்விலாசமே ௨௫௪

விலாசத்திலேவிரிந்ததுசனங்களும்
விரசத்திலேவேகித்துத்தாபரம்
விலாசத்திலேவிரிந்தமனமாச்சு
விலாசத்தையுன்னிவிரைந்தேறமுததியே ௨௫௫

விரைந்தகுளிகைக்கும்வேதைக்குஞ்சித்திக்கும்
அறைந்தகுருவுக்குமபர்க்களங்குக்கும்
பறந்திடுஞ்செம்புபகார்சயகாகமும்
சாந்தயக்கன்மசந்தான்போக்குச்சத்துக்கே ௨௫௬

சத்துக்கள்சோதிக்கவகைகள்.

சத்துலகைக்குந்தனித்தனிச்செப்புக்கும்
பத்தியாக்கன்மசம்பாங்காகத்தீய்ந்திட
ஒத்துவுருகையிலூட்டமுறைகேளு
சத்தியுமஞ்சுவிதம்பாருசொன்னோமே ௨௫௭

சொன்னவளவினிற்கூட்டுவிடைநாலு
பன்னவேகாரமும்பாச்சதில்மூன்றிடை
வன்னயவீரமதிலோரிடைகூட்ட
வென்னய்பொடித்துவளமாகத்தூவிட்டே ௨௫௮

தூவவேயின்னஞ்சூட்டமுறைகேளு
காவியிடைநாலுகட்டுப்புத்தான்மூன்று
ஓவியகாரமுருப்பொடுரெண்டெடை
தாவியலிங்கந்தானேரிடைப்பூவே ௨௫௯

பூநீறு நாலெடைபொரிகாரமூன்றெடை
வானேரிணங்கன்வளமாகாண்டெடை
பானேறுவீரம் பரிவாகவோரெடை
ஆனீர்ப்பொடித்தியடவாகத்தாவிடே ௨௬௰

அடவானசெங்கல்லதுகாலுநாலெடை
படவானகாரம்பகர்ந்தவெடைமூன்று
தடவானகாரமுந்தானேயெடைரண்டு
நடவானலிங்கமும்நாடோரெடைசாம்பே ௨௬௧

## தாம்பரபற்பம்.

சாம்பலெடைநாலுகனியுப்புமூன்றெடை
வாம்பாய்காரமுமில்மாடடிவிரண்டெடை
காம்பக்கடல்நுரைகாடோரெடையதில்
தேம்பவரைத்துநிரையப்பொடித்துவே ௨௬௨

பொடியானதஞ்சம்புகழ்பெற்றசோதனை
மூடியாகக்கன்மசம்மோசனமாய்ப்போகும்
மடியாதுவொன்றுமகற்றிநிக்கோடத்தை
ஒடியாதுவொன்றுமுறப்போட்டுச்சோதியே ௨௬௩

சோதிக்கச்சத்தெல்லாஞ்சோதிமயமாகும்
சோதிக்கச்செம்பெல்லாஞ்சோதியருணனும்
சோதிக்கயங்காந்தந்துறைக்கெல்லாமுத்தமஞ்
சோதிக்குறியாட்டால்சூதத்தைக்கொல்லாதே ௨௬௪

## சூல்விபாம் இலட்சம்.

கொல்லாதசூதத்தைக்கூடாதுவொன்றிதும்
வெல்லாதுவுப்புக்குவேதையுங்காணாது
வெல்லாதுகாயத்தில்மகாசித்தியாகாது
பொல்லாதகல்மசம்போக்கித்துறைபாரே ௨௬௫

பாரென்றுமீசன்பராசத்திக்கேசொன்னார்
ஏரென்றுவஞ்சமேலட்சங்கிராந்தத்தில்

காணுமேபென்னீர்கண்மூக்குவேழுச்சு
பூணுமேயோடிப்போய்ப்பூண்டமனத்தோடே
ஊணுமேபங்கேயுறும்பாழிற்பூரணம்
தோணுமேபாச்சுடர்கொடித்தீபமே ௨௮௨

தீபச்சுடரோதான்றீக்கெல்லாங்காண்பது
தீபச்சுடரோதான்சேர்ந்தசபையினில்
தீபச்சுடரோதான்தெவிட்டாமுனைநாசி
தீபச்சுடரோதான்சிறந்ததுநாலுமே ௨௮௩

சிறந்தவிதம்சண்டிற்செய்வதெதுநன்று
உறைந்திடும்போகத்தாலூடியேமூட்டினல்
கறந்தகபாலங்கடந்தெப்பொருள்காணும்
நிறைந்தேநெடுமூப்புநின்றதுஞானமே ௨௮௪

ஞானந்தானல்லோவாலம்பதவெளி
வானந்தானல்லவோவடிவந்தயோகத்தில்
பானந்தானல்லவோபாசத்தில்கல்லூறல்
கானந்தான்மூப்பாழ்கடந்ததுபார்த்திடே ௨௮௫
பார்த்திடப்பார்த்திடப்பாழும்வெளியாச்சு
வேர்த்திடவேர்த்திடயெல்லாம்வெறும்பொய்காண்
நோர்த்திடுமண்டலஞ்சுருதிமனோன்மணி
பூர்த்திடும்பூவதும்பொய்யாச்சுநந்தியே ௨௮௬

பொய்யாச்சுதையாபுகுந்தபின்பூரணம்
நிய்யாச்சியாகவெருண்டவகைகாணேன்
செய்யாச்சுமேனிசிறந்தவாதாரம்
தையாச்சுநித்தந்தனியோசைகூட்டமே ௨௮௭

ஓசைத்திசைநாதமூண்டென்பாரெல்லாரும்
போசைக்காண்பாசமடங்காதவாசனை
கோசச்சின்னங்கொடுகோல்முனையும்போய்
மாசற்றபூரணமடியிலடைந்தோர்க்கே ௨௮௮

அடைந்தபின்மூப்பாழுடவாகத்தோன்றிற்று
முடைந்திடுஞானசரிதைமுதற்பாழாய்க்
கிடந்திடுஞானக்கிரிகையோனிப்பாழாய்
விடைந்திடும்யோகம்வெளியொளிபாழாச்சே ௨௮௯

பாழானமூன்றில் பசித்திடும்யோகம்தான்
மீழாயமனத்தாலே நின்றதுவெவ்வேறு
கோழாப்பிடாரிக் குழியில்மனமேயோடி
தாழாமைநோக்கிடிற் றயங்கேகாண்பளே ௨௯௰

காண்பளேதாய்தான்கவிந்தவிட மெல்லாம்
பூண்பாய்மனம்தான்புகழ்ந்தமனோன்மணி
ஏண்பாழ்வெளியெல்லாமெட்டாதபூரண்ம்
நான்பார்க்கக்கண்டுநலமுற்றேனத்திலே ௨௯௧

நந்திகொடுத்ததுநல்லபதியொன்று
யந்தித்தவாங்கவகண்டவெளிகாட்டும்
வந்தித்துவாங்கிடவாசிவாவென்றோடும்
பந்தித்துக்காட்டாய்பர்த்தினடித்திதே ௨௯௨

அடியிலேகட்டியகண்டத்தைநீபாரு
முடியில்மனோன்மணிமுன்னின்றுபேசுவாள்
படியில்மனம்தானேபோச்சவளாகும்
நெடியவெழுத்தாகநின்றதுபார்த்திடே ௨௯௩

பார்த்திடுநீதான்பகுந்திவ்வெளியோடி
ஏர்த்திடுமேலேயிருக்கும்வகாரம்தான்
சேர்த்திடுசண்டையும்தேசிமகாவாசி
காத்திடும்பாருகருதுமுனைநீயே ௨௯௪

முனையில்மனமோட்டிமுட்டிவிழிசண்டும்
நினைவிலேநோக்கிடநின்மலங்கண்டிடும்
கனவிலேகண்டதுங்கண்ணாறக்கண்டதும்
சுனையிலேமூழ்கும்துறைபோலுமானதே ௨௯௫

துறையாமனமொன்றித்துலங்குமனோன்மணி
நிறையாமனதுக்குநிலையாப்பிறப்பேது
கறைவாசனைபாங்கருவியாம்தோல்மூடி
மறையாப்பிறப்பாச்சுமைந்தனேகண்டிடே ௨௯௬

கண்டபிறப்பின்கருண்வயறிந்திட
உண்டியும்தேசமுறைத்திடாவென்னந்தி
தண்டியவர்சம்தனித்தபொறியஞ்சும்
வண்டார்தடித்துவக்கண்டத்ததப்பார்த்திடே ௨௯௭

௯

கண்டத்தைப்பார்த்தாலறுமேபிறவிதான்
கண்டத்தைப்பார்த்தாலழியாதவுன்றேகம்
கண்டத்தைப்பார்த்தாலட்டமாசித்தியாம்
கண்டத்தைப்பாருவகண்டமுநீயாமே உகூஅ

நீயாமகண்டம் நிகரில்லைபின்னென்று
மாயாத்திசைகளடங்கிறறவுன்னுள்ளே
ஓயாதபூரணத்துடலாமாடலாம்
பாயிரத்தண்டம்பாயுமுறைகேளே உகூகூ

பாயுஞ்சொரூபக்குளிகைவைப்பாய்வாயில்
காயுங்கமலினிகட்டிடுவுந்தியில்
வாயுசல்லட்டமாசித்தியைக்கைப்பிடித்
தேயுவைப்போலச்சிறக்கநுழைந்திடே ௩௱

திருமூலர்சேவனம்போனது.

நுழைந்திட்டேனானும்போய் நோக்கினேன்பேசண்டம்
இழைந்திட்டவண்டங் கெடியாயிரங்கண்டேன்
நுழைந்திட்டபுவனமுமிருநூற்றிருபது
மழைந்திட்டேனெல்லா மளாவித்திரிந்தேனே ௩௱௧

திரிந்தேசக்தோஷித்துத் தேகத்தைநோக்கினேன்
புரிந்தேபதமும்புவனமுமண்டமும்
தெரிந்தேமயக்கற்றேன்சிந்தைதெளிவுற்றேன்
பரிந்தேன்குளிகையில் பாக்கியமெய்யாச்சே ௩௱௨

மெய்யாச்சுவாத்தாள் வெளியிலேபூத்தது
பொய்யாச்சுஞானம்புகட்டியேநோக்கிட
நையாச்சுபிண்டத்தைநானென்றால்கண்டிடு
தையாச்சுகண்டாற்சகலமுங்காணுதே ௩௱௩

கற்பம்தின்னவயது.

காணுதுசித்தர்க்குக்காயம்வலுநிற்க
ஊணுகத்தின்னவிசைந்தமுறைகேளு
ஈணுகவயதுஇருபதில்மண்டலம்
பூணுவறுபதில்போல்ரெட்டித்திண்ணிடே ௩௱௪

திண்ணிடுதொண்ணூறில் சேர்மூன்றுமண்டலம்
பண்ணிடுதாண்டில் பலியாதுகற்பம்தான்

மண்ணிடைமாண்பரேவருந்திப்பிறக்காமல்
எண்ணிடுமேனியிளங்தைப்பருவமே ௲ா௫

பருவமாய்வாழ்ந்தாற் புலனேதோவென்னாதே
அருவமாய்வானவகண்டமதாபோகஞ்
சுருபமாய்வாய்க்குஞ்சுகசித்தியாடலாம்
திருபமாம்பாழுகிலையும்வெளியாமே ௲ா௬

வெளியானகாலத்தில்மேருவைச்சுற்றலாம்
வெளியானகாதம்விளங்கிடுமண்டலங்கள்
வெளியானகாலத்தில்மேலெட்டுஞ்சித்திக்கும்
வெளியானஞானம்வெளியில்வெளியாமே ௲ா௭

நூல்விபரம்.

ஆமேயிக்கற்பமறிந்தவர்கொள்ளுவார்
காமேவிகாரத்தாற்கசப்பென்பார்காட்டாதே
தாமேபுளியுப்புதள்ளாட்டாற்பொய்யாகும்
ஈவியுண்டதுகாட்டோர்க்குஞ்சொன்னேனே ௲ா௮

சொன்னேன்முன்வாதஞ்சுகமாங்குளிகைகள்
சொன்னேனேவசியம் துறைதோறுங்கற்பங்கள்
சொன்னேனேயோகம்துரியமாமெய்ஞ்ஞானம்
சொன்னேனறிந்தசுகயோகசித்தர்க்கே ௲ா௯

சித்தர்க்கிதைவிட்டால் தேசத்து நூலெல்லாம்
ஒத்துக்கிடவாதவுரையுந்தெரியாது
கொத்துப்படவொன்றுப் கோவையுங்கிட்டாது
வத்துநீகண்டுவெலபத்திரைபாரே ௲ா௰

பாரேயிந்நூல்தான் பட்டபகலொக்கும்
சேரேபலநூலைச்சேரிவிநட்டறை
யாரேனும்பாருங்கோளங்காதிதப்பாமல்
சீரேதுவாராட்டால்சோறுஞ்சித்தியே ௲ா௰௧

சித்தியுமாகும் தேகபழியாது
முத்தியுமாகுமேமூவுலகுக்கெல்லா
மந்தியபூரணமாகத்தேகண்டிடுஞ்
சத்தியஞ்சொன்னேன்தப்பாதுகந்தியே ௲ா௰௨

பஞ்சபொறிவித்தை

தப்பாதுலகுசகசாலக்கூத்தாச்சு
நப்பாப்பெறிதானுபர்க்கதமகாமேருங்

கொப்பானமாயக்கொடியதிரையாச்சு
வப்பாமானந்தானறியாமல்கெட்டதே ௯௱௰௩

கெட்டதிருலோகக்கேள்விமுயன்றது
பட்டிதுமின்கான்பதுந்திரைக்காசித்து
ஒட்டிதுவண்டுநற்றிபம்பூவேண்டு
மட்டிதுமான்தான்மணியோசைக்குள்ளிதே ௯௱௰௪

உள்ளானநெக்காக வோட்டிபெறும்பூர்ந்து
தள்ளாதேபுக்கித்தலைசுற்றிமாண்டது
கொள்ளப்பரிசங்கொசுக்குண்டுபட்டது
விள்ளாதேனைந்தும்விளைந்தபொறியிதே ௯௱௰௫

பொறியாலேகெட்டார்கள்பூமியிலுள்ளோர்கள்
மறியார்மனதுக்குவந்துமகாமாயை
நெறியாகநில்லாமல்நினைவையறியாமல்
இறியாருடுத்தினசிற்றாடையானதே ௯௱௰௬

உடுத்தினருணம்காமநீர்பட்டு

சிற்றாடைகட்டுஞ் சிறுபெண்ணாள்வாதம்தான்
மூத்தாசப்பெண்ணாலே மூதண்டமாத்திரை
வித்தாசப்பெண்ணாலே வியந்தவயத்தம்பம்
சுற்றேயறிந்து கடந்ததுபார்த்திடே ௯௱௰௭

பார்த்திடுமுக்குக்குப்பக்குவம்தப்பினால்
ஏர்த்திடநீருமில்லாட்டால்சிட்டமாம்
கோர்த்திட்டவாட்டுக்குமதினால்வெண்டாகு
மார்த்திடஞ்சொன்னேன் வளமாகச்செய்திடே ௯௱௰௮

கடந்திட்டால்காமநீர்காணுதுபெய்வாக
மிடந்திட்டால்சாரணையெடுக்காதுமாத்திரை
புடந்திட்டம்தப்பினால்பொய்யாகும்கட்டெல்லாம்
தடைந்திட்டரைப்பேறில்சுண்டிக்கும்பார்த்திடே ௯௱௰௯

செய்ததுரிசிசிறந்தகுருவாகும்
பைதவமேவப் பசுமையுமெத்தானால்
கைதவறென்னக்கலங்காதேமாண்பரே
வைதவுக்காமநீரதிகமாம்வார்த்திடே ௯௱௨௰

வார்த்ததுவெயிலில் வள்மாய்த்தினம்பத்து
கோர்த்துக்கிளறிக்கொடியுரசிட்டு

ஆர்த்தியெடுத்திடுஎல்லாக்குருவுக்குஞ்
சாத்தியநூல்முறைதப்பாதுகந்தியே ௧௨௧

தப்பாதுசெந்தூரஞ் சமைக்கில்பதம்தப்பில்
ஒப்பாகமுன்போலேயூட்டியெடுத்திடு
மெய்ப்பாகஞானம்விளங்குஞ்சிவசத்தி
நட்பாகப்பூசைநன்குறச்செய்திடே ௧௨௨

பூசையினங்கால்

செய்திடில்வாதம் திடமுடிபண்ணுதே
செய்திடில்வாததிற்சேர்ந்திட்டதருதே
செய்திடுவாதம்திறமாகப்பண்ணிவா
செய்திடுவாதநூல்சேரவுஞ்சித்தியே ௧௨௩
சேருமினங்கண்டு சேர்த்துநீசெந்தூரி
சேருமினத்திற் சிறக்கக்குருபண்ணு
சேருமினத்தோடு சிறக்கக்களங்காகும்
சேருமினம்தப்பிற்சேரவெறும்பொய்யே ௧௨௪
பொய்யாதென்னூல்தான் போக்கோடேபார்த்திடு
கையாரவேசெய்துகண்டுரசித்தேனான்
மையார்ந்தகண்ணிக்கு மகாவிசன்சொன்னது
வையாங்கிரந்தத்தில் வழங்கும்பொருளிதே ௧௨௫
பொருளேமூன்றுலட்சம்போக்கெல்லாநான்பார்த்து
அருளாலேநந்தியடங்கிற்றெண்ணாயிரம்
மருளாதேநின்றுவழிமேயாடிசைப்பாரு
இருளேதுவெளியேதுலகமுமொன்றுமே ௧௨௬

சித்தியில்லான்.

ஒன்றாகக்கண்டிடுவுத்தமஞானத்தைப்
பண்ணும்பொறிகள்புதையாமல்வென்றிடு
கண்ணானகற்பத்தால்காயஞ்செயம்பண்ணு
உண்ணார்ந்தலைபாதேபடங்கலுஞ்சித்தியே ௧௨௭
சித்திடேகாணச்செய்வோர்முறைகேளு
பத்தியேகோபிப்பார்பாதகனமுடன்
முத்திமபுந்திமருளான்மகாமோகி
சத்தியபொய்யோனிடும்பர்க்குமாகாதே ௧௨௮

ஆசைக்கொலைபண்ணும்பன்வெகுசோளன்
பாகாய்ப்பலபெண்ணைப் பார்த்தேங்கிப் பின்செல்வோன்
வாகானதர்மவரைதப்புமகாபாவி
சோகாவிகாரத்தான்சோம்பர்கருக்காணுதே ௯௨௯

காணா எழுந்தோர்கணுவெப தங்கை ககாய்
கோணாதேவைவோன்கொடுஞ்சிலதூஷகன்
வீணாற்பரானவெவுமைவெகுதுட்டன்
பூணாக்குருதுட்டன்புல்லோர்க்கும்பொய்யாமே ௯௩௰

ஆமேகலப்படியடங்காதகாமத்தான்
தாமைத்துடக்கன்சுகியில்லாச்சண்டாளன்
சேமேசுவ்வேடந் தெரிசிக்கில்தூஷிப்போன்
வாமேவுசொல்லர்க்குவாதநூல்பொய்யாமே ௯௩௧

நூலானதன்னூல் நுகர்ந்தவர்பார்த்தாலும்
காலாணிமாற்றுக்கனகம்பிறவாது
சேலானசெந்தூரஞ்சேர்ந்துபழுக்காது
சூலாசைபோலேசுழலுவார்துரோகியே ௯௩௨

துரோகிக்குவாதநூல்சொல்லநாகெட்டும்
துரோகிக்குஞானநூல் சொல்லிடிற்றீதைமாம்
துரோகிக்குக்கற்பத்தைசசுட்டவெகுபாவம்
துரோகிக்குக்கண்காணாத்தூரத்தேபோய்விடே ௯௩௩

சித்திகாண்பலன்.

தூரத்தேபோவென்றார்சொல்லுவதாருக்கு
போத்தவேகாந்திபிரமவிசாரத்தார்
வாசொத்தபூச்சக்ரமகத்தாஞ்சிவயோகி
தேசொத்ததர்மநிலைத்தோரைப்பார்த்திடே ௯௩௪

பார்த்திடுஞ்சாந்தம்பாதாரமிச்சிபான்
காத்திடும்வாசியைக்கண்டுகளித்தோர்கள்
வர்த்திடும்யோகத்திருந்தோபெரியோர்க்குச்
சேர்த்துங்கயிலாசம்கிட்டுமென்செப்பிடே ௯௩௫

செப்பிடில்பக்திசிறக்கவேசோதிக்கில்
ஒப்பிக்குருமுன்னேவுபசாரம்போலாகும்
தப்பிலாமார்க்கம்பார்தானிதுவாதம்பார்
அப்பிலிலுப்புப்போலமர்ந்தவிதம்பாரே ௯௩௬

அமர்ந்தால்பிழைப்பானல்லாட்டாற்பேயாவான்
தமர்ந்தமயக்கமாம் தங்கத்தைக்கண்டேன்
எமன்தானுமேதென்பானென்முன்னேயாரென்பான்
சமைந்தான்பதம்பார்த்துத்தணலைக்கைக்கொடே ௧௧௭

கொடுத்தவழிசொல்லுங்கூடிஞானத்திரள்
தடுத்தேமனந்தன்னைச்சாற்றிடுவாசிவை
அடுத்தேயிதைப்பார்த்து அப்பால்நூல்பாரென்று
விடுத்தேதொழிலைவிடுவித்துக்காட்டிடே ௧௧௮

காட்டிடு நூன்முறைகண்டதொழில்பாரு
சூட்டிடுவார்த்தைபுகழுற்றுப்பாராதே
போட்டிடுவார்த்தைபொய்யர்பின்செல்லாதே
ஆட்டிடுநூல்கண்டுஅர்த்தமறிந்திடே ௧௧௯

அறியாதகாலத்திலறிந்தவர்பின்சென்று
கிறியானைப்போலேசிறக்கத்தொழில்பண்ணு
மறியாமனத்திலேவைத்திடுநேசத்தை
செறியாகமாய்க்கும்சிலையும்தவறாதே ௧௨௰

வாக்குமேநாலொன்றுவார்த்தையால்பார்த்திடில்
ஏய்க்குமேவாதந்தானெம்மட்டும்பார்த்தாலும்
காய்க்குமேகாய்த்தால்காயாதகாலத்தில்
காய்க்குமென்தேங்காய்கலமதுபார்த்திடே ௧௨௧

மூலம்.

பார்த்திடுங்காயம்பாதத்தின்முடிவைப்பார்
வர்த்திடுவாசியினிந்தமுறைகேளு
கோர்த்திடுமூலங்குமட்டிவகாரத்தை
போர்த்திடுசிகாரத்தைப்போகாமல்சேசியே ௧௨௨

சேசித்துப்பூசித்துநின்றிடிற்குண்டலி
மாசித்துசங்கிவசனிப்பார்நீபாரு
நீசித்தோட்டேடும்சிலையாதஞானமும்
வாசித்துமந்திரமார்க்கத்தைக்கண்டிடே ௧௨௩

கண்டேகடந்துநீகஞ்சன்பதிகூடி
ஒண்டேவக்காரமுறுதியாய்நோக்கிட்டுத்
தண்டேசிகாரத்தார்தன்னுள்ளேசேசிக்க
பண்டேபிறப்பதும்பாழிப்பான்கஞ்சனே ௧௨௪

சுவாதிட்டானம்,

கஞ்சனைத்தாண்டிக் கடுமால்பதியூடு
மிஞ்சவகாரம்விளையவேபூசித்து
ஒஞ்சியேகாரத்தையுன்னுக்குள்ரேசிக்கப்
பஞ்சகரையும்போம்பாழிப்பான்மாலென்னே ௫௪௫

மாலைகடந்துமகத்தானருத்திரன்
காலையுறத்தாக்கிக்கலங்காதேநோக்கிட்டு
சாலச்சிகாரத்தைத்தன்னுக்குள்ரேசிக்க
மேலைச்சிவப்போடிவிரிவெட்டுஞ்சித்தியே ௫௪௬

மணிபூரகம்.

சித்தியாருத்திரன்சேர்ந்தபதிதாண்டி
ஒத்திமகேசனுறைகும்பதிக்குள்ளே
அத்திவகாரமசையாமற்பூரித்து
ஒத்திச்சிகாரத்தையுள்ளுக்குள்ரேசியே ௫௪௭

உள்ளும்மகேசனுறைக்கும்பாத்தடி
தெள்ளியநோக்கச்சிறுபிள்ளைதானுவான்
அள்ளுங்கனிபோலேயாகுஞ்சிவயோகம்
துள்ளியவாசிதுடியாகுசித்தியே ௫௪௮

அநாகதவிசுத்தி.

துடியாமயேசுரன்சூழ்ந்தபதிதாண்டி
அடியாஞ்சதாசிவமங்கேநீகாணணி
மடிவாய்சிகாரத்தைவைத்துநீபார்த்திடு
கெடியாக்கெவனமாம்கேளீர்மகாசித்தே ௫௪௯

மகத்தாமனோன்மணிமாதாவின்பாதத்தைத்
அகற்றுமல்வாசியையப்படியேபார்க்க
செகத்தானமெய்ஞ்ஞானஞ்சேரநீராகர்த்
மகத்தானவாசனைதானுநீயானதே ௫௫௰

நீதான்குருபதநின்றுபராபரன்
சூதானவாசியைச் சூட்டச்சிவயோகம்
காதானபூரணந் தானேதெரிசனம்
வாதம்வகாரம் சிகாரத்தின்மார்க்கமே ௫௫௧

மார்க்கமுறையோடே வைத்துவைத்தங்கே
ஏர்க்கவேபாருமேடுத்ததெல்லாஞ்சித்தி
நீர்க்கவிடமற்றுநின்றிடும்பூர்ணம்
பார்க்கமக்ராவித்தைபாருஞ்சேரண்ணடமே

## ஆக்கினைக்குருபத்தி.

அண்டமிருந்தவடவுசொன்னார்நந்தி
தண்டியதஞ்சுந்தனித்தவடுக்காக
ஒண்டியிருந்துவோடிநுழையென்றார்
கண்டிக்கமலினிகாணீர்சொரூபமே ௫௱௩

சொரூபத்தைவாய்வைத்துச்சூட்டிக்கமலினி
அரூபத்தைச்சோதிபோலண்டநுழைந்திட்டேன்
நிருபத்தசற்பம்நிறையனையோகியுந்
தருவொத்தஞானச்சதாகோடிசித்தரே ௫௱௪

சித்தனைக்கண்டேன்தெவிட்டாதேபாழிக்தேன்
ஒத்தியசித்துஉனக்கென்னாவாச்சென்றார்
அத்தியகோடியருபதுவாச்சென்றேன்
எத்தியினஞ்சித்துயின்னம்பாரென்றாரே ௫௱௫

என்றேநுழைந்தேனியலொருவண்டத்தில்
கண்டேன்சித்தனைக்கடிபதுமைப்போல
தண்டேகைகூப்பினேன் தடாவினேன்தட்டார்து
அண்டநீர்தகாசத்தடைந்தபெரியோனை ௫௱௬

பெரியோர்தனைக்கண்டேன் போய்வலம்வந்தேன்
நரியோமவுனமென்றப்பால்நுழைந்திட்டேன்
பரிவாயடுக்கொண்டு பாய்ந்துமுடியேறி
விரிவாமடுக்கில்விரைந்துநுழைந்தேனே ௫௱௭

நுழைந்திடிலண்டத்தில்நூல்பார்த்தசித்தர்கள்
அழைந்திடுநூல்சொன்னதார்தானெனக்கேட்டேன்
தனஞ்செயவிசன்தாய்கண்டுசொன்னது
களைந்தேழுலட்சங்களைகண்டுபார்த்தோமே ௫௱௮

பார்த்தோமென்றீரேபராபரசித்தர்கள்
கார்த்தேயிந்நூல்தன்னைக்கண்டுசுருககாதேன்
சேர்த்ததேசுருககச்சிவனாலுங்கூடாது
மார்த்ததேயுண்டாகில்மகத்துவஞ்சொல்வீரே ௫௱௯

சொல்விடுமென்றீர்சுகஞானசித்தர்கள்
மல்லியநந்திதான்வைத்தார்கேளாயிரம்
பல்லுயிர்பார்க்கப்பகர்ந்தேழுலட்சமுங்
கல்லுயிர்வெட்டுபோல்காட்டினார்பார்த்திடே ௫௱௰

பார்த்திடென்றீரோநீர்பார்க்குநூலெங்குண்டு
தேர்த்துமடக்குந்தெட்சணபாகத்தில்
ஆர்த்திடுவொருநூற்றறுபதாமண்டத்தில்
கோர்த்திடுசித்தர்குலாவிப்படிப்பதே ௩௬௧

படிக்கின்றநூலிற்பயனெல்லாஞ்சொல்லுமோ
படிக்கின்றநூலிலேபாச்சுமோசாரணை
படிக்கின்றநூலிற்பரிதான்குருவாமோ
படிக்கும்பதினாறும்பாங்காமோசித்தரே ௩௬௨

பாங்காமோயெட்டெட்டும்பலபலசித்தொடு
வாங்காமலாடலாமற்றோர்க்குங்கிட்டாது
தேங்காமற்றேங்குஞ்சிவயோகப்பூரணம்
தூங்காமற்றூங்குஞ்சொரூபத்தைக்காட்டுமே ௩௬௩

நூல்வழி.

காட்டுமென்றீர்நூலைக்கைக்குள்ளாற்பேர்சொல்லும்
நாட்டியவாசிக்குருநாதநந்திதான்
கூட்டினார்சித்தர்க்குக்கொடுத்தார்தானிந்நூலை
ஆட்டியமூலர்தானறைந்தநூலென்பாரே ௩௬௪

திருமூலர்.

அறைந்துநீர்சொல்லவோவென்றதிருமூலர்
மறைந்தேமயங்கியேவார்த்தையால்நீர்சொன்னீர்
குறைந்திடுமோநூலைகொடுத்தாக்கால்பூரணம்
உறைந்தேழுலட்சமுமொண்ணுக்கரிதென்னே ௩௬௫

அரிதல்லகாணுமகப்பட்டால்வாசிதான்
புரிதல்லமூலத்திற்புகட்டினால்வாசியை
எருதல்லநந்தியெழுநூறுமொன்றாகப்
பெரிதல்லோநூலைப்பேசவறிநீரோ ௩௬௬

பேசாதநூலிலேபிறந்தமுறைசொல்லாய்
வாசாமற்சாரணைமருவியகட்டினம்
நேசாக்குடோரியும்நிலைக்குந்திராவக
மாசாப்பரிக்குருவகண்டசெந்தூரமே ௩௬௭

நூல்கோர்வை.

அகண்டகளங்கமடவாஞ்சலனங்கள்
நிகண்டானசத்துக்கள்நேர்பலசெம்புகள்

பகண்ட குளிகைகள்பார்க்கிற்செயுநீருந்
தகண் டிராவகந்தானிணிக்கூட்டமே ௧௬௮

கூட்டமாமூலிக்குறையாயுதங்களை
நீட்டியவஸ்துநிலையப்பதினேழு
மாட்டியேசொன்னேனேயாயிரத்துள்ளேநான்
பாட்டியேழ்லட்சமும்பாங்காய்ப்பிழிந்தொண்ணே ௧௬௯

மூலர்.

ஒண்ணைப்பிழிந்தநூல்உத்தமாயோமூலர்
கண்ணாரக்கண்டால்கவலையகன்றிடும்
வண்ணானுரைத்ததுமாக்கியேமுலட்சம்
எண்ணாயிரம்திலஞ்சாகச்சொன்னேனே ௧௭௰

சொன்னேனேமூவாயிரஞ்சுருக்காயிரம்
முன்னேயென்னந்திதான்மூந்நூறுமுப்பதாய்
பன்னெனமூன்றுபகர்ந்தெழுமுறையாகத்
தன்னேமூலட்சமுஞ்சாதித்தேன்சித்தரே ௧௭௧

சாற்றியநூலேழிற்றப்பாதோவங்கங்கள்
போற்றியவிசனூல்போக்காதேபொட்டென
நாற்றியேவாஞ்சுவல்லாஞ்சரிபாரு
வாற்றியேநான்போறேன்வாருங்காண்சித்தரே ௧௭௨

வாருங்காணென்றுவளமாய்மருவண்டங்
கூறுங்காணேடிக்கொடுந்தியால்வேகுற்று
தாருங்காண்தப்பிதனியண்டம்விட்டுநான்
பாருங்காண்பாரென்றுபாரீரடுக்கொன்றே ௧௭௩

அடுக்கைக்கடந்துஅதுமேலேதான்தோற்ற
ஒடுக்கியேபாயிலாவுறுசித்தர்கள்
தடுக்கியமேனிதான்தங்கமுமொவ்வாது
மடுக்கியேபார்த்தென்னைவாவென்றார்சித்தரே ௧௭௪

சித்தரேயெவ்விடஞ்சேர்ந்துவிருப்பது
பதித்தசித்தாலேபாய்ந்தீரோவண்டங்கள்
முத்திக்கும்புத்திக்குமுன்காயசித்திக்கும்
எத்திக்குநாலுமக்கேயிதுவென்றாரோ ௧௭௫

என்றநற்சித்தர்களெய்தியநூல்கேளு
பண்டசிவஞ்சொற்பாரபரியென்றாய்க்கு

கண்டேகடந்தேன்கவனித்தேனிவ்வண்ட
முண்டேபதினேழுமைடயெல்லாம்பார்த்தேனே ௩௭௬

பார்க்கமுறைதான்பதினேறல்லோநூலில்
ஏர்க்கவொன்றேதுயென்னையாசொல்லென்றார்
சேர்க்கவேபாருங்கள்சேரேழுலட்சமு
மார்க்கவேபார்த்தோமதிலொன்றைக்காணேமே ௩௭௭

காணப்பொருளொன்றுகடந்தசொரூபம்
வீணாவர்கூவிவெளியாய்விடாது
தோணப்பொருளொன்றுதோன்றுஞ்சொரூபந்தான்
பூணகநந்திபுகழ்ந்தமுறையொன்றே ௩௭௮

ஒன்றேகுளிகையையுத்தமாய்நான்பார்த்து
கண்டேகளிக்கக்காத்திலேதாரயோ
பண்டேகுளிகையைப்பார்த்துநீசோபித்தால்
இண்டேயென்னகண்டபேறவுங்கூடாதே ௩௭௯

கூடாதேபோகக்குளிகையெடுப்பாரோ
ஆடோமாடோநானறிவற்றசென்மமோ
நாடாங்குளிகையைநானிட்டுத்தாரேன்காண்
தேடாங்குளிகையைச்சித்தியைப்பார்த்தென்றான் ௩௮௰

## மூலிகைக்குளிகை.

என்றவன்வாயிலேயிட்டேன்குளிகையை
யின்றியபூரணம்மார்க்கத்திற்போய்விட்டார்
நன்றேயருந்துவளாவினேன்காணாதே
தண்டிகபவினிதன்னால்தொடர்ந்தேனே ௩௮௧

தொடர்ந்தண்டந்தோறுந்தூரத்தியேயான்சொல்லிற்
கடந்தானேபேரண்டங்களையாயிரத்தெட்டும்
நடந்தானேபுவனமும்நானும்பின்சென்றிட்
வடந்தான்பதந்தாண்டியப்பாற்பிடித்தேனே ௩௮௨

பிடிக்கில்பிரிந்தான்பெரியவெளியூடே
அடக்கியமுப்பாழுமப்புறந்தாண்டினான்
நடக்குமனோன்மணிநாயகிவாசவி
பிடிக்கிபிடிக்கையிலேகினான்சித்தனே, ௩௮௩

## திருடன்குளிகைவாங்கினது.

எகினானிஷ்களையேகவெளியிலே
ஆகினான்மட்டுமவன்பின்னேசுத்தினேன்
மாகியிலைத்தானவள்மாய்கைசிக்கினான்
பாவியாவென்னைபறித்தேன்குளிகையே ௧௮௪

பறிப்பாயோநீயென்றுபாங்காகத்தர்க்கித்தான்
தெறிப்பாயேநானேறித்திரிந்துவருமுன்னே
கறிப்பானகள்ளனோசாக்கனோபோக்கனோ
குறிப்பாய்த்தொடர்ந்துகுறிசொல்லிரொன்றானே ௧௮௫

குறியேதுனக்குக்குறிகெட்டசித்தர்நீர்
பறியாச்சோவண்டத்திற்பார்த்தோர்சிரியாரோ
அறிவாட்சியில்லாதறிவிகாணயான்றந்தேன்
நெறியாச்சுதென்றுநிமிஷத்தில்வந்தேனே ௧௮௬

வந்தேயடுக்குவளமாகச்சோதித்து
பந்திக்கிழண்டம்பாய்ந்தேனடுக்கொன்றில்
அந்தித்தமேனியதிகவெண்சங்குபோல்
சிந்தித்தசித்தர்கள்சேரச்சமாதியே ௧௮௭

சமாதியைக்கண்டுசரணம்பணிந்தேகி
வமாதித்சவனம்வதுவிட்டுவோடையில்
ஓமாதித்தசித்தர்களொலிபார்க்கில்ரத்நம்போல்
குமாதித்துலாவையில்கூடிமுன்னின்றேனே ௧௮௮

நின்றவனைப்பார்த்துநீசாரென்றார்சித்தர்
தொண்டனடியேன்காண்சொற்பெறுமூலன்காண்
அண்டேயிருமென்றாரப்பனேவாவென்றார்
ஆண்டேனேசாரணைகாட்டுறார்சித்தரே ௧௮௯

காட்டுநீர்சித்தரேகடுமணிப்பேரேது
தாட்டியவட்டமாசித்திமணியிது
நீட்டிக்கமலினிநேருண்டோவில்லைபோ
தாட்டிகம்போறதுதன்மாத்திரையுண்டே ௧௯௰

உண்டென்றீர்மாத்திரையுறமேன்பிறக்காது
மண்டியதங்கம்வளமாய்க்குருகாண
முண்டியேதொந்தங்கேயோட்டிட்டுஞ்சூதத்தை
தண்டியேகட்டிடச்சார்பையறியோமே ௧௯௧

## தங்கக்குருமுறை.

அறியாததினாலோவப்பனேமாத்திரை
பறியாச்சுருக்குமகத்துவமுமில்லை
குறியாகச்சொல்லாயோகூட்டுறேஞ்சாரணை
பறிவானவண்டத்திற்பிறந்தபறிகேளே ௧௯௨

கேளேபறிதான்கெடியாயிரமாற்று
நாளேறுரத்நங்கள்நாலாற்றின்மேற்றுண்டு
வாளேயுபாசமாற்றுன்வெகுவாண்டு
தாளேறத்தாரோந்தங்கக்குரும்சொல்லே ௧௯௩

சொல்லுறேன்சித்தரேசூட்சாதிசூட்சமாய்
கல்லும்பாழக்ககவனமுங்கொடுபோக
மல்லியதீபநீர்மாருதமுண்டிட
கல்லுங்கமலினிகல்மாறகங்கேளே ௧௯௪

கேளீர்நற்கார்முகில்கெடியானமாசூத
மாளீர்ப்புளியுப்புமத்திக்கொளுத்திடு
வாளீர்விசைதான்வளமாகவன்பது
காளீர்தலமித்திரம்காட்டியுருக்கிடே ௧௯௫

உருக்கியசூதத்திலூட்டியசாரணை
பருக்கும்பிரிக்கும்பகையெல்லாந்தீதானே
தெரிக்கில்விடுவிக்கநிர்மலமாய்நிற்குந்
தரிக்கியதங்கத்திற்றுங்குஞ்சரியிதே ௧௯௬

சரியாவிச்சூதம்போற்றுக்குநியினை
வரிவாயுருக்கிமணிபோலதைவாங்கி
தரியானவிரஞ்சமைத்திடுவெண்கண்டர்
பிரிவாயிரத்தெடுபேணுங்குருவண்டே ௨௯௭

குருவண்டினோடுகூட்டிடுவண்டத்தோல்
மருவியசூதமகத்தானபூரமாம்
தருவியவேழுந்தணிக்காகம்நீராற்
பருவியனாத்துபோச்சாய்மணிக்கேதாங் ௧௯௮

மணியைரவிபடவைப்பாய்தினம்பத்து
அணியவேகாமநீரப்பிவாதித்தலும்
பிணியாத்திறிவங்கம்பேருமடர்த்துதங்
கணியவரைத்துகவசத்துலர்த்திடே ௧௯௯

உலர்ந் சுபிறகுவுறவாய்பிறிவிலே
கலந்தேநால்திக்குங்காட்டிடாய்நால்பீடம்
தலந்தேவெளியிலேதாக்குபுடமொன்று
வலந்தேகுருவாகுமற்புதஞ்சித்தரே ௬௱

அற்புதஞ்சொன்னேனடங்காப்பதிக்குரு
கற்பகமீடோகலங்காக்குருமுன்னே
நிற்புதசங்கம்நிறைந்தேறுந்தொந்தனே
நற்புதஞ்சூத்ததைநாட்டிக்குருபாரே ௬௱௧

பாரொன்றிர்மூலர்பாராபாரவென்னையா
வாரின்றிபண்ணவுமற்றோர்க்குங்கூடாது
கூரொன்றவித்தைகுருதெட்சணைகேளும்
தாரென்றதங்கமுந்தாக்குங்காண்ரத்நமே ௬௱௨

குளிகை.

ரத்தினத்தோடேநல்மானதங்கமும்
ஒத்தித்தசாரணையோர்முன்குளிகைக்கு
மத்தித்தெடுத்ததுவாய்பேச்சிருக்கையில்
கொத்தித்குகாந்தியுங்கொடியாவியாச்சே ௬௱௩

ஆச்சேகுளிகையாலப்பால்கடந்திட்டே
பாச்சேசலமாய்ப்பரவிச்சுவோரண்டம்
நீச்சேகடந்தேநிறைபநுழைந்திடில்
வாச்சேசமாதியாய்வல்லோரிருந்தாரே ௬௱௪

இருந்தோரைச்சுற்றியெழிலாய்மறுவண்டம்
பரிந்தேநுழைந்தேனன்பட்டப்பகல்போலே
தெறிந்தேநல்வரவுதிரண்டதுயவ்வண்டம்
அறிந்தேகடந்தேனடுக்கெல்லாம்போனேனே ௬௱௫

நுழைந்தேனதுக்கெல்லாம்நுகர்ந்தாயிரத்தெட்டு
மழைந்தேதிரிந்தபின்னுசையும்வர்ச்சித்தேன்
நுழைந்தேன்சகலமுமோடினேனுடினேன்
தழைந்தேசமாதியிற்றூனேனந்தியே ௬௱௬

வாசிப்பிரயோகம்.

தானேயவனுகத்தானவனுனு
ஊனநற்கோட்டமுறுதிமுத்தப்பண்ணு

வானேநல்வாசியைவைத்துவைத்தங்கங்கே
பானேபழக்கமாய்ப்பார்த்துத்தெளிந்திடே ௬௱

தெளியாதகாலத்திற்றேகந்தைத்தாக்காது
தெளியாதகாலத்திற்சித்தெட்டுமெய்யாது
தெளியாதகாலத்திற்சேராதுபூரணந்
தெளியாதமாண்பர்க்குத்திரட்டெல்லாம்பொய்யாமே ௬௱௮

பொய்யாதுவாசிப்புகழாஞ்சிவயோகங்
கையாறயேந்துங்கனியாமிதில்ஞான
மையார்ந்தகண்ணியுமாயீசன்பாழிப்பால்
எய்யாதுவெய்யுமெடுக்குங்கவனமே ௬௱௯

கவனமெடுக்குங்களிம்பதுமுன்தேகம்
புவனத்துச்சித்தர்கள்பூசித்துப்பாழிப்பார்
தவனமுமில்லைசாகாரொருநாளுஞ்
சிவனிவன்றானுஞ்சேர்வார்சிவயோகம் ௬௱௰

வாசிவாவென்றுவாசிபிலூடாடி
வாசியையங்கங்கேவைத்துநீசாதித்தால்
வாசியுமீசனுமருவியேயொன்றாகும்
வாசியைப்போல்சித்திமற்றொன்றுமில்லையே ௬௱௰௧

இல்லையேசித்தியிதைப்போலெளிதாக
பல்லுயிர்நாளெல்லாம்பார்த்தாலுங்கிட்டாது
சொல்லுயர்வாசிசுருதிமுடிந்திட
வல்லுயிர்வாதிகாள்வாசியைப்பார்த்திடே ௬௱௰௨

பார்த்திடச்சோம்பினால்பலியாதுபேய்வாதம்
பார்த்திடச்சோம்பினால்பாமுங்கிடையாது
பார்த்திடச்சோம்பினால்படுவார்பிறப்புள்ளே
பார்த்திடவல்லோர்க்குப்பகலிரவொண்ணுமே ௬௱௰௩

ஒண்ணும்வகாரமுருகுமனோன்மணி
பண்ணுஞ்சிகாரம்பகுந்தசதாசிவம்
தன்னாகாண்டொன்றாய்த்தாங்கிடப்பூரணம்
கண்ணறங்கண்டுகளித்தேநான்பார்த்திடே ௬௱௰௪

பார்த்திடென்றேசொல்லிப்பார்க்காதமாண்பர்க்கு
ஏத்தியவாதத்தெல்லாம்வெறும்பொய்யாம்
வார்த்தியமாத்திரைவயத்தம்பவித்தையுங்
காத்திரமிடப்பூனைகைப்பலனொகுமே ௬௱௰௫

## கல்லுப்புக்கட்டு.

ஒக்குமேவாதமுராம்பார்த்துசித்திக்கும்
தக்குமோதேகஞ்சதாகோடிகால்மு
மூக்குமோமேனியுருவாம்பிறப்பது
தொக்குமோவாதஞ்சொல்லாதிக்கல்லுப்பே ௪௱௧௬

கல்லுப்போவென்றுகசடரேயெண்ணாதே
நல்லுற்றவாரிதிநாயகிநாதங்காண்
வெல்லுற்றநீரிலுருப்பட்டுபாறைபோல்
வல்லுற்றவுப்பால்வளர்ந்ததுவாதமே ௪௱௧௭

வளர்ந்திடுமுப்பைவளமாகக்கட்டிட
உளர்ந்துதிரிந்தாலுமொருவாகக்கட்டாது
வறிந்திதைக்கட்டவறிந்தோர்க்குளெல்லாஞ்சாந்
தொலைந்திடாமாத்திரைசொர்ணக்குருவாமே ௪௱௧௮

## கல்லுப்பு.

குருவாகவேயுப்பின்கூறுநான்சொல்லுறேன்
விரிவாகக்கேளுங்கள்வேதாந்தமூர்த்திகாள்
பரிவாம்படிக்குப்பகிர்ந்திடுகண்டருந்
தருவாஞ்சமபாகந்தாக்கரைச்சூடனே ௪௱௧௯

சூடனையுமுன்சொல்முதல்ரண்டையும்
நீடவேவெண்கருநோயரைத்திட்டு
ஓடவேலேசாயுறவாகவில்லைசெய்
கூடாவியிற்குமட்டுதினம்பத்தே ௪௱௨௰

பத்தாந்தினத்திற்பரிந்துகுருவாகு
மத்தானகல்லுப்பைபிடித்திடுபாக்குபோல்
குத்தாக்குருபூசுகுமட்டியேவாட்டிடு
எத்தானஇந்துப்பிதன்மேலேலேபியே ௪௱௨௧

லேபித்துவாட்டநிறையெல்லாம்வெண்கரு
தாபிச்சவடுதனியாகநாற்சேரை
ஏபித்தகல்லுப்பிற்போடுமுற்சேரை
யாபித்தசுண்ணம்பதாண்டுசேரையே ௪௱௨௨

சேரையிடுநீதிரண்டிரண்டையை
பூரையரசுபொலிவாராமாறகம்

நேரொத்தசாம்பல்நிரையொன்றுக்கோர்சேரை
தாரையேயாருந்தனிவாரமூரியே ௪௨

அமூரியினாலேயரைத்திடுநன்றாகத்
திமிரியபாதியைச்சேர்த்தபூவேட்டிலே
கமரியவுப்பைக்கலகப்பதித்திடு
வமரியபாதிவளமாகமேற்பூசே ௪௨௩

பூசமருவோடுபோட்டுநீசீலைசெய்
மாசிலாவிசனைவாழ்த்திப்புடம்போடு
ஆசிலாவுப்பையடைவாயுருக்கிப்பார்
தேசித்தெறிந்தால்திரும்பப்புடம்போடே ௪௨௫

போட்டேயெடுக்கப்புகழாங்குருவுப்பு
ஆட்டேசாக்கெல்லாமப்பனேகொண்டிடும்
நீட்டேநற்சீனத்தில்நிரையாகலேபித்து
வேட்டேரவியிலுருவாகக்கட்டுமே ௪௨௬

சீனக்கட்டு

கட்டியசீனமும்கல்லுப்புச்சேர்சமன்
ஒட்டியமூரியுறவாகும்வெண்கரு
கட்டியிணங்கரலமாகலேபித்து
மட்டியவாட்டால்வளமாகவாட்டிடே ௪௨௭

வாட்டுமூரிந்தால்மருவித்தெறித்திடும்
கோட்டுதற்கூடன்குருப்பூசுவுள்கரு
காட்டியகட்டுக்கரைக்கெலாமூள்நஞ்சு
ஆட்டியப்பூசியமளியாக்கட்டிடே ௪௨௮

சாரக்கட்டு

அமளியிணங்கவடைவானகல்லுப்பு
தமளியசீனஞ்சமனாகவெண்கரு
கமளியரைத்துக்கலந்தவிடைச்சாரம்
உமளித்துப்பூசியுறவாகவாட்டிடே ௪௨௯

வாட்டியவுள்கருவளமாகநீபூசு
ஆட்டியகட்டெல்லாமப்பாமறவாதே
நீட்டியகாரம்நிமிரவேவாட்டிடு
கூட்டியசுண்ணாம்புகொட்டியெரித்திடே; ௪௩௰

எரித்திடச்சாமிறுகுமெலும்புபோல்
மரித்துப்புகைந்தால்மறுபடிநீயெரி
தரித்திரம்போகுஞ்சகலமூங்கட்டுண்ணும்
வரித்தியவாதமகப்பட்டிதுபாரே ௪௯௧

பாரேயிச்சாரம்பரிவானவெண்கரு
சேரேயரைத்ததைலேபித்துவீரன்மேல்
காரேதணல்மேலேகைம்முறையாய்வாட்டு
தாரேயிணங்கன்தசைசூதங்கல்லுப்பே ௪௯௨

வீரக்கட்டில்வேதை.

உப்பொடுமூன்றுமுறவாகமேற்பூசு
செப்பிட்டுசோடுஞ்சிலையொன்றிட்டுமே
தப்பொடுதீயில்தவறாதேவாட்டிட
ஒப்பிடுவீரமுருகியசையுமே ௪௯௩

சாரகுரு.

அசைகின்றவீரமணுகில்நவலோக
மிசைகின்றமாற்றுமெட்டரைதப்பாது
பசைகின்றசாரத்தின்மேலேபாவிடத்
தசைகின்றசாரந்தவளகுருவாமே ௪௯௪

குருவானசாரங்குறிப்பாயிடைரண்டு
மருவானவீரமாட்டிதிலோரிடை
திருவானசூதமுந்தானுமிடைரண்டு
பெருவமிர்தத்தொடுபோங்குருவண்டே ௪௯௫

துரிசுகுரு

போரகக்கட்டினசாரமுமோரிடை
வாரானகுக்குடம்வளமானவெண்மலம்
தாரானவேழும்தனிபரைவெண்கரு
ஓராந்துரிசியுமோரேழ்வாரகனே ௪௯௬

ஓரேழ்வாரகனொருகட்டியாய்வாங்கி
ஆரேழிதை பூசியடர்ந்தாவியில்வை
தாரேசலாசத்துத்தனிச்சுன்னமேற்பூசு
யாரேநற்சிலைவளமாகச்செய்திடே ௪௯௭

செய்திட்டுலர்த்தித்திறமாகமூன்றுநாள்
பைதிட்டவங்கம்பருகியுருகையில்

ஈகதிட்டமாகநீகலங்காமல்சோய்த்துவா
மைதிட்டமாகவடைவாய்ப்பதினொன்றே ௩௰௮

பதினோர்தாசந்தானும்பாங்காகத்தோய்த்திடில்
மதியோவிதுவென்னவளமாய்க்குருவாகு
மதியாஞ்சாக்குவறுபதுங்கட்டுண்ணும்
நிதியாப்பிறந்திடும்நிமிஷத்தில்கற்பமே ௩௰௯

தங்கக்குரு

கற்பகஞ்சொன்னேன்கனத்தகுருவாக
அற்பங்காண்சொன்னேனறையுறேனிந்நூலில்
கிற்பகத்தங்கம்நிலையுற்றுருகையில்
தற்பநிமிளைசமபாகந்தாக்கிடே ௪௰

தாக்கிடைரண்டுஞ்சமனாகவீரத்தைத்
தூக்கிக்குகையைச்சுழண்டுமணியாக
யாக்குந்துரிசிகுருவதில்பாதிகல்வத்தில்
நோக்குநற்சூதம்நிறைமணிப்பாதியே ௪௰௧

பாதியாஞ்சூதத்திற்பாதியிடுவீரம்
சேதியாம்வெண்கருநீட்டியரைகசையில்
கோதிக்குருவண்டுகொட்டதிலெம்பது
ஏதியாம்பூரமுமெட்டொன்றுகூட்டிடே ௪௰௨

கூட்டியரைத்துக்குமுறமணிமேலே
ஆட்டியுலர்த்து அடைவாகமூன்றுநாள்
கீட்டுங்கிளிஞ்சில்நிலவாஞ்சலாசத்து
ஆட்டியேவண்டோடு அடைவாகப்பூசியே ௪௰௩

பூசித்திடுஈசன்புகழாம்பராசத்தி
ஆசிக்கணேசனடைவாந்திசைதேவர்
மாசித்தநிருவாணிமகத்தாங்குருவொரு
ரேசித்துப்பூசிக்கநீயாங்குருவாமே ௪௰௪

குருவானதங்கத்தின்கூறுகேள்தொந்தணே
பருவாநீதங்கத்தகட்டிலேபத்தொன்று
விரிவாந்துரிசிக்குருவவ்விடைபூசு
தருவானவண்டப்பொடிக்கீழ்மேல்தாக்கிடே ௪௰௫

தாக்குகளங்கத்தயங்கிப்புடத்தைநீ
போக்குசதமெட்டும்போயெறுந்தொந்தணே

அச்சுமேரூதத்திலேரண்டுசொண்டிட
போக்குந்துரிசிக்குருபத்துக்கொன்றிடே ௪௪௬

இட்டேவாய்ரோலிழையவரைத்திடு
கட்டேயுருளுங்கபனித்தமத்தங்காய்
மட்டேபுடந்தான்வளமாய்ப்பதினொன்று
நட்டேகுளிகைநலமாயிறுகுமே ௪௪௭

இறுகும்குளிகைக்குரெட்டிப்புச்சூதம்வார்
மறுகியரைத்திடுவாய்ரோலுண்டைசெய்
குறுகுந்துரிசிகுருபூசிசற்றேநீ
அறுகுமத்தங்காயிலதுக்குள்புடம்போடே ௪௪௮

போட்டுவாயிப்படிபுடந்தோறுமட்டாக
ஆட்டுந்தொழிலிலாருக்குநான்சொன்னேன்
நீட்டுநல்வாசிகள்நின்றிடுவேதாந்தக்
கூட்டிடுஞ்சித்தர்க்குள்குலாவியொளித்தேனே ௪௪௯

ஒளித்தேகுருமுன்னேயொருகுருஇட்டல்ல
வளித்தேனேயாயிரமதுக்குஞ்சுறுக்கிது
தெளித்தேனேஞானத்தைத்தெளிவுள்ளார்க்கேசித்தி
பழித்தகசடர்கள்பார்த்தால்பலியாதே ௪௫௦

தங்கக்குருவினால்காயசித்தி

பலியாதுபாவிபாதூஷமூடர்க்கு
பலியாதுஞானத்தைப்பார்க்காச்சண்டாளர்க்குப்
பலியாதுவாசிப்பருவமறியாட்டால்
பலியாதுஈசன்பதம்போற்றுமாண்பர்க்கே ௪௫௧

போற்றியசொர்னக்குருகான்தினங்குன்றி
ஆற்றியேயுண்ணுவமர்ந்தொருமண்டலம்
மாற்றியேமேனிவளமாகச்சட்டைபோம்
தோற்றியபானுசுடராகுஞ்சித்தியே ௪௫௨

சித்தியாஞ்சொர்னக்குருவால்சாக்கெல்லா
மத்திப்புரட்டவசையாமல்கட்டுண்ணும்
வத்தித்தலோகவகைகண்டுநூறுடன்
சித்தித்தவாயிரத்தொன்றிடிலேமமே ௪௫௩

ஏமத்தைக்கண்டிஇறுமாந்துபோகாதே
வாமத்தைத்தொட்டுவளமாகப்பூசைசெய்

காமத்தைவிட்டுக்கண்டுகொள்வாசியைச்
சாமத்தசாரணைச்சாற்றுய்குளிகைக்கே ௪௫௪

குளிகையைவாயிட்டுக்காடுமலைதோறும்
அழிவில்லாச்சித்தர்களங்கங்குபோய்ச்சென்று
தெளிவுறத்திரட்டெல்லாந்தெளிந்தபின்நீகேட்டு
கழிவுறுகால்தன்னைக்காட்டாய்சமாதியே ௪௫௫

சமாதியுரைத்தாக்கால்தர்க்கரிஷியென்பார்
சமாதிகுளிகையிலாடிறைசித்தென்பார்
சமாதித்தவாசியைக்கண்டோர்சிவயோகி
புமாதித்தமுன்றும்பொருளொத்தஞானமே ௪௫௬

## கெந்திசத்து.

ஞானமபமானநல்லோர்கள்கேளுங்கள்
மானமாங்கெந்தியைவாங்கிநீகைம்முறை
கானமாங்காட்டியகல்லுப்புவோர்பலம்
ஓனமாங்காரக்குருவோர்பலம்போடே ௪௫௭

## கெந்தகச்சத்துகள்.

போடுவோர்பலம்புகழ்கட்சோரத்தை
ஓடுநற்கெந்தியுமொன்பதுவெப்போடு
தேடுந்தொகையதுதிர்க்கப்பணிரண்டு
நீடுங்கலுவத்தில்நீபழச்சாறிடே ௪௫௮

பழச்சாற்றிற்பூவெல்லாம்பாங்காய்ப்பிசைந்திடு
இழைத்தேபிழிந்துஇழுத்தரைகெந்தியை
தழைத்தேதினமொன்றுதப்பாதரைத்துவா
பிழைத்தேபூவாசன்றன்பூச்சாறுவார்த்திடே ௪௫௯

வார்த்திட்டரைமூன்றுநாளும்வளமாகக்
கோர்த்திட்டுநிற்குங்குமரிப்பூமூன்றுநாள்
சேர்த்திட்டுவொன்பதுதினமுங்கடந்தபின்
வார்த்திட்டவில்லைபோல்வாகாயுலர்த்திடே ௪௬௰

## சத்துசோதிக்கமித்திரம்.

உலர்த்தியேஞானத்திலூதுசிவயோகி
மலர்ந்தியசத்துவருங்காணுமோர்பலம்
குலர்த்திவிதைவாக்குகொட்டுமறுபுகை
அலர்த்தியுருக்கிடவடைவாதச்சோதியே ௪௬௧

சோதிக்கமித்திரஞ்சூட்டினல்காரத்தை
ஆதிவளையலதில்போடுமூன்றிடை
காதியவீரமுங்காத்திடவோரெடை
பேதித்துரைத்துப்பிலக்கப்பொடிசெய்யே ௪௯௨

பொடியையுருக்கையிற்போட்டுவாசோதனே
படிவாகவித்தைவாங்கிரவிகாணு
மடியுமளவுமடைவாகச்சோதித்தால்
கேடியாவிகாணுங்கேளீர்நற்சித்தரே ௪௯௩

தங்கச்செம்பு.

கேணிசிடுசெம்புகெடிநூறிடுதங்கம்
வானீருருக்கமகத்தாம்பரிச்செம்பு
வானீரிதமடைவாய்க்கோடிக்கவா
ஆணிவேர்ப்பண்ணிவைப்பாய்குளிகையே ௪௯௪

குளிகையெடுத்துக்குமட்டிவலக்காங்
தெளிவாகவேகட்டிச்சிந்தித்துவாசியை
நெளிவாகப்போக்காமல்நிறுத்தியேயுள்ளுருக்குள்
ஒளிவாகவாயிட்டுவோடுங்கவனமே ௪௯௫

ஓடலாமெங்குமூலாவலாமண்டத்தில்
தேடலாம்பூரணந்தெளிவாநாமதுவாச்சு
தேடலாஞ்சித்தர்திரட்டெல்லாம்பாவித்து
கூடலாம்ஞானக்குறிப்பங்கில்நாமாச்சே ௪௯௬

பரிச்செம்பினல்காயசித்தி

ஆச்சேயிச்செம்புவாத்தாளிடநாதம்
போச்சேவெகுதூரம்பூட்டதில்தொந்தனே
மாச்சேமதிமேலேவைப்பாயிரத்தோன்றும்
காச்சேகனகக்கனமானமாற்றிதே ௪௯௭

மாற்றும்பரிச்செம்பைமாட்டிக்குருபண்ணு
ஆத்தாளுந்தந்தையுமறைந்தரகசியம்
எத்தாங்குருவீசயேழுநாள்தின்றிடே
ஊத்தாநல்தேகமொளிபார்க்கில்சூக்ஷமே ௪௯௮

சூக்ஷமேகண்களுக்கொடியரவியொப்பாய்
மாசுமேதேகமுமதகற்கிலேயாகும்
பேசுமேபூரணமும்ளமைப்பிரியாது
வாசிமேல்வாசிவாசியவனுமே ௪௯௯

அவனாகவேவாசியவ்வாசிதானாக
சிவனாகவேநின்றசித்தர்மகாரிஷி
மவுனசமாதியில்வாழ்வார்வெகுகோடி
புவனத்தில்வேதாந்திபுண்ணியர்க்கெய்துமே ௪௭௰

எய்திடுங்கல்லுப்பாலெட்டெட்டுமோடலாம்
கைதிடுமேருகவனமுமோடலாம்
வைதிடுஞானத்தகண்டத்திலூடலாம்
பைதிடுவாசிபலிக்கின்றகாலமே ௪௭௧

காலமேதென்றுகலங்காதவல்லோரை
கோலமேயாறுகுறிப்பானசக்கரம்
ஞாலமேயங்கங்கேசொன்னேனதுதெய்வம்
பாலேயேயட்சாம்பாங்காயறிந்திடே ௪௭௨

அண்டவுற்பத்தி.

அறிந்துநீயங்கங்கேயடைவாய்ப்பழகிவா
வறிந்துநீபுத்தியில்வைத்திடுவாசியை
எறிந்துநீயேறியெடுத்ததெல்லாஞ்சித்தி
பறிந்துநீயண்டத்திற்பாயுமுறைகேளே ௪௭௩

கேளேநீயண்டங்கெடியானவுற்பனந்
தேளேபிருதிவிதனில்மேல்சலமாச்சு
கேளேகேள்வன்னிக்கெடுங்காலத்தின்மேலே
வாளேவெளிவானம்வளர்ந்ததுவண்டமே ௪௭௪

அண்டத்தின்மேலேயடர்ந்ததுபூமிதான்
பண்டுத்தபூமிமேற்படர்ந்ததுவப்புனல்
தண்டப்புவிமேற்சார்ந்ததுவன்னிதான்
கண்டத்தழல்மேற்கலந்ததுவாயுவே ௪௭௫

பிண்டவுற்பத்தி.

வாயுவுமேலேமருவிற்றுவாகாசம்
காயுமோரண்டத்தில்கண்டகுறிப்பிது
பாயுமோராயிசத்தெட்டுக்குமிப்படி
பாயுமோர்பிண்டம்பரிந்துநீபார்த்திடே ௪௭௬

பார்த்திடுமாங்கிஷம்பரித்தபிருதிவி
வார்த்திடுரத்தம்வழலையிளிராச்சு
தோற்றிடுவாய்வுசுழண்டேறிப்புக்கிற்று
காற்றோடுதீயுங்கலந்தேவிழும்பிற்றே ௪௭௭

கலந்தேசெவிக்குள்ளேகண்டுதுவாதச
மலந்தேயிடையின்சண்டாச்சுராரிதி
குலந்தேசுழிமுனைகூடிற்றுமேருவாய்த்
தலந்தேவிண்டத்திற்சார்ந்தமுறையாச்சே ௨௭௮

ஆச்சேயிப்பிண்டத்துக்காதாரம்பூமிதான்
வாச்சேபூமேலேவளர்ந்ததுவப்புனல்
காச்சேபுனலுக்குள்கடுந்தீகாண்பானுவும்
தேச்சேயிரைஞ்சுசுழல்வாய்வுமேல்விண்ணே ௨௭௯

விண்ணூற்றவண்டம்விரைந்தபின்பண்டத்திற்
கண்ணூற்றுற்போலவேகண்டிடுசிற்றண்டம்
பண்ணூற்றபேரண்டம்பார்த்ததுமிப்படி
தண்ணூற்றமேருதலைவீற்றுருவனே ௨௮௰

துருவன்றலைக்குள்சுழண்டவினங்களும்
பருவாவிபதிமற்றுள்ளகோள்ராசித்
தருவிபிருபதுதானேழாமரோகணி
மருவிப்பாவும்பலபலமீன்களே ௨௮௧

பலபலபேர்சொல்லிப்பகர்வார்பெரியோர்கள்
வலவியசெக்குப்போலாடிற்றுவவ்வாலை
நிலாவித்துருவனும்நின்றதமரோடும்
கலவிக்கவனங்கலந்தோடுமண்டமே ௨௮௨

அண்டத்துப்பக்கமசையாதுவல்லோடு
வெண்டுற்றுப்பாய்ந்தாலும்வாகாயழியாது
உண்டுற்றுமேலோடுருகுமறிவாக
வெண்டுற்றசித்தரிதங்கண்டுபாருமே ௨௮௩

கண்டுகண்டண்டங்கடந்தோடிநீபாரு
பண்டுவுரைத்தபழக்கத்துடனேநீ
அண்டிடுமாத்திரையாருக்குங்காட்டாதே
ஓண்டிடுறவ்வென்றுமாத்திரையோடிடே ௨௮௪

மூலாதாரம்.

ஓடிடும்போதுவொருமித்துவாசியை
நாடிடுதிக்கைநலமாயிதத்தெண்ணி
கூடிடுமார்க்கத்திற்கோடிகாண்சித்தர்கள்
ஆடிடுமார்க்கமறிந்துகொள்மூலமே ௨௮௫

மூலமிருந்தமுறைகேளுமண்டம்போற்
சோலமதின்மேலேகுளாவியகாலிதழ்
சீலநடுவேசிறந்திடுமுக்கோணம்
மாலபன்மூன்றிலமர்ந்தசிகாரமே ௪௮௬

சிகாரமேமுத்திற்சிறந்தமுனையொன்றில்
ஓநாரவடிவாகியோமென்றுகுண்டலி
நகாரமுதலாறுநற்சக்கரமையம்
மகாரக்குருதாளளாவியிரங்கிற்றே ௪௮௭

இரங்கிப்புருவமிடைக்குள்ளேநின்றது
தாங்கித்தமாவாசல்தாளாகிநின்றது
மாங்கித்தமூலமருவுமிதழ்நாலில்
அரங்கத்தவர்முதலறிவானசார்விடே ௪௮௮

இட்டதுநாலுமிருந்தசிகாரமும்
ஒட்டியேபாய்ந்துவருமுனைவல்லபை
கட்டிமுனையொன்றிற்கணபதியேநிற்பார்
மட்டானகுண்டலிவாய்க்குள்ளேநந்தியே ௪௮௯

## சுவாதிட்டானம்.

நந்தியைப்பார்த்திடுநாட்டுசிகாரத்தை
அந்திவகாரமடைவாகவேபூரி
பந்தியவேதம்பலபலநூலெல்லாஞ்
சிந்திக்கத்தோன்றிடுஞ்சேருவைவாசியே ௪௯௰

சேருந்தினந்தான்றெளிவாகக்கண்டிடு
பாருவிடாமலேபாழிப்பானென்னந்தி
கூறுதுதாண்டக்குலாவியசக்கரம்
சேறிதழாறுஞ்சுவாதிட்டானமென்பரே ௪௯௧

என்பாரிதழாறிலிருக்கின்றவட்சரம்
வன்பாம்பகாரம்வகுத்தலவ்வோடாறும்
தம்பால்நடுவேசதுராம்நகாரங்காண்
இன்பாகவாணியிருக்கும்பிரமனே ௪௯௨

## மணிபூரகம்

பிரமனைப்பார்த்துபோயிற்றெளிந்துநீ
அரமனைக்குள்ளேயந்தித்துவாசியை

உரபனைத்தாக்குவோடிலுமோடாது
திரமனையோடுஞ்சிவயோகியாகுமே ௪௯௩

ஆகின்றசக்கரமதி "மேல்மணிபூரம்
பாகின்றியேநிற்கும்பாய்ந்துவிதழ்பத்தாய்
வாகின்றபத்தினில்வரைந்தவெழுத்துகேள்
போகின்றடாமுதல்புகழாம்பகாரமே ௪௯௪

புகழாறுமையையும்பொலிந்தபிறைபோலே
மகழாமகாரமருவியிருந்தது
திகழானமாலும்திறையானலட்சுமி
அகலாதிருப்பார்களப்பனேபார்த்திடே ௪௯௫

அநாகதம்.

பார்த்திடுவமர்போகம்பாலிக்குமாயோகம்
காத்திடுநீதான்கருமேகவண்ணனை
கோத்திடுவாசிக்குமட்டியதிற்பாரு
ஆத்திடுமப்பாலநாகதங்கண்டிடே ௪௯௬

சக்கரம்.

கண்டிடுசக்கரங்காணிதழ்பனிரண்டு
தண்டியெழுத்தின்சாற்றமுறைகேளு
அண்டிடுசக்கரமுதலாகவவ்வரை
ஒண்டிப்பனிரண்டுமுறுதியாய்நின்றதே ௪௯௭

முக்கோணம்

நின்றநடுமையம்நேசாகமுக்கோண
மண்டிசிகாரமதுக்குள்ளேநின்றது
தண்டியருத்திரன்தாயானபார்வதி
அண்டித்தொழுதுநீயாட்டிடாய்வாசியே ௪௯௮

விசுத்தி.

வாசியையாட்டமகத்தானமனதுடன்
ஓசியேபாறுவொருகோடிபோலொளி
தேசியின்தேசுசிறக்கவதிற்பாரு
ஆசியைத்தாண்டியதன்மேல்விசுத்தியே ௪௯௯

விசுத்தியிதழ்தான்விளங்கிப்பதினாறு
வசுத்தியவட்சாமாமுதலீரெட்டும்

பசுத்தியிதழ்க்குள்பாவியேநின்றது
ஓசித்துநடுமையமோராறுகோணமே ௫

கோணநடுவேகுவிந்தவகாரங்காண்
ஆணமயேசுரமாத்தாள்மயேஸ்வரி
பேணியிருந்ததுபோனகண்டங்காண்
பூணப்பாததின்புகழாமடியிதே ௫௱௧

அடியிலேவாசியசையாமல்வைத்திட
முடியிலேகொண்டுபோய்முட்டுமதுபாரு
கொடியிலேயோடிடுங்கூப்பிடும்பூரண
மடியிற்கனிபோலேவாய்க்குங்காணமே ௫௱௨

வாய்க்குந்தலமேல்வளமானவாக்கினே
காய்க்குமிதழ்ரண்டுகாணெழுதாட்சிகாண்
பாய்க்குநடுவேபகுந்ததைகாரங்காண்
வாய்க்குஞ்சதாசிவம்வட்டமணியெண்ணே ௫௱௩

மணியாமனோமணிமாதாவைநேசித்து
அணியாயதற்குள்ளடைவானவாசியைப்
பணியாகவேபூட்டிப்பார்த்திடுயோகிக்குத்
தணியாம்ரிஷிராசனதானுகுந்தப்பாதே ௫௱௪

வன்னம்,

தானாகநின்றசட்சக்கரவர்ணங்
கோனாகுமூலங்குமட்டியபொன்னிறங்
தானாளுமதுமேலேநாலங்குலந்தாண்டல்
வானனகஞ்சந்தன்வர்னம்வெளுப்பென்னே ௫௱௫

அங்குலம்

வெளுப்பானகஞ்சன்றன்மேலாறுவங்குலம்
விளுப்பானமால்தான்விரைந்தகருநிறம்
தளுப்பாதிமேலேதானெட்டுவங்குலம்
மளுப்பானருத்திரனகண்டசிவப்பென்னே ௫௱௬

குருபதம்,

சிவந்தமதிமேலேசேர்பத்துவங்குலம்
மவன்தான்மயேஸ்வரநாதனுமைபச்சை

அவ்தானங்கேய நின்மேற்பனிரண்டில்
தவந்தான்சதாசிவன்தானஞ்சவர்ணமே ௫௱எ

வன்னங்கள்சொன்னேன்வளர்ந்தங்குலஞ்சொன்னேன்
தன்னங்கெழுந்தோடுசார்ந்தவிதஞ்சொன்னேன்
பன்னங்கள்வாழ்ந்தபதிதேவதைசொன்னேன்
உன்னங்கள்வாசியையூட்டிடுதப்பாதே ௫௱அ

தப்பாதேதாண்டத்துதானுங்குருபதம்
ஒப்பாயிதற்காணவோராயிரத்தெட்டு
கோப்பாநடுவேகுறிப்பதுவைங்கோணம்
அப்பாஅகாரஉகாரமகாரமே ௫௱௯

மகாரத்துடனேன்மருவியநாதங்கேள்
பகாரத்தைவிகதுப்பரிவாயிதுவஞ்ச
ஓகாரத்துச்சோதியொளிபோல்வெளியாகி
ஙிகாரத்தநின்மலம்நின்றவடிவாமே ௫௱௰

வடிவாமிடத்திலேவைத்திடுவாசியை
நெடிவாய்ப்போகாமல்நிறுத்தியதிற்பாரு
குடிவாம்பிலப்புறுங்கொண்டிடும்பூரணம்
வடிவானவேதாந்தவாதிப்பொருளிதே ௫௧௧

பொருளாமதில்நின்றுபோக்கோடேமேல்நோக்கச்
சுருளாந்துவாதசங்கோற்றுமதினேறு
வருளாமுனைமூக்கடைந்தால்மகாஞான
மருளாய்ப்பிடரியில்வைத்திடுயோகமே ௫௧௨

யோகமாங்குண்டலியோகத்தைநோக்கிட
பாகமாய்க்கீழேபதினொன்றுகண்டிடும்
நாகமாய்நின்றநடுமையம்நோக்கினல்
ஆகாமல்ருத்திரனழல்கோடிபானுவே ௫௧௩

பானுவுக்குள்ளேபுருதிமூறையஞ்சும்
நாளும்படியாகநாசியிற்பாய்ந்திடில்
தேனுவுமீதினிற்றெளியாதஞானங்கள்
வானுவாம்வாசியைவைத்துநீபார்த்திடே ௫௧௪

பார்த்திட்டேன்பானும்பழுவியிம்மார்க்கதை
கோர்த்திட்டவண்டத்திலகூசாமலோடினேன்

நாத்திட்டவண்டமடங்காப்புவனமும்
பேர்த்திட்டவந்தோடுபூரணங்கண்டேனே ருகரு

கண்டேனேகாட்சிபைக்காரணர்காட்டிட
விண்டேனேசித்தர்க்குவெளிபாய்த்தொழிலெல்லாம
பண்டேகுளிகைப்பருவமெல்லாஞ்சொன்னேன்
கொண்டேமுன்னுபிரங்கூறினேனேந்தாறே ருகசா

ஐந்நூறுசொன்னேனனைவானசித்தர்க்கு
ஐந்நூறுசொன்னேனகண்டமெய்ஞ்ஞானிக்கு
ஐந்நூறுசொன்னேனடியேன்சிவன்சொல்ல
ஐந்நூறும்பார்த்தோர்க்காதிமகாசித்தே ருகஎ

சித்தாகவேண்டினூற் சேர்ந்துண்ணுங்கற்பத்தை
வைத்தானவாசிபைவைத்துவைத்தேபாரு
கொத்தானவாசையுங்கோபமும்விட்டிடு
உத்தாருணக்குஓநகோடிசித்தரே ருகஅ

கோடிதுறைசொன்னேன்குலாவியவாதத்தால்
ஆடியேபார்த்துஅழியாதேபொன்னுலே
நாடியேநாவின்ருசிபாலேவண்டுபோல்
ஊடிக்கமலத்தொடுங்காதேசித்தரே ருககூ

ஒடுங்கிச்சகமெல்லாமொட்டியிறந்தார்கள்
அடுங்கியசாங்கத்தகண்டநானென்பார்கள்
எடுங்கியவசமெறிந்கவலேசிக்கி
நடுங்கித்தளர்ந்துநவில்வார்களெய்யாதே ருஉய

எய்பாதுசாங்கத்தெளிதாகமெய்ஞ்ஞானம்
மையாகமூலகத்தில்வாழ்ந்தேயிருக்கையில்
பொய்யாமோகண்டதுபுத்திதான்கெட்டதோ
கையாறவாசிதான்கண்டபின்சாங்கமே ருஉக

சாங்கமாயான்சொன்னசடாதாரமார்க்கமும்
ஓங்காக்குருபதமுயர்வோடுவஞ்சிலும்
பாங்காகப்புத்தியாற்பகுந்தேமனமுன்னி
வாங்காமற்பார்த்துமகத்தானசித்தமே ருஉஉ

சித்தஞ்சிவன்காண்சேர்வனஞ்சத்திகாண்
ஒத்தநற்புந்தியுறுதிமகாயோகம்

கொத்தாசமூன்றுக்குங்குடிலங்காணுகாரம்
பத்திலல்லாங்காரம்பாவத்துக்கேதுவே ௫௨௩

## சூதசுத்தி.

ஏதுவாய்நின்றவெழிலானசூதத்தில்
கோலவாய்நின்றகுடிலமையவேழு
கேதுவாய்ப்போகாட்டால்செவனமெடுக்காது
வாதுவாம்வாதத்துக்காகாதுவாகாதே ௫௨௪

ஆகாதகன்மசமகற்றமுறைகேளு
வாகானகல்லுப்புமாட்டுசமபாகந்
தாகாக்குமரிப்பூச்சாற்றரைமூன்றுநாள்
பாகாய்க்கழுவிப்பதனமாய்வாங்கிடே ௫௨௫

## சூதக்கட்டு.

வாங்கிட்டசூதம்வளமாய்ப்பலம்ரண்டு
தாங்கிட்டசட்டியில்தானேயுகைவார்த்து
ஓங்கிட்டவண்டோடுடன்சூடக்கண்டரும்
பாங்கிட்டசாரமும்பாரிருகாரமே ௫௨௬

காரத்துடனேகடுகியாண்டுப்பு
வாருற்றவப்பிரேசம்வாங்குநவநீதம்
நேரொத்திடவேநிலையாகவொன்பதும்
தாரொத்தமுரியால்தாக்கியரைத்திடே ௫௨௭

அரைத்தேகலச்சுவமுரிப்படிநாலில்
விரைத்தேசூதத்தில்விளச்சிச்சுறுக்கிடு
தாத்தேயிறக்கிநீதான்வாங்குபிகட்டியை
துரைத்தேபடிநாலுசூட்டாயமுரியே ௫௨௮

சூட்டிக்கலக்கிச்சுகமாய்மறுவிசை
ஆட்டிச்சுருக்கிடுவப்படிச்சூதத்தில்
தீட்டிப்படிதாணிலையாச்சுறுக்கஞ்சு
மாட்டியேபூட்டிவளமாகவாங்கிடே ௫௨௯

வாங்கியேகல்வத்தில்வைப்பாய்பணிப்பட்
ஓங்கிரிதுவாயொழுகுஞ்செயநீர்ப்
போங்கிச்செயநீர்போட்டரைகற்பூரம்
பாங்கியசூதத்திற்பாய்ச்சிச்சுருக்கிடே ௫௩௦

சுருக்கிடச்சூதந்தான்றுள்ளாது வாலையாம்
மருக்கிடுக்காதுமகத்தாங்கனலுக்கு
ஒருக்குந்தொழிலுக்குமோடுங்குளிகைக்குஞ்
செருக்குமிதைவிட்டால்திரட்டெல்லாம்பொய்யாமே ௫௰௧

திரட்டுந்தொழிலுக்குஞ்சேர்ந்தகுளிகைக்கு
மருட்டிபசூதத்தைகவளமாகச்சுத்திசெய்
அருட்டியேசுத்திக்கச்சத் துநிபூட்டினல்
பிரட்டாகும்பாருபோானசித்தரே ௫௰௨

போானசுத்தியிற்பெலப்படுமேசூதந்
தாரானதீபனந்தானுருஞ்சாரணை
காரணைபோலேகவனங்கொடுபோகும்
ஆரார்கள்பார்த்தாலுமப்பனேதப்பாது ௫௰௩

தப்பாமலிப்படிசாக்காணதெட்டெட்டும்
ஒப்பாய்ச்சுறுக்கிடுவூறலபோய்ச்சுத்தியாம்
கோப்பானவேதைகொடுக்கமிகநன்று
இப்பாலிதைவிட்டாலெய்பாதுவாதமே ௫௰௪

இரும்புருக்கு.

வாதம்பிறந்ததுமகத்தாமிரும்பிலே
போதவிரும்புண்டால்புகழ்காயசித்தியாம்
தாதாவிருப்புகனிலெண்பதாங்கற்ப
மாதாவிரும்பைவளமாயுருக்கிடே ௫௰௫

உருக்கமுறைகேளுவுள்ளொளிவேதாந்தி
பருக்கியசாரம்பரிவாம்பொரிசாரஞ்
செருக்கியவீரஞ்சிறந்தொருலிங்கம்
மருக்கியதாளகமன்னுநற்சூதமே ௫௰௬

சூதத்தோடாறையுந்தூக்காறுகாசிடை
வேதத்தோடொத்தவெடியுப்புநீர்வார்
வாதத்தைப்பூசித்துவாகாயரைத்திடு
நீதத்தோடாறும்நிலையாகக்கட்டுமே ௫௰௭

கட்டுஞ்சாக்கோடுகாசிடைபூநாக
மட்டுறுவாளமவளருமுட்காவேலை
எட்டுமேனியாசெழுவாம்பருப்பொடு
வெட்டுருவெப்பம்விரையின்பருப்போடே ௫௰௮

பருப்புடனஞ்சம்பகுந்தஞ்சுகாசிடை
அருப்பொடுமுன்னூறுமாகப்பதினொன்றும்
விருப்பொடரைநீவெடியுப்புநீர்வார்த்து
கருப்பொடாப்பொடிதானும்பலம்ரண்டே ௫௩௯

செண்டையுங்கூட்டிநிமிரப்பிசைந்திடு
ஒண்டையுருக்கியுறவாகத்தாக்கிலே
தண்டியுருக்கித்தானேமணியாகும்
மண்டிமணிபையடைவாய்நூறுக்கிடே ௫௪௰

அடைவாய்முன்போலேயளவாய்ப்பதினொன்றும்
படைவாகக்கூட்டியேபாய்ச்சியுருக்கிடு
கடைவாகவேழ்தாங்கபளித்துருக்கிடு
தடைவானசோதனைதாக்கிநீசோதியே ௫௪௧

சோதிக்கலோகந்தான்சொர்ணம்போல்நின்றிடும்
மாதித்திரையில்லைமற்றுஞ்சவடில்லை
ஆதித்தபாஷாணமறுபதுமுட்கொள்ளும்
பேதிக்குந்தேகம்பிறக்குமிதிற்பொன்னே ௫௪௨

பொன்னாகவேண்டினால்பூட்டிநல்லிங்கத்தைப்
பொன்னாகவேண்டினால்பூட்டதில்நாகத்தை
பொன்னாகவேண்டினால்பூட்டுநிமிளையை
பொன்னாகவேண்டினால்பூட்டுநீதுத்தமே ௫௪௩

பூட்டுரசத்தைப்புகழானலோகத்தில்
நீட்டுநீதங்கமுநேராமிடையொன்று
ஆட்டுமணக்குள்ளேயந்தஇடைகெந்தி
கூட்டிப்பொடிசெய்துகுப்பிக்கெடுத்திடே ௫௪௪

எடுத்தேயெரித்திடுஇயல்பாயறுசாமம்
படுத்தேசெந்தூரம்பவளநிறமாகும்
அடுத்தேநீகுண்ணியமர்ந்துண்ணமண்டலம்
கடுத்தேயுன்றேகங்கல்லுஞ்சமனாமே ௫௪௫

கல்லானமுன்றேகங்காத்தால்மலைகூத்து
சில்லாகும்தாளாகுஞ்சித்துமதுபாரு
வெல்லாவிரும்பினைவேண்டும்போதுண்ணலாம்
வல்லானசித்தரேவச்சிரதேகமே ௫௪௬

தேகமிருந்தல்லோசித்தெல்லாமாடலாம்
தேகமிருந்தாக்காற்சேரலாம்பூரணம்
தேகமிருந்தாக்காற்றிரட்டெல்லாம்பார்க்கலாம்
தேகமிருந்தாக்கால்சேரவிழலாமே ருசஎ

சேரவேகற்பஞ்செலுத்தியகாலத்தில்
ஆரமதிமேலேயாத்தாளேபோரு
தாரவேமூலத்தணலைப்பிறப்பிக்கும்பார்
கோரவேகற்பங்குமட்டிச்செரிக்குமே ருசஅ

செரிக்கின்றகாலத்திற்சேருஞ்சமாதியைத்
தரிக்கின்றமாயைசாராதேவிட்டிடு
மரிக்கின்றவார்த்தைதான்வாராதொருநாளும்
அரிக்கின்றவேதத்துரியங்கைச்சிக்குமே ருசகூ

சிக்கவேயாத்தாளைச்சிராகவாமத்தில்
ஒக்கவேயண்டமுடன்மாங்கிடமது
பக்கம்பலகாரம்பாபஞ்சுபாத்திரம்
திக்கெட்டிற்பூசையுஞ்செய்திடிற்சித்தரே ருருய

சித்தாகவிசனுஞ்சேர்திருவாணிக்கு
கொத்தாய்வடியுங்குடத்தில்மதுவும்வை
பத்தானமாங்கிஷம்பரிமளம்பூச்சாத்து
முத்தானதீபத்தால்முன்னிட்டுப்பூசியே ருருக

பூசித்துவன்பாய்ப்புகழ்ந்தேத்தியர்ச்சித்து
மாசித்துத்தாவென்றுமாதாவைநீகேளு
காசித்தியாகுங்கவனங்கொடுபோகும்
வாசித்துவாதமலர்ந்துவணங்குமே ருருஉ

வணங்காமலர்த்தாளைவாதத்தைப்பார்ப்போர்கள்
பிணங்கானவர்கள்பேசாதேயிந்நூலை
இணங்காதவனோடேயெய்யாதுசித்தெல்லாம்
தணங்காள்நிருவாணிசண்ணுவாள்தப்பாதே ருருங

தப்பாமல்நாதாங்கள்சகலரிஷிகளு
மொப்பாமறையோருயர்ந்தமெய்ஞ்ஞானிகள்
எப்பானவேதாந்தமெவ்வகைச்சித்தரு
மப்பாவிவர்கள்தானர்ச்சிக்கும்பூசையே ருருச

பூசையறியாட்டாற்பூட்டாதேசூதத்தை
பூசையறியாட்டால்போடாதேவேதையை
பூசையறிடாட்டாற்புருமையம்பாராதே
பூசையறியாட்டாற்பொய்யாகும்நூலெண்ணே ௫௫௫

நூலேதுசெய்யும்நுழையாட்டால்வாமத்தில்
பாலோடுவன்னம்படைத்தாலும்பாங்கல்ல
கோலோடுசூலமுங்கோடிநிருவாணி
மேலோடுமெண்டம்விரியவறைவாமே ௫௫௬

## நாகசுத்தி.

அறைடாமலீசனகலாமல்வாதங்
குறையாமல்வாமத்தின்கூறோடுபூசைசெய்
நிளற ாகநில்லுநிமிஷத்திற்சித்தியாம்
துறைபாமுறையெல்லாஞ்சொன்னேனென்சித்தரே ௫௫௭

சித்தானநாகம்திறமாகக்கட்டுண்ண
மத்தானசித்தரேவகையாகக்கேளுங்கள்
கொத்தானநாகத்திற்குத்துநுணலைநெய்
சத்தானசாரத்திற்றன்னுக்குள்சாய்த்திடே ௫௫௮

சாய்த்திடுங்காலம்தணல்வைத்துருகையிற்
பாய்த்திடுநெய்யைப்பருவமாய்க்குத்திவா
காத்திடவாருகலருபதினொன்று
ஆத்திடும்வில்லைபோலாகுங்காண்சுத்தியே ௫௫௯

## நாகக்கட்டு.

சுத்தித்தநாகத்தைச்சூட்டிக்குகைவைத்து
பத்தித்தகல்லுப்பும்பாங்காம்வெடியுப்பும்
ஒத்தித்தகாரமொருமூன்றுகட்டினம்
மத்தித்தநாகத்துக்கந்தவிடைமூன்றே ௫௬௦

மூன்றும்பொடித்துமுழங்கவேதூவிவா
ஊன்றியேவாங்கிபுறவாகக்கட்டுண்ணும்
நீன்றியநாகம்நிலைத்தாடுங்கண்விட்டு
தான்றிப்புகைத்திட்டார்தாக்குமுறையொன்றே ௫௬௧

முறையானநாகமுதற்றாக்கட்டிது
அறையானசூதத்தையமளிலன்டுயாய்க்கொகம்

துறையானசாரமுஞ்சூழ்கட்டுங்காரமும்
நிறையாய்ப்பொடிசெய்துநீட்டிவார்பூதமே ரு

## நாகக்களங்குசெந்தூரம்.

சூதமும்நாகமுஞ்சூழ்ந்தேயுருக்கையிற்
போதவுஞ்சாரப்பொடிதூவவசையாது
கோதவிரண்டுங்குமுறியுருகையில்
மாதையதங்கத்தைதமாட்டியபாதியே ருசூந

பாதிவையின்றப்பருவத்தில்வாங்கிநீ
கோதிமணியைக்குமுறப்பொடியாக்கி
நீதியாம்கெந்தகம்செட்டிப்பதிற்கூட்டி
ஆதியாம்வீரமதுகெட்டுக்கொன்றிடே ருசூச

ஒண்ணாகவஞ்சுமுறவாகக்குப்பியிற்
பண்ணுபடைத்துப்பதித்திடுவானுகை
தெண்ணனதீமூட்டுசிவந்தபதப்பாரு
கண்ணனசெந்தூரங்காட்டிப்பசும்பொன்னே ருசூரு

பொன்னனலோகத்திற்பூட்டுவாய்நூற்றுென்று
பணானனநாகம்பழுக்குஞ்சுகம்பாரு
எண்ணுதுரைக்கெல்லாமேற்றமிதுவ"கும்
வண்ணனிருவாணிவாசித்தபீடமே ருசூசூ

பீடமாய்நின்றபிலத்தமகாநாதம்
நாடவேவேண்டில்நலமாகப்பூசைசெய்
தேடவேவேண்டாஞ்சித்தியாமெட்டெட்டு
மாடவேநாகத்தினுண்மையினங்கேளே ருசூஎ

## சூதம்-நாகம்- அயத்தங்கச்செந்தூரம்.

கேளேயிந்நாகம்செடியாய்ப்பலமொன்று
வாளேயிரும்புவளமாப்பலமொன்று
தாளேநலத்தங்கம்தனையும்பலமொன்று
வளேநற்சூதமிடுமுப்பலமிதே ருசூஅ

பலமானவாறும் பருகியுருகையில்
தலமானகெந்தகசத்திினிலோர்பலம்
குலமாயுருக்கியேகொட்டிப்பொடியாக்கி
நலமாகசெட்டிப்புநாட்டததிற்கெந்தியே ருசூகூ

ன்கூடக்கேளிருபத்தொன்றும்
ந்தித்துக்குப்பியடைத்தேற்றுவாலுகை
பந்தித்தெரித்திடுபயிரவர்பூசைசெய்
கொந்தித்தசெந்தூரங்கொடியவருணனே ௫௭௰

அருணனுஞ்செந்தூரமாயிரத்தொன்றிட
வருணனைப்போலேவருடிக்குஞ்சொர்ணந்தான்
தருணத்தினர்பார்த்துச்சாணிக்கக்குண்ணிதான்
கருணைபாசத்திகாந்தியாந்தேகமே ௫௭௧

தேகத்தின்காந்திதான்சிறபாத்தொடொக்கும்
வாகொத்தபூரணம்வாவென்றேகூவு
மாகத்திறமலமண்டகிராகாரம்
பாகொத்தசித்தரேபாரிதினுண்மையே ௫௭௨

ஆண்மைதான்சொல்லவடங்காதநாகத்தை
வாண்மையாய்ப்பார்த்துமதிகுடிகண்டிலார்
நீண்மையாய்த்தாய்க்குநிலைத்தமண்காணாத
ஏண்மையேசித்தரேயிதற்கொன்றுமொவ்வாதே ௫௭௩

நாகச்செயநீர்.

ஒவ்வாதுநாகத்துதித்தவகைகேளு
செவ்வாகச்சுத்தித்தநாகம்பலமொன்று
சிவ்வானசூதத்தைச்செந்திரபாதிகாண்
நவ்வாய்ப்பொடிசெய்துநாட்டிடாய்கல்வமே ௫௭௪

கல்வப்பொடிமேலேகண்டவிடைவீரம்
வல்லொக்கத்தூவியேவைத்திடுமூலையில்
செல்வச்செயநீர்திரண்டோடுவெண்மையாய்ச்
சொல்லொத்தவேதைதுதிக்கநாவில்லையே ௫௭௫

நாவில்லாநீரின்பேர்நாகச்செயநீர்சாண்
காவில்லாக்காடிகாரத்தின்வேதைகேள்
தாவில்லாநீருக்குள்தானேதுவைத்ததை
மேவில்லாதங்கத்தகட்டுமேற்சுற்றிடே ௫௭௬

சுற்றியேதோய்த்துச்சுகமாகவாட்டினால்
பற்றியேயுள்ளுக்கும்பாரீரிதனுண்மை
அற்றிப்பரிதானதற்குநாற்கொண்டேற்றி
மற்றிமயிர்சுற்றிமாட்டிடாய்தீபமே ௫௭௭

காரடிகாரச்செந்தூரம்

தீபத்திலிவாட்டச்சிவப்பாகுமட்டுக்கும்
கோபத்தைவிட்டிடுகொட்டுமதுமச்சை
ஆபத்தைநீக்கிடவாத்தாளைப்பூசைசெய்
சோபர்த்தைநீக்கிடுஞ்சொர்னவருடமே ருஎ

வருடம்பொருந்திடுமாதாவைப்பூசித்தால்
அருழிபாங்காரமருணநிறமாகும்
பருசியாலோகதுநிற்பாய்ச்சிடுநூற்றொன்று
புருஷபக்காரம்போற்பொட்டிலேவாட்டிடே சூஎ௬

இணங்கன்செந்தூரம்.

வாட்டுமிணங்கன்வளமாய்ச்செந்தூரிக்கும்
ஓட்டுநவலோகத்தொருநூற்றில்வேதைதான்
காட்டும்தூரியமுங்கட்டினசாரமும்
நீட்டுமுன்தீபம்பிலேயாய்ச்செந்தூரியே ருஅ௰

துரிசிசாரம்—கல்லுப்புச்செந்தூரம்

செந்தூரமுன்போலேசெய்திடுகல்லுப்பை
பந்தூரமஞ்சுமேபாங்காகுஞ்செந்தூரம்
எந்தூரமோடுமெனக்கேட்கில்நூறோடும்
மந்தூரும்வேதையைக்காணீர்பெரியோரே ருஅக

நாககுரு.

பெரியோரேநாகம்பிலக்ஈக்குருபண்ண
பரியோமுன்னுகத்திற்பாய்ச்சிடச்சமன்தங்கம்
சரியேநற்சூகமும்காக்குவதுக்குள்ளே
வரியோடுகல்வத்தில்வைத்துப்பொடிசெய்யே ருஅ

பொடிக்குச்சமனுகப்பூட்டுசவ்வீரத்தை
பொடிக்குச்சமனுகப்பூட்டிடுவெண்கண்டாய்
பொடிக்குச்சமனுகப்பூட்டிடுஎருக்கன்பால்
பொடிக்குத்துவளப்பொலிவாயரைத்திடே ருஅ௩

அரைத்தேயுருட்டியடைவாகவேசுபோல்
தரைத்தேநல்வில்லேயாய்ச்சாரவுலர்த்திடு
புரத்தேநல்லண்டப்பொடிபோடுகீழ்மேலும்
தூத்தேபுடமொன்றுகுழக்குருவாமே ருசஅ

...ரணாத்தாண்டலாமாயமும்போக்கலாங்
கோணறுகூடுங்குறிக்கெய்தும்பானமே ௬௱௰௪

பாணத்தைவாங்கையிற்பாங்காய்வகாரத்தை
ஊணத்தைவிட்டுஉறிஞ்சியேபூசித்து
சிணைத்துநின்றசிகாரத்தையூதிட
வாணைத்துநின்றமனோன்மணிகாண்பளே ௬௱௰௫

காண்பாள்மனோன்மணிகண்டிடுபூரணம்
விண்பாழாய்நாளைவிட்டுமறவாதே
ஊண்பாகநித்தமெய்துமோவெண்ணாதே
பூண்பாகச்சொல்லுறேன்பொலிவாகச்சித்தியே ௬௱௰௬

சமாதிலேகியம்.

சித்தியாமூலிகைசேருபலமொன்று
ஒத்தியவண்டமுரப்பொடுமூன்றதில்
மத்தியபத்திரிவழங்கியசாதிக்காய்
அத்தியசீரகமதனில்கிராம்பிடே ௬௱௰௭

இட்டேகசகசாவியல்சாதிபத்திரி
மட்டானசாரப்பருப்புடனேழையும்
தட்டேயிடைதான்சரிதூக்குகால்பலம்
மட்டானவார்செய்யுறவார்த்தரைத்திடே ௬௱௰௮

அரைத்தோரேழுமதுமுன்னிரண்டையும்
விரைத்தாவின்பாலிலிணங்கவரைத்திடு
தரைத்தேகொதிக்கையில்சர்க்கரையீர்பலம்
நிரைத்தேகுழம்புக்குள்ளீட்டிமதுவாரே ௬௱௰௯

வாரேயுருட்டிடுவைத்துவைவஸ்துவால்
வாரேயுதயத்தில்வாசமெல்லாந்தீர்த்து
பாரேசமாதியிற்பாக்களவேயுண்டு
யாரேனும்பிறருவெல்லாம்புசித்திடே ௬௱௨௰

புசிக்குமுறையெல்லாம்பூரணிக்கேயென்று
மெசிக்குநற்றோடமுமிங்கிழைவாராது

மனக்கூறவாதேமகத்தானசிற்கவே
தசிக்கவேமந்திரந்தாக்காய்சமாதியே ௯

சமாதியையுன்னிடுதாயாளைப்பூசித்து
அமாதிக்கிரிகையாயாகத்தைச்செய்யாதே
சமாதிப்பொறிவழிகண்டுநீயோடாதே
புமாதிப்பொன்னுசைபூட்டாதேசொல்லாதே ௯௨௨

பொல்லாதவானந்தம்பூட்டிடுங்காலத்தில்
மல்லாடாதேவின்னுவார்த்தைகள்பேசாதே
கொல்லாதேயொன்றையுங்கூடாதேபெண்ணோடு
செல்லாதேதீயினிற்சேர்வாயகண்டமே ௯௨௩

அகண்டஞ்சிவமாச்சவாத்தாள்விளக்காச்சு
தகண்டவிரண்டுஞ்சமரசப்பூரணம்
உகண்டவுன்மணியுமூயசப்பதிதோன்றும்
சிகண்டியுந்தாண்டிடிற்சின்மயங்காணுமே ௯௨௪

காணுமேஞானங்கடுகப்பலித்திடுங்
காணுமேயோகங்கடுகப்பலித்திடுங்
காணுமேவாதங்கடுகப்பலித்திடுங்
காணுமேகாயங்கடுஞ்சித்திமுத்தியே ௯௨௫

முத்திக்கிதைவிட்டால்மூவுலகுக்கியாது
சித்திக்கிதைவிட்டால்தேடியுங்கிட்டாது
பத்திக்கிதைவிட்டால்யாத்துக்குவாழ்வல்ல
சத்தியவேதங்கடைசியிலுண்மையே ௯௨௬

உண்மையிதைவிட்டுளாவவுமொன்றில்லை
வண்மையாய்ப்பார்த்துமகிழ்ந்தார்பெரியோர்கள்
தண்மையாய்நாயேனுக்கப்படிசொன்னேன்
நன்மையாநந்திநாடிமுறைப்பாடே ௯௨

முறைபாடுகேளுமுதல்நூற்றுப்பனிரண்டு
முறைபாடலெல்லாவயித்தியம்நான்சொன்னேன்

நிறைபாடத்தாய்விடுநின்மலஞ்சித்தர்க்கு
அறைபாடுவைவந்தாற்றில்சூட்டுமுறைகேளே ௫௨௮

கேளேமுன்சித்திகெடக்கடைச்சோதனை
வாளேநற்கற்பமகத்தானமெய்ஞ்ஞானந்
தாளேகுளிகைகுமைக்திடச்செந்தூரம்
நாளேபரீக்குருநற்கட்டுமார்க்கமே ௫௨௯

மார்க்கந்நவணம்வழங்கும்புரியட்டம்
ஏர்க்கவேயண்டமெழிலாகவுற்பனம்
பார்க்கவேமேருவின்பட்டணந்தெய்வங்கள்
சேர்க்கமனோன்மணிசித்துள்ளுஞ்சொன்னேனே ௫௩௰

சொன்னேனேசாரணைசொர்ணரவிக்குரு
சொன்னேனேசாரகாரத்தின்சூட்சந்தை
சொன்னேனேயாத்தாளைச்சுகமாசப்பூசிக்க
சொன்னேனேயாத்தாள்சூழ்பூசைமார்க்கமே ௫௩௧

மார்க்கமாய்ச்சக்காம்வழங்கியவட்சாம்
மார்க்கமாய்வாசியைவைக்கமுறைப்பாடு
மார்க்கமாய்மூக்கில்மனோன்மணிமெய்ஞ்ஞானம்
மார்க்கம்பிடரிமகததானயோகமே ௫௩௨

யோகமாய்மூலத்துதிக்கின்றவெண்ணந்தி
பாகமாய்நெஞ்சிற்பகிர்ந்தாவியோகமாம்
பாகமாய்நின்றவசனைபவெண்ணுங்குந்
தாகமாய்முப்பாழுந்தப்பாமல்சொன்னேனே ௫௩௩

சொன்னேனேயைந்நூறுசூட்டுமுன்னாயிரம்
பன்னப்பலந்தான்பகருறேன்வல்லோரே
சின்னஞ்சிறுபிள்ளைசேர்ந்தநூறெஞ்ஞான்றும்
ன்னுஞ்சிவஞானவாசிக்குள்வாழ்வரே ௫௩௪